CANADA

முகவரி
MUHAVARY

மாதாந்த சஞ்சிகை
எண்: 6 பாதை: 1
ஜனவரி '15



ஜெயிக்கப்போவது யாரு?

26/12
சுனாமி நினைவுகள், ஒரு தசாப்தம்.



Dr. Baheerathan Thurairajah
Dr. Shanmugam Sivanesan
Dentists
Save Your Smile!
சகல பல்வைத்திய சேவைகளுக்கும்
For all your dental needs
Including braces
416.291.1085
HEALTHY SMILE - FOREVER
3852 Finch Ave. E. Suite 207 & 208, Scarborough, ON M1T 3T9.
(Kennedy & Finch)


Now Serving at New Location
Medical Clinic
Dr. Francia Geetha Jayarajah MD,CCFP.
(Family Practice)
Branch Hours:
Mon : 10:00 - 7:00
Tue : closed
Wed : 9:00 - 3:00
Thu : 9:00 - 7:00
Fri : 9:00 - 12:00
Sat : 9:00 - 2:00
Sun : 9:00 - 2:00
14-2901 Markham Road
TOronto, ON
M1X 0B6
Tel:- (647) 350-5544
Fex:- (647) 350-5545



JAI SAI FLORIST
@ GTA Square
Available for Wedding, Pooja and other Occasions
Wedding Flower, Wedding Bouquet, Funeral Wreaths
Casket Adornment, Casket Spray, Standing Sprays
கனடாவில் மதுரை மல்லி கிடைக்கும் ஒரே இடம்
www.jaisaiflorist.com
416-396-9888/ 416-505-1252/ 647-707-0369
5215 Fish Ave East. # 123 GTA Square, Scarborough, ON


For your life Insurance, RESP, Critical Illness
& Super Visa Coverage
Vany Jeganmohan
Insurance Advisor
416.670.7436
vany@megafinancial.ca
Mega Financial Group
RBC Insurance
Canada Life
Desjardins
www.vanyfinancial.ca


TEL: (647) 706-8231
@ GTA Square
NATHAN TRADERS
பூசைப் பொருட்கள்
சுவாமிப் படங்கள் மற்றும்
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
Textiles, Fancy, Utensils, ect...
5215 Finch Ave East. UNIT #:156 Scarborough, ON, M1S 0C2


Yoga Health Center
@ GTA Square
RAJI
Yoga Instructor / Yoga Therapist
Yoga
5215 Finch Ave East
Toronto, ON M1S 0C2
UNIT 207
(416)-780-7699
chandraleka28@gmail.com


சென்னையில்......
☎ 24512276
Cell: 9841094150
VIMALAN TRAVELS
CAR QUALIS OPERATORS
H-53/F3, 57th Steet,
Marutham Apartment,
Thiruvalluvar Nagar, Thiruvanmiyur,
Chennai - 600 041.
N. GANESAN
Proprietor


INEEKA JEWELLERY & GIFTS
@ GTA Square
இனிகா ஜுவல்லரி & கிவ்ற்
நகைத் திருத்த வேலைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும்,
பழைய நகைகளிற்கு அதிக விலையினைப் பெற்றிடவும்
5215 Finch Ave E. UNIT #111
Scarborough, ON, M1S 0C2
BUS: 416-293-0440
CELL: 647-924-5153

இவ்விதழின் அதிதி எழுத்தாளர்: ரவீந்திரன் பொன்னுத்துரை



முகவரியில் குடிகொண்டவை....



11



32



20




14



பொங்கல் வாழ்த்துக்கள்

மிக விரைவில் எதிர்பாருங்கள் முகவரி ரீவி



ஒரே கூரையின் கீழ்
புதிய பொலிவுடன்
MJS
GOLD HOUSE
உங்கள் அனைத்து தங்க நகைகளையும்
நம்பிக்கை, உத்தரவாதத்துடன்,
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
துரித பணமாற்று
சேவை
M.J.S. MONEY TRANSFER & FASHION
Fancy Sarees | Lehenga Suits | Ladies Suits | Artificial Jewelleries
Wedding Sarees | Punjabis | Men Suits | Shirts | Gift Items
உங்கள் அனைத்து கொண்டாட்டங்களுக்கும் உகந்த உயர்தர
பட்டுப் புடவைகள், மற்றும் நவ நாகரிக ஆடை தெரிவுகள் பல
5215 Finch Ave, East, Unit #113, Scarborough, ON M1S0C2
Tel : 416-299-1630 | Fax : 416-335-4200

முகவரி
Editor in Chief
Kalasoori A. Sivanesaselvan MA, MSc.

Contact
5215, Finch Ave. E., Unit 263,
GTA Square,
Toronto, Ontario.
M1S 0C2
Canada.

e-mail: info@muhavary.com
phone: (+1) 416 628 6214
fax: (+1) 416 619 0335
web: muhavary.com

நன்றி வரிகள்...

காலத்தில் செய்த உதவி

'முகவரி'யின் வரவையிட்டு, மகிழ்வுற்று, அது நின்று நிலைக்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய, வழங்க முன்வந்த அனைத்து வாசகர்கள், அபிமானிகள், நண்பர்கள், ஊடகங்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

முகவரி தடுமாறும் தலைமைகள்

"நீங்களே உங்களது தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்" என்று கூறுமளவுக்குச் சென்று விட்டன ஈழத் தமிழரின் அரசியல் தலைமைகள். இந்தத் தலைப்பு தீட்டப்படும்வரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஈழத் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கோ அந்தத் தீர்மானத்தை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கோ திறனற்றும் திராணியற்றும் திணறிக்கொண்டிருக்கிறது தமிழர் தலைமை என்று தம்மைப் பீற்றிக்கொள்ளும் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்.


அரசியல் கட்சியொன்றின் பணிகளில் முதன்மையானது, தான் சார்ந்த மக்களை அரசியல் பாதையில் வழிநடத்திச் செல்லுதல். பல தசாப்தகாலப் போராட்டத்தில் அனைத்துப் பரிமாணங்களிலும் சிதைவுற்று அல்லலுற்று நிற்கின்ற ஈழத் தமிழ்ச் சமூகம் வேண்டி நிற்கின்ற அதன் அரசியல் தலைமையின் பணி அளப்பரியது. அந்தப் பணியை ஆற்றுவதற்கான தகுதியையிழந்து தட்டுத் தடுமாறி நிற்கிறது இந்தத் தலைமை. "தகுதி" என்பது மூன்று அம்சங்களின் தொகுப்பு: வசதி–வாய்ப்பு, விருப்பு, ஆற்றல் என்பன அவை. ஈழத் தமிழரின் அரசியல் அபிலாஷைகளை சிரமேற்கொண்டு அரசியல் இலக்கு ஒன்றை நிர்ணயித்து, அந்த இலக்கை நோக்கி ஈழத் தமிழ் சமூகத்தை வழிநடாத்திச் செல்லும் வசதி, விருப்பு மற்றும் ஆற்றல் என்பன இந்த அரசியல் தலைமைகளுக்கு உண்டா? இதுதான் இன்றைய கேள்வி.

சர்வதேச சூழலிலோ அல்லது உள்ளூர் அரியல் சூழலிலோ இருக்கக்கூடிய வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்கிற விருப்பும் ஆற்றலும் இந்த "அரசியல்" தலைமைகளிடம் கிஞ்சித்தேனும் காணப்படுகிறதா? இல்லவே இல்லை. இந்தத் தலைமைகளது கோட்பாடற்ற வடித்தெடுத்த சுயநல அரசியல் ஈழத் தமிழர்களை முற்று முழுதான கையறு நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் முற்கூட்டியே நடாத்தப்படக்கூடும் என்பதை இவர்களால் அநுமானிக்க முடியவில்லை. தேர்தல் அறிவித்தபின்னர், நீண்டகாலமாகியும் இன்றுவரை இவர்களால் தமிழ்மக்கள் என்ன காரணத்துக்காக என்ன நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்று எடுத்துரைக்க முடியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலென்பது வெறுமனே வேடிக்கை பார்த்திருக்கும் ஒன்றல்ல. இங்கு ஏற்படப்போகும் மாற்றம் நிச்சயம் பாதிக்கப்போவது தமிழ்ப் பேசும் மக்களின் தலைவிதியைத்தான். ஆட்சி மாறாவிட்டாலும் இருக்கும் நிலமை மாறப்போவதில்லை. அத்தோடு அதன்பின் மாற்றக்கூடிய சந்தர்ப்பம் இல்லாது கதவடைக்கப்பட்டும் போகலாம். ஆட்சி மாறினாலோ, அது இலங்கையின் அரசியல் ஒழுங்கமைப்பிலே மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகவும், பாராளுமன்ற அதிகாரத்தை உறுதிப்படுத்துவதாயும் ஆகலாம். ஆனால் பாராளுமன்றத்துச் சிறுபான்மையை வைத்து நாம் எதைச் சாதிக்க முடியும் என்ற கேள்வி இங்கு எழும். எனவே இத்தகைய மாற்றத்துக்கான போக்கில் தமிழ் மக்களின் நலன்களை உறுதி செய்யும் அவசியம் தலைமைகளுக்கு மிகவும் முக்கிய பணி. ஆனால் ஏதோ திரைப்படத்தைப் பார்த்திருக்கும் பார்வையாளர்கள்போல எம் தலைமைகள் வாளாவிருப்பதும் நாம் முனைந்து எமது நலன்களை உறுதிப்படுத்துவதற்குப் பதில், அவர்கள் தருவதையோ தராதிருப்பதையோ விமர்சித்திருப்பதே எமது வேலையென எண்ணியிருப்பதும் விசனம் தருகிறது. ஆனால் இவர்களோ, தனித்தனியாக ஆளாளுக்கு வேறுபட்ட கருத்துக்களைக் கொட்டி குளம்பிய நிலைமையையே ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், காசு வாங்கிவிட்டதாகவும், பக்கம் தாவிவிட்டதாகவும் தமக்குள்ளேயே குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மிகுந்த இழிவு நிலைக்குத் தம்மைத் தரம் தாழ்த்திச் செல்கின்றனர். எனவேதான், நாதியற்றிருக்கும் எமது இனத்தின் தலைவிதியைத் தீர்மானிப்பதற்கான, தேர்தல்கள் ஆசனங்கள் என்பவற்றை மட்டுமே குறியாய்க் கொண்ட தலைமைப் பித்து அற்ற, புதிய சிந்தனையுடன் கூடிய, கொள்கைகள் வகுத்து, மக்கள் இயக்கங்களை வழிநடத்தக்கூடிய, புதிய தலைமை தேவையாயிருக்கிறது.

இதேவேளை, கிறிஸ்மஸ் பண்டிகை, புத்தாண்டுப் பண்டிகைகள் என்பவற்றை ஆனந்தத்துடன் கழிக்கும் உங்களுக்கு முகவரி தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. மலரவுள்ள புதிய ஆண்டு, நல்ல எதிர்காலத்தை உங்களுக்கு வழங்கட்டும்!

ஆசிரியர்.



ஜனாதிபதித் தேர்தல்

சுற்றியடிக்கும் சூறைக்காற்று!

திடுதிடுப்பென வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது ஜனாதிபதித் தேர்தல். எதிர்க்கட்சிகள், ஒருமாத அவகாசத்தில் இத்தனை பெரிய தேர்தலை, இலங்கையின் அதி உச்ச அரசியல்பீடத்துக்கான தேர்தலை, அவசர அவசரமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இது ஒன்றும் சட்டென வைக்கப்பட்ட தேர்தலல்ல. நன்கு திட்டமிட்டு, மிகுந்த கணிப்புகள் செய்து, ஜனாதிபதிக்கான ஆட்சிக்காலம் முடிவடைய இன்றும் ஒருவருடத்துக்கு மேலிருக்கும் காலத்தையும் புறந்தள்ளி வைக்கப்படுகிறது. ஏன் என்பதை முகவரி தன் முன்னய இதழ்களில் தெளிவாக எடுத்து விளக்கியிருந்தது.

மகிந்தவின் வியூகம்

சுருங்கச் சொன்னால், 2015ல் பாராளுமன்றத் தேர்தல் நிகழ வேண்டும். அப்படி நிகழ்ந்து, ஆட்சி கைமாற நேர்ந்தால் அல்லது ஆசனங்கள் குறைவடைந்தால் ஜனாதிபதி பாராளுமன்றப் பலத்தை தேர்தலுக்காகப் பயன்படுத்த முடியாது. மேலும், யுத்த வெற்றியில் நிலையூன்றியிருக்கும் ஜனாதிபதிக்கான செல்வாக்கு, காலம் கடக்க, பிரச்சினைகள் வலுக்க, குறைவடைந்து செல்கின்றமையால் பிந்தும் ஒவ்வொரு நாளும் வெற்றிவாய்ப்பைக் குறைத்துச் செல்லும் என்ற பீதி. யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் எழுந்துள்ள விசாரணை அச்சுறுத்தல்களுக்குள் வீழ்ந்துவிடாதிருக்க ஜனாதிபதிப் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆதங்கம். இவற்றால் விளைந்தது இத் திடீர் தேர்தல்.

சாணக்கியா

தனக்கு எதிராகப் போட்டியிடக்கூடியவர்கள், ரணில், அல்லது யுஎன்பியிலிருக்கும் யாரும் ஒருவர் என்றால், அவர்கள் யாரும் செல்வாக்கற்றிருப்பதால் தனக்கு ஆபத்தானவர்களல்ல என்று கணித்திருந்தார் ஜனாதிபதி மகிந்த. ஒருவேளை சரத் பொன்சேகாவை மீண்டும் நிறுத்துவதானால் அவருக்கு ஏற்கெனவே குடியுரிமை பறிக்கப்பட்டுவிட்டது. அத்தோடு அவர் முன்னர் மகிந்தவை எதிர்த்துப்



போட்டியிட்டு மண் கௌவியவர். ஆனால் சந்திரிகா ஒருவேளை மறுபடி போட்டியிட்டால் சொஞ்சம் சிக்கலாகிவிடலாம் என்று எண்ணினர். அதனால், தான் மூன்றாம் தடவை போட்டியிடலாமா என சுப்பிரீம் கோர்ட்டைக் கேட்டு "ஆம்" என்ற பதிலைப் பெற்றுக் கொண்டதோடு, சந்திரிகா போட்டியிட முடியா தென்றும் சேர்ந்தே ஒரு பதிலைப் பெற்று வைத்துக்கொண்டார். இப்போது அவருக்குப் போட்டி இல்லை என்ற நிலமையே தெரிந்தது. அதனால் அவர் தனது தேர்தல் திட்டத்தை உற்சாகத்தோடு முன்னெடுத்தார்.

சந்திரிகாவின் சாணக்கியம்

ஆனால் சந்திரிகாவின் சாணக்கியம் அவர் எதிர்பார்க்காத ஒன்றாயிருந்தது. அவரது அமைச்சில் விவசாய அமைச்சராக இருந்த, அவர் தலைமையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராகச் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேன திடீரெனத் தனக்கு எதிரான ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று அவர் எதிர்பார்த்திருக்கவே இல்லை. இதில் கேள்வி என்னவென்றால், தன்னை அறியாமல் ஒரு அணுவும் அசையாது என்ற பெரு நம்பிக்கையில் இருந்த ஜனாதிபதிக்கு, யுத்தத்தின்பின் புலிகளின் ஊடுருவலை முறியடிப்பதாகக்கூறி மூலை முடுக்கெல்லாம் வலைப்பின்னல் போட்டு அவரது பெரு நம்பிக்கைக்குரிய தம்பி, கோத்தபாயவால் அமைக் கப்பட்ட சக்திவாய்ந்த இன்டலிஜென்ட் (உளவுத்துறை) இரவு பகலாய்ச் செயற்பட்டுக் கொண்டிருந்தபோதும், ஒரு சிறு சிலமனும் தெரியாதவாறு இப்படி அவரது முகாமுக்குள்ளேயே ஊடுருவி, காதும் காதும் வைத்ததுபோல் ஒரு வேட்பாளரை ஏற்படுத்த எப்படி முடிந்தது என்பதே. இந்தக் கேள்வி, இரும்புக் கோட்டையென அவர் காட்டிவந்த அவரது முகாமில் அவரது வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் பல ஓட்டைகள் இருப்பதை எடுத்துக்காட்டி, அவரது வெற்றிபற்றிய கனவைக் கலங்க வைக்கிறது.

உடைப்பால் ஏற்பட்ட பலவீனம்

உறுதியான அரசாங்கம் என்பது வெறும் பெயருக்குத்தான் என்பதுபோலவும், அதிருப்தியாளர்கள் சந்தர்ப்பமின்மையால் வெளிக்காட்டாமல் முடங்கிக் கிடக்கிறார்கள் என்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது. அத்தோடு, இந்த உடைப்பு மேலும் விரிந்து, பாராளுமன்றத்தில் அவர் பக்கமிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை வீட்சியடைந்துவிட்டது. பாராளுமன்றம்கலைக்கப்படாத நிலையில், அரசாங்கத்தரப்பைச் சார்ந்தவர்கள் தம் சௌபாக்கியங்களை உதறிவிட்டு மறுபக்கம் சார்வதானால், மறுதரப்பின் வெற்றிவாய்ப்புக்கான அறிகுறி இருந்தால்தான் அதற்கு முன்வருவர். இல்லையேல் தம் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியவர்களாகிவிடுவர். இந்த அச்சமே, பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியினர் மறுபக்கம் செல்வதை தடுத்துக்கொண்டிருப்பதால், நீறுபூத்த நெருப்பாய் அதிருப்தியுடன் இருக்கும் ஆளும் தரப்பினர் யார் யார், எத்தனை பேர் என்பது வெளிப்படையாகத் தெரியப்போவதில்லை. அதனால் தற்போதய பாராளுமன்ற நிலமையை உண்மை நிலையெனவும் எடுத்துக்கொள்ள முடியாது. மேலும் ஆளும் கட்சிப் பிரச்சாரத்தைப் பார்த்தால், அமைச்சர்களிலேயே, அப் பிரச்சாரங்களில் முனைப்பாய் முன்னிற்பவர்கள் ஒருசிலராக மட்டுமே இருப்பதும், பலர் ஏனோதானோ வென்றிருப்பதும் அந்த ஐயத்தை மேலும் பெருக்குகிறது. இதற்கிடையில் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவும் மைத்திரியின் பக்கத்துக்கு மாறிச் சென்றுள்ளது இதற்கான அறிகுறியை வலுப்படுத்து கிறது.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலில் மக்களே நேரடியாக வாக்களிப்பதால், மக்களின் உட்கிடையான விருப்பங்களே முக்கிய பங்கு வகிக்குமேயன்றி, பாராளுமன்றத்தில் யார்பக்கம் அதிகமுள்ளது என்ற எண்ணிக்கை மக்களின் வாக்களிக்கும் விகிதத்தைப் பிரதிபலிப்பதாக அமையாது.

அறியாக் கணியம்



இப்படி மைத்திரியை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தியதானது, தற்போதய ஜனாதிபதிக்கு எதிரியின் பலத்தைக் கணிக்க முடியாத ஒரு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் மைத்திரியின் வாக்குக் களமும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் களமே. மைத்திரிபால சிறிசேன மீது எந்த ஊழல் முறைப்பாடும் இல்லை. அவரது பின்னணியும் தந்தையான மைத்திரிபால சேனநாயக்காவின் செல்வாக்கைக் கொண்ட பரந்த விவசாய சமூகத்தைச் சார்ந்தது. அவரை வெறுமனே யுஎன்பி அடையாளப்படுத்த முடியாது, மக்களும் அவ்வாறு பார்க்கப் போவதில்லை.

இதனால் தனது வாக்குக் களத்திலிருந்து எவ்வளவு பங்கு மைத்திரியின் பக்கம் நகரப்போகிறது என்பது ஒரு அறியாக் கணியமாகவே அவருக்கு உள்ளது. அதுவே அவருக்கு மலைப்பையும் கிலியையும் ஏற்படுத்த வைக்கிறது. ஏனெனில் மைத்திரிக்கு ஏற்கெனவே உறுதிப்படுத்தப்பட்ட யுஎன்பியின் வாக்குகளும் உள்ளன. எந்த ஒரு மோசமான நிலைமையிலும் யுஎன்பி விழுந்த வாக்குகளில் 30-35 வீத வாக்குகளைப் பெற்றே வந்திருக்கிறது. அவற்றைவிட சிறுபான்மையினரின் வாக்குகள் 20வீதம் உள்ளது.

முஸ்லிம் தரப்பு

முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அண்மைய சம்பவங்களும், அதன் மூலகர்த்தாவான பொதுபல சேனயினர் ஜனாதிபதி ராஜபக்ஷவை ஆதரிப்பதும், என்னதான் முஸ்லிம் அமைச்சர்கள் அரசாங்கத்தின் பக்கமிருப்பதாகக் காட்டினாலும் முஸ்லிம் மக்களை அதிருப்தியடையவே வைத்திருக்கிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை, ஹலால் உணவு முக்கியம். அவர்களுக்குப் பள்ளிவாசல் முக்கியம். பெண்கள் பர்தார் அணியும் கலாசாரம் முக்கியம். பிரதான தொழிலான வியாபாரம் முக்கியம். இவை யாவற்றுக்கும் பொதுபல சேன பலத்த சவால்விடுவதுடன் அரச ஆதரவுடன் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதும் பெருத்த கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிருப்தியின் வெளிப்பாடு, முஸ்லிம் காங்கிரஸ் இத்தனை நிர்ப்பந்தத்துக்கு மத்தியிலும் முடிவொன்றைத் தெரிவிக்க முடியாதிருப்பதில் தொனிக்கிறது. இறுதிக்கட்டத்தில் அவர்கள் ராஜபக்ஷ

தரப்புக்கு ஏமாற்றமளிக்கவும் கூடும். இதேவேளை யுஎன்பி தனது கட்சி செயலாளரென்ற பிரதான பதவியில் ஹபீர் காசிம் என்ற முஸ்லிமை நியமித்திருப்பது முஸ்லிம்களின் நன்மதிப்பைப் பெறும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ் தரப்பு

இதேபோல் தமிழ் தலைமைகளும் கடைசி நாட்களில்தான் முடிவு தெரிவிக்கப்போவதாக இழுத்தடித்தாலும், யுத்தகால, யுத்தப் பிற்கால அனுபவங்கள், மாகாணசபையை இயக்குவதில் மேற்கொள்ளப்பட்ட முட்டுக்கட்டைகள், வெளிப்படையாக "வைக்கற் பட்டறை நாய்கள்" என மாகாணசபையை விமர்சித்தமைபோன்ற பல வெளிப்பாடுகளின் மனத்தாங்கல்களுடன் தமிழ் மக்களுக்கும் அதிருப்தியால் நிறைந்துபோயிருக்கிறார்கள். தமிழ்த் தலைமைகள் எத்தகைய முடிவெடுத்தாலும் தமிழ் மக்கள் ஒருவகை முடிவுடனேயே செயற்படும் நிலைமை தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவுக்கு எதிராக யுத்தத்தை முன்னின்று நடத்திய சரத் பொன்சேகாவுக்கே ஆதரவு தெரிவிக்கும்படி தமிழ் மக்களை தமிழ்த் தலைமைகள் கூற முடியுமாயிருந்தால் இம்முறை, அதற்குத் தலைகீழாக ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கக் கோருவதில் பெரும் சங்கடம் அதற்கு உள்ளது.

மலையகத் தமிழர் தரப்பு

மலையகத் தமிழரைப் பொறுத்தவரை ஆறுமுகம் தொண்டமான் அமைச்சராயிருப்பதால் தவிர்க்க முடியாமல் ஜனாதிபதியை ஆதரிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அவரோ, அவரது தந்தை தொண்டமானோ, எப்போதும் அதிகாரத்திலுள்ளவர்களின் ஆட்சியில் சேர்ந்துகொள்ளும் உபாயத்தையே கடைப்பிடித்து வந்தவர்கள். ஆட்சி எப்பக்கம் சரியும் என்ற நிட்சயமில்லா நிலையில் ஒருபக்கத்தைச் சார்ந்து நிற்கவேண்டியிருந்தாலும் அதற்காக கடுமையாக வேலை செய்ய மாட்டார்கள். மலையக மக்களிடம் யுஎன்பியின் செல்வாக்கு அதிகமிருந்தது. அண்மைய ஊவா மாகாணத் தேர்தல் முடிவுகளில் அரசாங்கத் தரப்பு சொற்ற வித்தியாசங்களாலேயே வெல்லும் நிலை ஏற்பட்டதானது அதற்கு அங்கு ஏற்பட்டுள்ள சரிவைக் காட்டுகிறது.

எனவே தமிழ் முஸ்லிம் சிறுபான்மையினரைப் பொறுத்தவரை அவர்கள் வசமிருக்கும் 20 வீத வாக்கில் குறைந்தது 12 வீதமாவது ராஜபக்கஷவுக்கு எதிராகத் திரும்பினால், அவருக்கான வெற்றி வாய்ப்பின் நிலை கேள்விக்குரியதாகிவிடும்.

கூத்துமதிப்புக் கணிப்பு

ஏனெனில் ஏற்கெனவேயுள்ள யுஎன்பியின் 30 முதல் 35 வீதத்துடன் இப் 12 வீதமும் சேர்ந்து 42 முதல் 47வீதமாகிவிட்டால், 50 வீத வாக்குகளைப்பெற்று மைத்திரி வெல்ல 8 முதல் 3 வீதமே தேவை என்றாகிவிடும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயலாளரான அவருக்கு, முன்னாள் ஜனாதிபதியும், அக் கட்சியின் முன்னாள் தலைவியும், பண்டாரநாயக்கா பரம்பரையைச் சேர்ந்தவருமான சந்திரிகாவின் பலத்த துணையோடு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாக்குகளிலிருந்து அந்த 8வீதம்முதல் 3 வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்வது பெருங் கடினமல்ல. இப்படியான ஒரு மாற்று வியூகம் எதிர்பாராதவாறு அமைந்துவிட்டதே தற்போது மகிந்தவுக்கு உள்ள சவாலாகும்.

சிங்களத் தரப்பு

இந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களைவிட சிங்கள மக்களின் மனநிலை என்ன என்பதை வெறும் யுத்த வெற்றிக்கான ஆதரவு என்பது மட்டும் நிர்ணயிப்பதாகத் தற்போது இல்லை. அதன்பின் நிறைய மாறுதல்கள். நாட்டில் பத்திரிகை உரிமை, ஜனநாயக உரிமை, தொழிலாளர் உரிமை, மனித உரிமைகள் பற்றிய கேள்விகள் எழுந்துவிட்டன. பாதுகாப்புத் துறையின் கரங்கள் எல்லா இடங்களுக்கும் நீளுகின்றன. நீதித்துறை அடிபணிந்துபோயுள்ளது. முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா பதவிநீக்கம் செய்யப்பட்ட முறை அதிர்ச்சி தந்தது. நீதித்துறையைக்கொண்டு 3ம் தடவை ஜனாதிபதிக்குப் போட்டியிட அனுமதி பெற்று, அதே அனுமதியில் சந்திரிகா போட்டியிருவதற்கான அனுமதி மறுக்கப்பட்டது விந்தையாக இருந்தது. சிவில் சமுதாயம் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறது. அதன் வாழ்வாதாரம் கூடவேண்டிய தேவை இருக்கிறது. குடும்ப ஆட்சி, ஊழல், லஞ்சம், ஆட்சியுரிமையில் பகிர்வு இல்லாத மையப்படுத்தப்பட்ட நிலமை என்பன சிவில் சமுதாயத்தின் பலத்தை துகர்ந்துபோகச் செய்துள்ளன. யுத்த வெற்றிபற்றிய பிரஸ்தாபங்கள் இந் நிலமைக்குப் பதிலளிக்கக் கூடியவையாக இல்லை. இந் நிலையில் ஒரு பலம்வாய்ந்த போட்டியாளராக மற்றொருவரை முன்னிறுத்தும்போது, சிங்கள மக்களின் வாக்குக்கள் மாற்றத்துக்கு ஆதரவாக விழுவதற்கு வாய்ப்புள்ளது.

சர்வதேசம்

இதைவிட வெளிநாட்டு சக்திகளின் பார்வையும் மாற்றத்தை விரும்புவதாக அமையவே வாய்ப்பு அதிகம். மேலை நாடுகள் ஏற்கெனவே இலங்கையில் சீனாவின் செல்வாக்கு குறித்து அதிருப்தி கொண்டிருக்கின்றன. அத்தோடு மனித உரிமைகள், யுத்தக் குற்ற விசாரணைகள் குறித்த பல கோரிக்கைகளையும் ராஜபக்ச அரசு நிராகரித்தே வந்தமையும் அவற்றுக்கு அதிருப்திகளை ஏற்படுத்தியிருந்தது. அவற்றுக்கு யுன்பி அரசாங்கம் இயல்பாகவே தோதானதாக இருந்து வந்துள்ளது. யுஎன்பி மைத்திரியை ஆதரிக்கும் நிலையில் மேற்குலகு அது சார்ந்த மனநிலையையே கொண்டிருப்பதுடன், பல மறைமுக ஆதரவுச் செயற்பாடுகளையும்கூடச் செய்யலாம். மைத்திரிக்கு பக்கபலமாக நிற்கும் சந்திரிகாவும் மேற்குலகின் வேண்டுகோள்களைச் செவிமடுத்தே செயற்பட்டு வந்தார்.

இந்தியா இங்கு மிகப்பெரிய காரணி. அதனால் அரசியல் ரீதியாகவும் இலங்கைத் தேர்தலில் செல்வாக்குச் செலுத்த வாய்ப்புள்ளது. சீனாவின் பிரசன்னம் ஏற்கெனவே இந்தியாவுக்கு பிடிக்கவில்லை. தமிழ்நாட்டின் அழுத்தமும் தற்போதய இலங்கை அரசை மாற்றும்படியாகவே இந்தியாவை வலியுறுத்தி நிற்கும். இந்தியாவின் கை நிட்சயம் இத் தேர்தலில் மறைமுக வேலைகளைச் செய்யும்.

இந்நிலையில் வெளிநாட்டு சக்திகளில் மகிந்தவுக்கு சாதகமாக, சீனா, ஒருவேளை ரஷ்யா போன்ற நாடுகளே இருக்கலாம். அவற்றால் பொருளாதார செயற்பாடுகளில் கைகொடுக்க முடியுமேயன்றி அரசியல் மாற்றங்களில் கைகொடுக்க முடியாது. அதாவது அவற்றுக்கு "றெஜீம் சேஞ்ச்" எதையும் ஏற்படுத்தவோ தடுக்கவோ முடியாது. அப்படிச் செய்வதானால் இராணுவ ரீதியில் தான் செய்ய வேண்டும்.

இலங்கை (பாகிஸ்தான், பங்களாதேஷ் போல) இராணுவ ரீதியான ஆட்சி மாற்றங்களுக்கு ஒருபோதும் உள்ளான நாடல்ல. மக்கள் அதற்கு மாறான மனநிலை கொண்டவர்கள். அப்படியான இராணுவ ஆட்சியை கொண்டுவருவதாயிருந்தால் யுத்தத்தை முன்னின்று நடத்திய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே கொண்டுவந்திருக்கலாம். அவரலேயே அதை சிந்திக்க முடியாது போன நிலையில் தற்போது அதுகுறித்து சிந்திப்பதற்கு யாராலும் முடியாது.

சாத்திய அசாத்தியங்கள்

இத்தகைய ஆட்சிமாற்றத்துக்கான சாத்தியப்பாடுகள் கணிப்பீடுகள் என்பனவெல்லாம் பலிப்பதென்பது சாதாரணமாக நடந்துவிடக்கூடியதுமல்ல. புள்ளிவிபரங்கள் இறுதிநேர உணர்ச்சிகர அலையில் ஊதித்தள்ளப்பட்டுவிடக்கூடியவை. ஆட்சி மாற்றத்துக்கு மறுதரப்பின் செயற்பாடுகள் காத்திரமாக அமைவதும் முக்கிய தேவை. இப்போதும் வெற்றிக் கடிவாளத்தின் பிடி ஜனாதிபதியின் கையிலேயே உள்ளது. அவர் ஜனாதிபதி என்பதும், அரசாங்கம் அவரின்கீழ் உள்ளதும், அதன் அனைத்து செயற்பாடும் அவரை வெல்லவைக்கவே முடுக்கிவிடப்படும். அண்மைக்காலத்தில் நிகழ்ந்த அபிவிருத்திகளையும் அவர் உரிமைகோரும்போது, எதிர்க்கட்சிகள் வசம் குறை சொல்வதைத் தவிர செய்ததாக எடுத்துக்காட்ட எதுவும் இல்லை. யுத்த வெற்றி பற்றிய பெருமைகளை திரும்பத் திரும்ப ஊதி அந்த உணர்வலைகளைக் கிளறக்கூடிய அரச ஊடகங்கள் யாவும் அவரிடம் உள்ளன. இனவாத அலையைத் தோற்றுவித்து, தன்னை சிங்களத்தின் தூணாகவும் எதிரணையை சிறுபான்மையினர் கோரிக்கைகளுக்கு அடிபணிந்துவிடுவார்களெனவும் சித்திரிக்க முயலலாம். இதேவேளை எதிரணியின் அரசியல் கோஷமும் கேள்விக்குரியதாக இருக்கிறது. 100 நாட்களில் ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்ற அவர்களது கோஷம் நடக்கக்கூடிய காரியமா என்ற கேள்வியுடன் தொக்கி நிற்கிறது. ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டுமாயின் பாராளுமன்றத் தேர்தல் நிகழ்த்தி அதில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறவேண்டியது அவசியம். அவையாவும் நிகழ்வது என்பது இவர்கள் கையில் இல்லை. அத்தோடு சிறுபான்மையினருக்கும் இனப்பிரச்சினைக்கும் பாராளுமன்றம் தீர்வுதர வழியுண்டா என்பது கேள்வியாகவுள்ளது.

தமிழ்த் தலைமைகள் பங்கு

இத் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது யார் என்பதே போட்டித் தரப்புகளின் நோக்கமாக இருந்தாலும் இங்கு இலட்சியங்களை ஏந்திய எதிர்பார்ப்புகளுடன் நிற்கின்ற தரப்பு தமிழ்த் தரப்பாகவே இருக்கின்றது. தேர்தலில் வெற்றி தோல்வி யார்பக்கமாக இருந்தாலும் தமிழ் தலைமைகளுக்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் நிட்சயம் சில கோரிக்கைகள் உள்ளன.

இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டிருக்கும் காணிகளைத் திருப்பியளிக்க வேண்டும்

மாகாண சபையின் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப் படவும் செயற்படுத்தப்படவும் வேண்டும்

ஆளுநர் முன்னாள் இராணுவ அதிகாரியாகவன்றி சிறுபான்மை இனத்தவராக மாற்றப்படவேண்டும்

காணாமற்போனவர்கள் தொடர்பாக நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

யுத்தக் கைதிகள் பொதுமன்னிப்பளிக்கப்பட்டு விடுவிக்க ப்பட வேண்டும்

யுத்தக்குற்றங்கள் தொடர்பான ஆணைக்குழுக்களின் சிபாரிசுகள் அமுல்படுத்தப்படவேண்டும்.

ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட்டால் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினருக்கான பாதுகாப்புச் சரத்துக்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். (சிறுபான்மையின பிரதிப் பிரதமர் பதவி போன்றவற்றையும் கோரலாம்.)

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

😐


Aarathie
supercentre
நத்தார் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை!
பட்டுச் சேலை தொடக்கம் நவீன உடைகள் யாவும் இந்திய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஆடவரின் பட்டுச் சேட்டுகள் கட்வேர்க் பட்டு வேட்டிகள் யாவும் மலிவு விலையில் கிடைக்கும்.
Custom made Sharwani, Bridal Sarees குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
தங்க நகை மாளிகையில் சிங்கப்பூர் டுபாய் நகைகள் ஷ்பெஷல் விலையில் பெற்றுக்கொள்வதுடன்
புதிய தங்க லாப சேமிப்புத் திட்டத்தில் பதிவுசெய்யத் தவறாதீர்கள்.
bangles
rings
earrings
specialized in textiles, pure 22 carat jewellery custom, jewellry cosmetics and ladies fashion needs
PHONE: 416 335 4653
2250 Markham ROAD
Toronto, ON Canada, M1B 2W4
www.aarathie.com || info@aarathie.com


இலங்கை இந்திய
உணவு வகைகளைப்
பெற்றுக்கொள்ள
Freshly Prepared
Sri Lankan and Indian Food
Exquisite
Unit #17,
2901, Markham Road
Scarborough, Ontario.
416-743-9191
VIMIKA TAKEOUT & CATERING

எங்கும் எதிலும் இராணுவம்

செல்வரட்ணம் சிறீதரன்



“விட்டுக்கொடுப்பதற்குத் தயாரில்லை. தவறுகள் பிழைகள் நடந்திருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. ஏனென்றால் நாங்கள் செய்தவையெல்லாமே சரியானவை. சரியானதை, சரியாகத்தான் நாங்கள் செய்திருக்கின்றோம். நாட்டு மக்களைப் பெரும் ஆபத்திலிருந்து பாதுகாத்திருக்கின்றோம். அதற்காக நாங்கள் பல உயிர்களை இழந்திருக்கின்றோம். பெரும் தியாகங்களைச் செய்திருக்கின்றோம். அப்படி இருக்கும்போது விசாரணை என்ன ஐயா, விசாரணை?” - இலங்கை அரசாங்கத்தின் இன்றைய நிலைப்பாடு இதுதான்.

‘முப்பது வருடங்களாக இந்த நாட்டில் பயங்கரவாதம் அரசோச்சியது. மக்கள் பயப்பீதியில் வாழ்ந்தார்கள். பயங்கரவாதத்தை முற்றாக அழித்து ஒழிப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மிகுந்த துணிவோடு நடவடிக்கைகளை எடுத்தார். விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்தினார். தடைகள் எற்பட்டன. சர்வதேச சமூகமும் இந்த முயற்சிக்குத் முட்டுக்கட்டைகள் போட்டிருந்தன. எல்லாவற்றையும் கடந்து யுத்தத்தில் நாங்கள் இப்போது வெற்றிபெற்றிருக்கின்றோம். இந்த வெற்றியை இல்லாமல் செய்யவோ மீண்டும் ஒரு யுத்தம் உருவாகுவதையோ நாங்கள் அனுமதிக்க மாட்டோம்’ என்று இலங்கை அரசாங்கமும் அரசு சார்ந்தவர்களும் கர்ச்சித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இனப்பிரச்சினை காரணமாகவே நாட்டில் யுத்த மோதல்கள் உருவாகின. இதய சுத்தியோடு பிரச்சினைகளை அணுக மறுத்து, தாராள சிந்தையுடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வராததன் காரணமாகவே நாட்டில் யுத்தம் வெடித்தது. அரசியல் முரண்பாடுகள் காரணமாக எழுந்த அரசியற் பகையே யுத்தம் தீவிரமடைந்ததற்கு மற்றுமொரு காரணமாகும். நடைபெற்று முடிந்தது ஒரு சிவில் யுத்தம். பகைவர்களான இரண்டு நாடுகளுக்கிடையில் நடைபெற்ற யுத்தமல்ல இது. சிவில் யுத்தமாக இருந்த போதிலும், இரண்டு நாடுகளுக்கிடையிலான, வெஞ்சினம் கொண்ட இரண்டு பகைவர்களுக்கிடையில் நடைபெற்ற யுத்தத்தைப் போலவே மோதல்கள் நடைபெற்றன. இந்த மோதல்கள் பிரச்சினையின் தீவிரத் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன. அத்துடன், மோதலில் ஈடுபட்டிருந்தவர்கள், விடாக்கண்டன் கொடாக்கண்டன் என்று தத்தமது நிலைப்பாட்டில் கொண்டிருந்த கடும் இறுக்க நிலைமையையும் வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால் அரசாங்கம் என்பது, தனது நடத்தைகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாட்டு வரையறைக்குள் அடங்கி செயற்பட்டிருக்க வேண்டும் என்று சர்வதேச மட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. இறுதி யுத்தத்தின்போது, அரச படைகள் பொறுப்போடு நடந்து கொண்டனவா என்று கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது. இதன் தொடர்ச்சியாக, யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், அரச படைகளின் யுத்தகால நடவடிக்கைகள் குறித்து, பொறுப்புக் கூறவேண்டிய தனது கடப்பாட்டை அரசாங்கம் எவ்வாறு கையாள்கிறது என்பது, இன்று சர்வதேச விவகாரமாகியிருக்கின்றது.

இருந்த போதிலும், நாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்கு இழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற பாதிப்புகள் அல்லது அநியாயங்களுக்கு, அரசாங்கம் தனது இறைமைக்கு உட்பட்ட வகையில் நியாயம் தேடியிருக்கின்றதா என்பதும் சர்வதேச மட்டத்திலான கேள்வியாக எழுந்து நிற்கின்றது.

இனப்பிரச்சினையின் விளைவாக எழுந்த யுத்தமும், அதன் முடிவும் இன்று சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்திற்குப் பெரும் தலையிடியாக மாறியிருக்கின்றபோதிலும், அரசாங்கம் தனது பிடிவாதப் போக்கிலிருந்து மாறுவதாக இல்லை. யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஐக்கியம் ஏற்பட வேண்டும். இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உருவாக வேண்டும் என்றெல்லாம் போதிக்கின்றதேயொழிய அவற்றைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதைக் காண முடியவில்லை. அவற்றை நடைமுறைப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு, எதிர்மறையான காரியங்களையே செய்துகொண்டிருக்கின்றது. இதனால், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையற்றவர்களாக, இந்த அரசாங்கத்தின் கீழ் தமது எதிர்காலம் குறித்து கவலையடைந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

மோசமான ஒரு யுத்தம் காரணமாக நாட்டில் ஜனநாயக நடைமுறைகளுக்குப் பல பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தன. யுத்தம் முடிவடைந்ததையடுத்து, இந்தப் பின்னடைவுகள் சீர் செய்யப்படும், நிலைமைகள் சீராகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் போக்குவதற்கு வல்லமை இருக்கின்ற போதிலும், அதனைச் சரியாகப் பயன்படுத்தாமலிருப்பது பெரிய குறைபாடாக நோக்கப்படுகின்றது.

முப்பது வருடங்களாக நாட்டில் பயங்கரவாதம் நிலவியதாக அரசாங்கம் கூறுகின்றது. அந்தப் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக இராணுவத்தைப் பயன்படுத்தினோம் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு. யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு, அதன் தலைவர்கள் அழிக்கப்பட்டு பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறுகின்ற அரசாங்கம், மீண்டும் பயங்கரவாதம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதைக் காரணம் காட்டி, இராணுவச் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில், இந்த இராணுவப் பயன்பாடானது, யுத்த காலத்தையும்விட மோசமானதாக, சிவில் நடவடிக்கைகளுக்கும், சிவில் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் பெரும் சவாலாக அமைந்திருக்கின்றது. மொத்தத்தில் எதிலும் இராணுவம் எங்கும் இராணுவம் என்ற வகையிலான செயற்பாட்டிலேயே அரசாங்கம் இப்போது தீவிரமாக இறங்கியிருக்கின்றது. யுத்தத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, யுத்தத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய இராணுவத்தை சிவில் வாழ்க்கையில் இரண்டறக் கலக்கின்ற கைங்கரியம் வெளிப்படையாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக யுத்த மோதல்கள் இடம்பெற்ற வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இந்த நடவடிக்கை பாரிய அளவில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய இராணுவ மயப்படுத்தலானது இன்றியமையாதது என்பதைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சகோதரருமாகிய கோட்டபாய ராஜபக்ச வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தேசிய பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியமானது. தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது. தேசிய பாதுகாப்புக்காகவே இராணுவத்தினர் இருக்கின்றார்கள். அவர்களை அகற்ற முடியாது. அவ்வாறு அகற்றினால் தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். இது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியிலிருந்து ராணுவத்தை அகற்றும் எண்ணம் அரசாங்கத்துக்குச் சற்றும் இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.


Find your Dream Home with
NANO COMPUTER
• Residential
• Commercial
• Downtown Condos
• Investment Properties
• Lands for Sale
Call for Free Home Evaluation
Raj Nadarajah
Nagendrarajah
Sales Representative
416-333-6115
nanohomes@gmail.com
HomeLife
Higher Standards
HomeLife/Future
Realty Inc., Brokerage*
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Independently Owned and Operated


P S RENOVATION
MOEN
Buy it for looks. Buy it for life.®
DELTA
see what Delta can do
RE-MODELING, RE-FACING
RE-DESIGN, FLOORING &
BASEMENT FINISHING
Touch$_2$O® Technology
அனைத்து விதமான வீட்டுதிருத்த வேலைகளுக்கும், தரம் வாய்ந்த சமையலறை,
குளியலறை உபகரணங்களைப் பொருத்துவதற்கும் தள வேலைகளுக்கும்
CALL FOR FREE ESTIMATE
THANESAN:
647-996-6491
faucets
installed.

அழியாத வடுக்கள்

வீரமுனை

சுடுகாடு

அம்பாறை மாவட்டத்தின் கிழக்கேயமைந்த பழம் பெருமை வாய்ந்த, வளம் பொருந்திய கிராமம் வீரமுனை. இப்பிரதேசமானது சோழ இளவரசியின் வருகையின் பின்னரே உருவாக்கம் பெற்றதாக வரலாற்றுக் குறிப்புகள் சொல்கின்றன.

சீர்பாத குலத்தவர்களாகிய வீரமுனை மக்கள் 'பசுவை' முதன்மைத் தெய்வமாக வழிபட்டவர்களாகவும் அதிக கால்நடைகளை வளர்ப்பவர்களாகவும் இருந்து வந்தார்கள். இவர்கள் சோழ மரபினர் என்பதனால் பசுக்களை வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டிவந்தமையினால், இங்கு பசுவுக்கென்று தனித்துவமான வழிபாட்டு விசேடமும் இருந்துவந்தது. வழிபாட்டுமுறையின் சிறப்பாக பட்டிப் பொங்கல் விழாவை மிகவும் சிறப்பாக கொண்டாடுவது வழமையானதாகவே இருந்துவருகின்றது.

இப்பிரதேசமானது ஆரம்ப காலகட்டத்தில் எழு பிரிவுகளைக் கொண்டிருந்தது. அதில் மூன்று பிரிவுகள் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்ததுடன், ஏனைய நான்கு பிரிவுகளும் தமிழர்களைக் கொண்ட சீர்பாதகுல மக்களை தனித்துவமாகக் கொண்டமைந்திருந்தது.

ஆனால், காலமாற்றத்திற்கு அமைவாக காலப்போக்கில் முஸ்லிம் களின் மூன்று பிரிவுகளும் வீரமுனையிலிருந்து விடுபட்டு 'உடங்கா' கிராம உத்தியோகத்தர் பிரிவாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் இணைக்கப்பட்டது. அதுமட்டுமன்றி சீர்பாதகுலமக்கள் வாழ்ந்த பிரிவுக்குள்ளே எண்பதிற்கு மேற்பட்ட முஸ்லீம் குடும்பங்கள் ஊடுருவியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழரின் தனித்துவம் அதிகமாய் காணப்பட்ட இப்பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் காலதேவன், காங்கேயன், முடவன், பொட்டப்பழச்சி, சிந்தன், பாட்டுவாழி, வெள்ளாயி, நரையாயி, படையன், பரதேசி என பத்துக் குடிகள் வாழ்ந்துவந்துள்ளமையும் இங்கு குறிப்பிடப்படவேண்டியவிடயம்.

சீர்பாதமக்களின் தனித் தாயகமாக விளங்கிய வீரமுனைக் கிராமத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்வும் அவர்களது இருப்பும் 1954ம் ஆண்டிலிருந்து இனச் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்டு பெரும் இன்னல்களைச் சந்தித்து வந்தது.

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வோடு சகவாழ்வு ஏற்படுவதை விரும்பாத, பிரித்தாளும் நோக்கம் கொண்ட அரச சக்திகள் தங்கள் பேரினவாத நோக்கத்திற்காக இச் சிறுபான்மை இனங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்த பல தந்திரங்களைக் கையாண்டன. இதற்கு அவர்கள் மாற்று இனங்களிலுள்ள காடையர்களைப் பொறுக்கி எடுத்துப் பயன்படுத்தினர். அவ்வகையான சூழ்ச்சிக்குப் பலியாகி பல அழிவுகளைச் சந்தித்தது வீரமுனை. இவர்களால் மூட்டப்பட்ட சிறுபான்மை இனங்களுக்கிடையிலான மோதலின் மத்தியில் அரச படைகள் புகுந்து கடும் அட்டூழியங்களைச் செய்து முடித்தன.

- ஆனந்தி -

1954 முதல் 1991 வரையில் இவ்வாறான திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் சீர்பாதகுல மக்களின் உயிர்கள் உடமைகள் அழிக்கப்பட்டது தமிழின வரலாற்றில் அழியாத வடு.

முதல் முதலில் 1954ம் ஆண்டு முஸ்லீம்-தமிழ் மோதலைத் தூண்டிவிட்டு முதல் அழிவைச் ஏற்படுத்தினர். இதற்கு 1954 காலப் பகுதியில் இடம்பெற்ற சிறிய வாய்த் தகராறினை தமக்கு சாதகமாக பயன்படுத்திய சிலர் அதனை பாரியளவிலான பிரச்சினையாக்கி அதனூடாக வீரமுனையிலே பல உயிர்களை கொன்று குவித்தது மட்டுமல்லாமல் வீரமுனைமக்களின் சொத்துக்களையும் சூறையாடினார்கள்.

இதில் சேமன் மாணிக்கம் போன்ற வீரத் தமிழர்களின் செயற்பாட்டினால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இக்கட்டான இக் காலகட்டத்தில் தமது குலமக்களை பாதுகாத்து அதற்காகவே தன்னுயிர் பாராது உயிர்த் தியாகம் செய்து தன்னுயிரையே அர்ப்பணித்த சேமன் மாணிக்கம் போன்ற சீர்பாதகுல வீரர்களின் செயற்பாடானது வரலாற்றில் மறக்க முடியாதது.

இத்தகைய தொல்லைகள் படுகொலைகளுக்கு அஞ்சியவர்கள் வீரச்சோலை, வளதாப்பிட்டிய, மல்லிகைத்தீவு, மல்வத்தை ஆகிய கிராமங்களுக்கு இடம் பெயந்து சென்று வாழ்ந்தார்கள்.


1954 இலிருந்து கிட்டத்தட்ட 36 வருடங்கள் தங்கள் சொந்த நிலத்துக்கு வருவதும் பின்னர் வாள்வெட்டு, கத்திவெட்டுகளில் அகப்பட்டு சாவதும் போக அச்சத்தோடு ஊர் பிரியும் துயரை வீரமுனைக் கிராமம் அனுபவித்தே வந்தது. 1990 ஆனி, ஆடி மாதங்களில் நடைபெற்ற பேரழிவின் பின்னர் வீரமுனையை தமிழர்கள் மறந்துவிட வேண்டிய நிலைமை உருவாகியது.

20.06.1990 அன்று வீரமுனை வளத்தாப்பிட்டிய கிராமத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர் அனைவரையும் வீரமுனை சிறீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லுமாறு பணித்தனர். எப்போதும் போல கோவில்களே தங்களை காப்பாற்றும் என நம்பிச் சென்ற மக்களை வளமை போல கொன்று குவிப்பதில் இராணுவத்தினர். அவர்களால் பொறுக்கியெடுத்து இனவெறி ஊட்டப்பட்ட முஸ்லீம் காடைகளையும் பயன்படுத்திக் கொண்டனர்.


கொலைஞர்களிடம் அகப்பட்டவர்களின் உறவினர்கள் குடும்பத்தினர் அழுது அரற்றி உறவுகளை விடுவிக்க போராடிய எல்லாம் தோற்றுப்போக அத்தனை பேரும் சம்மாந்துறை மலைக்காட்டில் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டு இவர்களால் மூட்டப்பட்ட தீயில் போடப்பட்டார்கள். அன்று 37










CAPS
இலங்கையில் தொடர்பு கொள்ள
077-386-7548
021-205-2262
வெளிநாட்டுக் கல்வியையும் வேலைவாய்ப்பையும் இலக்காகக் கொண்ட பாடத்திட்டங்கள்.
இமிகிறேசன் உதவிகள்
IELTS
NURSING
Etc.
யாழ்
திருநெல்வேலி
சந்திக்கருகில்
Canadian Academy of Professional Studies
52, Palaly Road, Thirunelvely, Jaffna.

உயிர்கள் சம்மாந்துறை மலைக்காட்டில் எரியூட்டப்பட்டார்கள்.

அதேமாதம் 29ம் திகதி மீண்டும் கோவிலுக்குள் புகுந்த இராணுவத்தினரும் காடையர்களும் கோவில் இருந்தவர்களில் 56 ஆண்களை அழைத்துச் சென்றார்கள். சாவின் பயம் அவர்களை மட்டுமல்ல அவர்களது உறவுகளின் கண்ணீரிலிருந்தும் வெளிப்பட்டது. ஆயுதமுனையில் கொண்டு செல்லப்பட்ட தங்கள் உறவினர்கள் திரும்பி வருவார்கள் என நம்பிய குடும்பங்களின் கண்ணில் கூட தெரியாமல் கொண்டைவெட்டுவானில் காடையர்களால் மூட்டப்பட்ட பெருந்தீயில் அத்தனைபேரும் கொலையிட்டு எரியூட்டப்பட்டார்கள்.

யாருமற்ற அனாதையாகியவர்கள் கிடைத்ததை சுமந்துகொண்டு காரைதீவுக்கு இடம்பெயர்ந்தார்கள். காரைதீவு பாடசாலையே அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது. அறிவுதரும் மையமாகிய பாடசாலையில் இருந்தவர்களையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

04.07.1990 காரைதீவு விசேட அதிரடிப்படையினரால் அகதி முகாமான காரைதீவு பாடசாலை முற்றுகையிடப்பட்டது. கொல்வதற்கு அங்கிருந்தும் 12 ஆண்களைத் தெரிவு செய்தார்கள். அன்றாட உணவு தொடக்கம் அடிப்படை வசதிகளுக்கே அவலப்பட்டு உயிரைத் தவிர எதையும் கொண்டு வர முடியாது அகதியாகியவர்களின் குடும்பங்களிலிருந்து 12 ஆண்களும் கொண்டுசெல்லப்பட்டவர்கள் திரும்பி வரவில்லை. அதிரடிப்படையின் முகாமில் சென்று தங்கள் உறவுகளை கேட்ட பெற்றோருக்கு "நாங்கள் உங்கட ஆட்களை கொண்டுவரவில்லை இனம் தெரியாதோரால் கொல்லப்பட்டார்கள்" என பதிவுசெய்யுமாறு சொல்லப்பட்டது.

மீண்டும் 10.07.1990 அன்று பாடசாலையில் புகுந்த அதிரடிப்படையினரால் மிஞ்சியிருந்தோரில் 11 ஆண்கள் பிடித்துச் செல்லப்பட்டு சுட்டெரிக்கப்பட்டார்கள். தங்கள் குடும்பத்து உயிர்களைக் காக்கலாமென காரைதீவுக்கு இடம்பெயர்ந்து போன குடும்பங்கள் உறவுகளை இழந்த துயரில் மனவிரக்தியோடு தங்கள் வீரமுனைக் கிராமத்தில் செத்துவிடுவது மேலென ஊர் திரும்ப விரும்பினார்கள். வரும் வழியில் மல்வத்தை முகாமிலிருந்த இராணுவத்தினரால் எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு அணுவணுவாக சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு கொன்றுமுடித்தார்கள்.

அதேமாதம் 26ம் திகதி கொண்டைவெட்டுவான் படைமுகாம் இராணுவத்தினரால் மல்வத்தை, வீரமுனை, கலைதிபுரம், புதுநகர் கிராமங்களைச் சேர்ந்த 10ற்கும் மேற்பட்டவர்களுக்கு இதுவரையில் என்ன நடந்தது எங்கே கொல்லப்பட்டார்கள் என்ற பதிவுகள் எதுவும் இல்லாது காணாமற் போனார்கள்.

1990 ஆனி ஆரம்பித்த கோரத்தாண்டவம் ஆடிமாதமும் முடிந்து ஆவணியில் உக்கிரக் கட்டத்தையடைந்தது. ஆவணி மாதம் ஊர்காவற் படையினரால் கைது செய்யப்பட்ட 8 பேரும் வெட்டிக் கிணற்றில் வீசப்பட்டார்கள். இனிமேல் அப்பகுதிகளில் வாழ முடியாதென்பதை உணர்ந்தமக்கள் மண்டூரை நோக்கி இடம்பெயர்ந்தார்கள். இடம்பெயர்ந்து சென்றவர்கள் சவளைக்கடை இராணுவமுகாமில் தடுக்கப்பட்டு அதே வீதியில் வைத்து 18பேர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இத்தாக்குதலில் தப்பியோடியவர்களில் மிஞ்சியவர்கள் தங்கள் கிராமத்துக்கு திரும்பிச் சென்றனர்.

செல்லும் வழியெங்கும் கொல்லும் மனிதர்கள் துரத்தத் துரத்த இனியெங்கே செல்வதென அறியாது அந்தரித்து ஊரில் முடங்கியவர்கள் ஆவணி 12 இக் காடையர்களால் மீண்டும் பெரும் அவலத்தில் வீழ்த்தப்பட்டார்கள். வீடுவீடாகப் புகுந்த காடையர்கள் அவர்களிடம் மிஞ்சிய உடமைகள் அனைத்தையும் கொள்ளையிட்டார்கள். வெட்டியும் சுட்டும் படுகொலை செய்து உயிர்கள் நீங்கமுன்னம் தீயிட்டு எரித்தார்கள். எரியும் நெருப்பில் உயிரோடு வீசிக் கொன்றார்கள்.

இத் தாக்குதலில் 25பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். காயமடைந்த 30 பேர் அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அதேநாள் காயமுற்ற 30 பேரும் ஆயுத முனையில் இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டார்கள். காயங்களோடு இருந்தவர்களை இழுத்துச் சென்று ஒருவரும் மிஞ்சாமல் கொன்றுபோட்டார்கள்.

மாபெரும் இனவழிப்பை சந்தித்த இக்கிராமத்திலிருந்து அழிவைச் சந்தித்த 1990ம் ஆண்டு, தங்கள் உயிர்காக்க ஊரூராய் அலைந்துத் திரிந்த இளைஞர்கள் சிலர் ஆயுதமேந்திப் போராடப் புறப்பட்டு விடுதலைப் போராளிகளாயினர். பலமுள்ளதே வெல்லும் பலமற்றது அழியும் எனும் இயற்கையின் நியதிக்கு ஏற்ப தங்கள் ஊர்களைக் காக்க விடுதலைப் போராளிகளான அந்தப் புனிதர்களை இந்நேரம் நினைவு கொள்கிறோம்.

பழமையும் பெருமையும் மிக்க வீரமுனையின் வரலாற்றை எவர்தான் அழித்தாலும் மீண்டும் துளிர்ப்போம் என்ற வேகத்தோடு முன்னேறத் துடிக்கும் இக்கிராமத்தின் பாரம்பரியத்தினை பேணுமுகமாக சீர்பாதகுல மக்கள் வாழ்ந்துகொண்டுதான் வருகின்றார்கள்.

தங்கள் பாரம்பரியம்மிகு இடங்களை வேற்றினத்தார் அபகரித்ததனால் இறந்தவர்களின் உடல்களை இறுதிக் கிரிகை செய்வதற்குக்கூட போதிய எவு இடம் இல்லாதமை மிகவும் மனவேதனை அழிப்பதாக இக் கிராமத்தின் மூத்தவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எத்தனையோ அழிவைச் சந்தித்த பின்னும் இம்மக்கள் கொண்டுள்ள தைரியமும், மனவுறுதியும் வீரமுனையை வாழவைக்கும் என்ற நம்பிக்கையைத் தரும் வகையில் அவர்களது எழுகை அமைந்திருப்பது ஆறுதல் தருகிறது.














மனித குலவரலாறை எடுத்துக்கொண்டால் ஆதி மனிதன் தன் அடிப்படைத் தேவையாக முதலில் உணவையே கொண்டிருந்தான். தனக்கான உணவை இயற்கையாக உருவான மரங்கள், செடிகளிலிருந்து பெற்றுக்கொண்டான். இதன் வளர்ச்சிப்போக்கில் உணவிற்காக மிருக மாமிசங்களை உபயோகிக்க தொடங்கினான். இதற்காக வேட்டையாடத் தொடங்கினான். இதற்கு தனது உடல் உறுப்புக்கள் மட்டும் போதவில்லை என்றபோது ஆயுதங்களை உருவாக்க முயன்றான், வெற்றியும் கண்டான். இந்த வேட்டையில் உபரி உணவுகள் உருவாகத் தொடங்கின. இந்த உபரியே முதலில் மனிதர்களுக்கிடையில் சண்டைகளையும் இதன் தொடர்ச்சியாக போர்கள், யுத்தம் என்று பரிணாமம் அடைந்தது.

இதற்கு ஒரு படிமேலே போய் பார்த்தால் கருவிகள் நவீனமயமாக உருவானபோது கண்ணுக்கு நேரடியாக புலப்படாத ஆனால் பூமிக்குள் புதைந்திருந்த கனிம வளங்களைக் கண்டறிந்தான் மனிதன். பல்வேறுபட்ட கனிம வளங்களைக் கண்டறிந்தாலும் எண்ணை என்ற எரிபொருள் சார்ந்த கனிம வளமே மனிதனுக்கு அதிகம் தேவையான பிரயோசனமாக கனிம வளமாக இன்று அமைந்தது. இது நிலத்தின் அடியிலேயே காணப்பட்டது. மனிதனின் உபரி உற்பத்தியை உருவாக்க தேவையான சக்தியின் முக்கிய மூலமாகவும் இந்த எரிசக்தி எண்ணை வளமே அமைந்தது. தமது எல்லைப் பரப்பிற்குள் இல்லாத எண்ணை வளத்தைத் தேடி புறப்பட்ட மனிதன் இதற்கான நாடுகளை கைப்பற்றும் போரில் ஈடுபட்டான், நேரடி போரில் ஈடுபட்டு நாடுகளை கைபற்றல் என்பதற்கு மனித குலத்தில் இருந்து கிடைத்த எதிர்ப்பும், போரில் ஏற்பட்ட தோல்விகளும் தற்போதைய நவீன நவகாலணித்துவத்தை உருவாக்கி அவனைச் சுரண்ட வைத்தது. இன்று இதில்தான் நாம் வந்து நிற்கின்றோம்.

இதற்காக நாம் உருவாக்கிக் கொண்டது எல்லாம் தமது நாட்டு எல்லைகளுக்கு அப்பால் எமது விருப்புகளுக்கு, நலன்களுக்கு அடங்காத அரசுகளுக்கெதிராக குழப்பங்களை ஏற்படுத்தி யுத்தங்கள் செய்து, தமது நலன்களைப் பிரதிபலிக்கும் அரசுகளை அந்நாடுகளில் முதலில் நிறுவுவது. இதன் பின்பு அந்நாட்டின் கனிம வளங்களை சுரண்டுவது. இதில் முதன்மை பெறுவது எண்ணை வளமாகும் எனவேதான் கூறுகின்றோம் எண்ணை யுத்தம் அது என்ன யுத்தம் என்று.

தமது நலங்களை பிரதிபலிக்காமல் சுயாதிபத்துடன் இருக்கும் நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்களை வலிந்து உருவாக்கி, அங்கு நிலவும் தமக்கு சாதகமான அடக்கு முறைகளை, ஜனநாயக மறுப்புக்களை கையில் எடுத்து உங்களுக்கு உதவுகின்றோம் என்று ஆரம்பித்து உள்நாட்டுக் கிளர்சிகளை முதலில் உருவாக்குதல். ஊர் இரண்டுபட்டால் இவர்களுக்கு கொண்டாட்டம். சமாதானத்தை நிலை நாட்டுகின்றோம், மனிதாபிமான உதவி, மனித உரிமைகள் என்று கூறிக்கொண்டு இந்த நாடுகளுக்குள் நேரடியாகவும், மறைமுகமாகவும் புகுதல் என்பதை கடந்த பல வருடங்களாக நடைபெற்றுவரும் மேற்குலக நாடுகளின் வலிந்த யுத்தங்களைப் பார்த்தால் நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

சிவா மு. ஈஸ்வரமூர்த்தி

இதில் இரட்டைக் கோபுரத்தைக் காரணம் காட்டி ஈராக்கினுள் புகுந்ததாக இருக்கட்டும் இன்றுவரையிலான ஐ.எஸ் இற்கு எதிரான யுத்தங்களாக இருக்கட்டும் இவை எல்லாவற்றிலும் ஒரு எண்ணை யுத்தம் ஒழிந்திருப்பதை காணமுடியும்.



பொருட்களுக்கு சந்தையில் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் இதற்கான கிராக்கியை அதிகரித்து பொருட்களின் விலை ஏற்றுதல் என்பது முதலாளித்துவம் கையாளும் ஒரு கைங்கரியம். திறந்த பொருளாதாரத்தில் சந்தைப் போட்டியை ஏற்படுத்தி விலையை குறையச் செய்தல் என்பது எல்லாம் வெறும் பேச்சளவில்தான். மாறாக பல உற்பத்தி நிறுவனங்கள் என்பது எல்லாம் வெளிப்பார்வைக்கு தான். உண்மையில் இவையாவும் ஒரே வர்க்கத்தின் உரிமையாளர்கள். இங்கு ஒருவகையில் ஏகபோகமாக ஒழிந்து நின்று விலை நிர்ணயம் செய்தல் என்பதையே இந்த தரகு முதலாளிகள் செயற்படுத்துகின்றனர்.

OPEC என்று உருவாக்கப்பட்ட எண்ணை வள நாடுகளின் கூட்டமைப்பு எண்ணையின் விலையை நிர்ணயிக்கும் முகமாக எண்ணை உற்பத்தியை மட்டுப்படுத்தல் என்று எண்ணை வளம் மிக்க அரபு உலகத்தை கட்டிப்போட்டது. இந்தக் கூட்டமைப்பில் அமெரிக்காவின் பலமான கரம் பெரும் ஆதிக்கம் வகிக்கின்றது.

இந்த மேற்குலகம், மேற்குலக நாடுகளின் அடிவருடிகளான சில அரேபிய நாடுகளில் உள்ள தனிப்பட்ட முதலாளிகள் எண்ணை உற்பத்தியை மட்டுப்படுத்தி எண்ணைத் தேவைக்கான கிராக்கியை அதிகரித்து எண்ணை விலையை தாம் நினைத்த அளவிற்கு உயர்த்தி கொள்ளை இலாபம் ஈட்டுவதில் ஈடுபடுகின்றனர். இதனை உடைத்து வெளியில் வந்ததில் வெனிசுவெலா போன்ற தென் அமெரிக்க நாடுகள், சில அரேபிய நாடுகள் முதன்மை பெற்றன. இந்த நாடுகளுக்கு எதிராக மேற்கூறிய எண்ணைகளில் ஏகபோகம் காட்டிவரும் முதலாளிகள் உருவாக்கிய வலிந்த யுத்தங்களே தற்போது இடையறாத குண்டு வெடிப்புக்களுடன் நடைபெற்றுவரும் மத்திய தரைக்கடல் சார்ந்த யுத்தங்கள்.

ஈராக்கில் யுத்தத்தை காரணம் காட்டி எண்ணை விலையை ஒரு இரவில் லீற்றர் ஒன்றிற்கு ஒரு டாலருக்கு மேல் இவர்களால்தான் கூட்ட முடிந்து. இதற்கு இவர்கள் காட்டிய காரணம் ஈராக் யுத்தத்தினால் எண்ணை உற்பத்தி பாதிக்கப்பட்டுவிட்டது என்பதுதான். ஆனால் ஈராக் யுத்தம் சதாம் குசைனின் மரணத்துடன் முடிவடைந்து வெற்றி கொள்ளப்பட்டதாக காட்டபட்பட்டாலும் உயர்ந்த எண்ணையின் விலை மட்டும் குறையவில்லை. இலங்கையில் அரசியல் தீர்வுகாண முடியாமைக்கும், இராணுவத்தின் பிரசன்னத்திற்கும் புலிகளைக்காரணம் காட்டி வந்தாலும் யுத்தம் முடியவடைந்ததாக பிரகடனப்படுத்தப்பட்டாலும் இன்றுவரை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையோ. இராணுவக் குறைப்பையோ செய்ய மறுக்கும் இலங்கை அரசின் செயற்பாட்டை ஒத்ததே ஈராக் யுத்தம் முடிந்த பின்பு எண்ணை விலை குறையாததும்.

இந்த எண்ணை வழங்கள் சாமான்ய மக்களின் உரிமங்களாக இல்லாமல் பெரும் முதலாளிகளின் சொத்துரிமையாகவே பல நாடுகளிலும் உள்ளன. இது உண்மையில் ஒரு நாட்டிற்கே சொந்தம் அதாவது அந்த நாட்டில் உள்ள சகல மக்களுக்குமே சொந்தமான சொத்தாகும். இதனை உலகில் எத்தனை நாடுகள் கடைப்பிடிக்கின்றன என்பது இங்கு சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகின்றது. இந்த முக்கிய எரிசக்தி வளங்கள் தேசிய உடமை ஆக்கப்படாதவரைக்கும் இந்த எண்ணை மீதான யுத்தங்களும் இதன் விலை ஏற்றத்தாழ்வுகளும் தவிர்க்க முடியாமல் போய்கோண்டே இருக்கும்.

1980களில் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆயுதப் போட்டியில்





சோவியத் யூனினை எவ்வாறு அமெரிக்கா கவிழத்தது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. அமெரிக்காவின் செல்வாக்கு பெற்ற சவூதி அரேபியாவை முன்வைத்து ஒரு தினத்தில் ஒரு பீப்பா எண்ணையின் விலையை 10 டாலரால் குறைக்கச் செய்தத்தன் மூலம் சோவியத் யூனியனின் எண்ணையினால் கிடைக்கும் பொருளாதாரத்திற்கு பலத்த அடியை ஏற்படுத்தியது. சோவித் யூனியனை பொருளாதார ரீதியாக வங்குரோத்தடையச் செய்து இதனை நுழைவாயிலாகக் கொண்டு சோவித் யூனியனை அமெரிக்காவால் உடைக்க முடிந்தது. தற்போதும் இதே மாதிரியான செயற்பாட்டையே அமெரிக்கா மேற்கொண்டுள்ளதா என்ற கண்ணோட்டத்தில் தற்போதைய விலைக் குறைப்பை பார்க்கவேண்டியும் உள்ளது. தற்போது உருவாகிவரும் எழுதப்படாத அமெரிக்க ரஷ்யா இடையேயான பனிப்போரில் ரஷ்யாவின் பொருளாதாரத்தில் மந்த நிலையை ஏற்படுத்தி அடிபணிய வைக்கும் அந்த 1980களில் கையாண்ட அதே முறையை இம்முறையும் அமெரிக்கா கையாள முற்படுகின்றதா என்பதை நாம் சீர்தூக்கிப்பார்த்தாக வேண்டும். என்னவோ எல்லாம் செய்து ஆட்டம் காணாத ரஷ்யா இந்த புதிய எண்ணை யுத்தத்தினால் சிறிது ஆட்டம் கண்டுவிட்டது என்றுதான் கூறவேண்டும். இதன் வெளிப்பாடுதான் சில தினங்களுக்கு முன்பு ரஷ்ய அதிபர் விளாடிமின் புட்டின் ரஷ்ய பொருளாதாரம் சம்மந்தமாக எழுப்பிய எச்சரிகை மணி.

1980களில் சோவியத்திற்கு அமெரிக்கா கொடுத்த எண்ணை யுத்தம் அன்று சோவியத் யூனியன் சிதற ஒரு காரணமாக இருந்தது போல் இன்றும் அதே எண்ணை யுத்தம் ரஷ்யாவை பலவீனப்படுத்தி வீழ்த்திவிடுமா? அல்லது 1980களின் பாடங்களை ரஷ்யா தனக்குள் உள்வாக்கி அமெரிக்காவின் தந்திரோபாயங்களை வென்று வெளியேறிவருமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த எண்ணை விலைக் குறைப்பு அமெரிக்காவின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும் ரஷ்யாவுடன் ஒப்பிடுகையில் அமெரிக்கா இருநூறு பில்லியன் டாலருக்கு மேல் கடனாளியாக இருக்கையில் இந்தப் பொருளாதாரத் தாக்கம் தான் வெட்டிய குழியில் தானே வீழ்ந்து அழிந்ததைப்போல் அமெரிக்காவை ஆக்கிவிடும் அபாயங்களையும் தன்னகத்தே கொண்டதையும் மறுப்பதற்கில்லை.

மறுபுறத்தில் சில மாதங்களுக்கு முன்பு சீனாவிற்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையில் எரிபொருள் சக்தியை அடிப்படையாக கொண்டு மிக்பெரிய ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டது. ஆமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடான சவூதி அரேபியாவின் இச் செயற்பாடு பல அரசியல் ஆய்வாரள்கள் பொருளாதார வல்லுனர்களால் கேள்விக்குறியுடன் நோக்கப்பட்ட ஒன்றாகும். இந்த செயற்பாடு சவூதி அரேபியா சீனாவின் செ(ா)ல்வாக்கு வலயத்திற்குள் வந்துவிட்டதா என்ற சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருந்தது. இன்றைய எண்ணை விலைக்குறைவை மட்டுப்படுத்த சவூதி ஆரேபியா தனது எண்ணை உற்பத்திக் குறைப்பினால் சரிக்கட்ட முயலாமல் இருப்பது மேற்கூறிய சந்தேகத்தை வலுப்படுத்தியிருக்கின்றது. இதன் மறுபுறத்தில் சீனாவுடனான எரிபொருள் ஒப்பந்தத்திற்கு பிந்தைய எண்ணைவிலைக் குறைப்பு சீனாவின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்த அமெரிக்கா சவூதி அரேயாவுடன் இணைந்து செயற்பட்ட சாணக்கியம் என்ற வாதங்களையும் மறுப்பதற்கில்லை

இந்த திடீர் விலை வீழ்ச்சியால் எரிபொருள் பாவனையாளர்கள் அதிகம் பயனை அடைவர் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. இதேவேளை எரிசக்திச் செலவு குறைவதினால் பொருட்களின் விலைகளும் குறைய வாய்புக்கள் உண்டு. மறுபுறத்தில் எரிபொருள் சந்தையில் சிறு மூதலீடு செய்தவர்கள்களே அதிகம் பாதிக்கப்படுவர். பெரும் முதலீட்டாளர்கள் ஏதோ ஒரு காரணத்தின் அடிப்படையில் நீண்டகால நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுவதினால் இதிலிருந்து மீண்டு வருவதற்கான கால அவகாசமும் பண பலமும் இவரகளிடம் உண்டு. இதனால் இவர்கள் இந்த விலை வீழ்ச்சியினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து தம்மமை தற்பாதுகாத்துக் கொள்வர். பெரும் முதலைகள் சிறு மீன்களைச் சாப்பிடும் மற்றொரு முயற்சியாக, சமான்ய மனிதர்களின் எரிசக்திகள் மீது சிறுகச் சிறுக முதலிட்டுள்ள முதலீடுகளைக் கூட்டி அள்ளி, ஒரு பாரியளவு பணத்தை விழுங்கும் செயற்பாடாக இது அமையப்போகின்றது.

கடந்த மூன்று வருடங்களாக உலகளாவிய ரீதியில் எற்பட்டுள்ள பொருளாதார மந்தம் எரிபொருள் தேவைகான கேள்விகளைக் குறைத்துள்ளது. இதனாலும் விலையில் வீழ்ச்சி எற்படுவதற்கான புறக்காரணி ஏற்பட்டுள்ளதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். தேவைகள் அதிகரிக்கும் போது கேள்விகள் அதிகரிக்கும் போது, உற்பத்திகள் போதாமல் இருப்பின் விலையேற்றம் ஏற்படும் என்பதன் மறுவழும் இங்கு நடைபெற்றுள்ளது என்று பொருளாதார வல்லுனர்கள் முன்வைக்கும் கோட்பாடுகளும் எம் மூளையைக் குடையாமல் இல்லை.




AGR
AGR FOREX
Currency Exchange
இலங்கை, இந்தியா, மற்றும் ஐரோப்பிய
நாடுகளுக்கு பணம் அனுப்பவும் எடுக்கவும்
US DOLLARS, EURO, POUNDS, SWISS FRANCS, RUPEES
நாணயங்களை வாங்கவும், விற்க்கவும்
Tel:- 416-261-0003 Fax:- 416-261-9592
Email: info@agrforex.com www.agrforex.com
1143 Morningside Ave., Unit #5, Scarborough, ON


ARUN BAKERY
ARUN BAKERY
TAKEOUT & CATERING
905 303 4141
சுவை மிகு இலங்கை, இந்திய
சைவ. அசைவ உணவுவகைகள்
பாண், கேக் போன்றவற்றையும்
தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
தங்கள் வீட்டில் நடைபெறும்
அனைத்து விசேட
வைபவங்களுக்கும் தேவையான
உணவு வகைகளை முன்கூட்டியே ஓடர்
செய்து பெற்றுக்கொள்ளலாம்
9699 Jane Street,
Unit 23 Maple, ON. L6A 0A4
Jane&Major Mackenzie


VEERAR TAKEOUT & CATERING
Weddings ▸ Puberty Ceremony ▸ All Special Occasions
MASALA DOSA
CHICKEN CURRY
MUTTON BIRYANI
5790 Sheppard Avenue East, Unit 3
Call Appan at
416-299-4541 or 647-293-6634


உங்கள் உறவைப் பிரிந்து தடுமாறும் வேளையில், அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்! அனுபவத்தோடு கூடிய அன்பான சேவையை வழங்குகிறோம்.
மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் சேவைகள்
அதி நவீன வசதிகளுடன் புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட அறைகள், 300 பேருக்கும் அதிகமானோர் அமரக்கூடிய மண்டபங்கள்
• மரண அறிவித்தல்கள் வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
• சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
• பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
• விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
• இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
• Slideshow உருவாக்கம் செய்யவும்
• உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
• உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்
Chapel Ridge
FUNERAL HOME INC
HEAVEN CARES
Christeen Seevaratnam
416-258-6759
416-431-3600 Ext. 2
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
Dir : 416-993-0826
416-431-3600 Ext. 1

மாதர் தம்மை இழிவு செய்யும்...

அடடே, திரும்பவும் பெண்களை வம்புக்கு இழுத்தாகி விட்டதா? அண்மையில் வடமாகாண முதலமைச்சர் ஆற்றிய உரையைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.



வவுனியாவில் நடத்திய நடமாடுஞ் சேவைக்கு (மத்திய) அரசு உத்தியோகத்தர்கள் ஒருவரும் வருகை தராத விடத்தில் அவர்களை கணவனைப் புறந்தள்ளி அடுத்த வீட்டுக்காரன் அரவணைப்பை நாடிச் செல்லும் மனைவிமார்களுக்கு அவர் ஒப்பிட்டிருக்கின்றார்.

அடுத்த வீட்டுக்காரன், அதாவது மத்திய அரசாங்கம், "அதிக அதிகாரம் கொண்ட அலுவலன் என்பதால் அவனை அண்டி வாழவும் கணவனைப் புறக்கணிக்கவும் எத்தனிக்கும் மனைவிமார்கள் காலக்கிரமத்தில் தமது கடமையையும் கடப்பாட்டினையும் புரிந்து குடும்ப நன்மையை முன்வைத்து வாழவேண்டி முற்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு எமக்குண்டு. அடுத்த வீட்டுக்காரன் சலுகைகள் தருவது தன் (சொந்த) நன்மைக்கே என்பது காலஞ் செல்லச் செல்லப் புலனாகும். அவன் தன் காரியம் முடிந்தவுடன் இவளை நட்டாற்றில் விட்டுவிட்டுப் போய்விடுவான் என்பதும் புரியவரும்" என்று இந்த உவமையை விளக்கியும் இருக்கின்றார்.

முதலமைச்சர் இந்த உவமையை உபயோகிப்பதற்கு தமிழில் வழங்கும் ஒரு பிரபலமான பழமொழிதான் அடிப்படை என்று புரிகிறது.

"அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடுவதுபோல.."

என்பதே அந்தப் பழமொழியாகும். ஒவ்வொரு நாகரிகத்திலும் ஒவ்வொரு சமூகத்திலும் அந்தந்த வழக்கங்கள் பண்பாடுகளை யொட்டியே அவற்றின் பழமொழிகள் புனையப்படுகின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால் அந்தந்த சமூகங்களின் பால்நிலை உறவுகளின் அடிப்படைகள் முழுவதும் இப் பழமொழிகளில் பிரதிபலிப்பது கண்கூடு.

– சாந்தி சச்சிதானந்தம்–

இவற்றில் அனேகமானவை பெண்களின் பாலுணர்வினைத் (Sexuality) தூற்றுவதாயும், அப்படித் தூற்றுவதன் மூலமாகவோ நேரடியாகவோ அதனைக் கட்டுப்படுத்துவதாயும் அமைவதைக் காணலாம். இதற்கு உதாரணமாக பல பழமொழிகளைக் காட்டலாம். பெண்களின் பாலுணர்வினைப் பற்றி, அது தம்மை மீறிப் போய் விடுமோ என்கின்ற பயமே ஆண்களின் மனதில் மேலோங்கியிருப்பதை இவை நிறுவுகின்றன.

அடுத்ததாக, பெண்கள் லௌகீகத்தில் (உலக இன்பங்களில்) ஆசை கொண்டவர்கள் என்பதைக் காட்டுவதாக அமைந்த பழமொழிகள் பல உள்ளன.

"பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள் பெண்சாதி மடியைப் பார்ப்பாள்"

என்பர். அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்த பட்டுமாமியும்கூட பட்டுச் சேலைக்கும் வைர மூக்குத்திக்குமல்லவா ஆசைப்படுகிறாள்? உண்மையில் பொருளாதார சுயாதீனம் இல்லாது பெண்கள் வாழ்ந்ததையே இப்பழமொழிகளும் பெண்கள் பற்றிய படிமங்களும் கோடு காட்டி நிற்கின்றன.

தான் சுதந்திரமாக உழைக்க வாய்ப்புக் கொடுக்காது சமூகத்தினால் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கும் பெண்கள் தாம் பிழைத்துக் கொள்ளும் வாய்ப்புக்களைத் தேடி ஓடும் யதார்த்தமானது இங்கு இழிவாகச் சித்தரிக்கப்பட்டுவிடுகின்றது.



இவையெல்லாவற்றிற்கூடாகவும் புருஷனோ அரசனோ, யாராவது ஒரு ஆணின் மீதே தங்கியிருக்க வேண்டிய பெண்களின் பலவீனமான சமூகநிலை வெளி வருகின்றது. மொத்தத்தில் இவை ஒரு சமூகத்தின் மனதில் பெண்களைப் பற்றிய மரியாதையை வேரறுக்கின்றது என்பது தான் உண்மை.

"தனிவழியே போறவளைத் தாரம் என்றென்னாதே"

என்கின்ற பழமொழியைப் பார்ப்போம். இந்த விழுமியம் ஊறிய எங்கள் சமூகங்களில் தனியே வாழும் பெண்களின் நிலை பரிதாபகரமாக மாறியிருக்கின்றது. இன்றுவரை தனியே போய்த் திரியும் பெண்களைப் பற்றி எமது சமூகம் தூற்றிக் கொண்டுதானிருக்கின்றது. சமூகப் பணியில் ஈடுபடும் பெண்களையும் தனியே வாழும் விதவைகளையும் கேட்டுப் பாருங்கள் தெரியும். தமது உறவினர்கள், அயலவர்கள் ஆகியோர் சொற்புண் பட்டு அவர்கள் வாடியிருப்பதைக் கதைகதையாகச் சொல்லுவர்.

இலங்கைத் தீவில் தனியாக உல்லாசப் பயணிகளாக வரும் பெண்களே அனேகமாக பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாகின்றனர். பல பிரபல உல்லாச விடுதிகளுக்கு முகாமையாளராக பல வருடகாலம் பணியாற்றிய ஒருவர் கூறியதகவல் இது. "எப்படியோ தனியாகவருகின்ற பெண்கள்தான் [Loose women] அவிழ்த்து விடப்பட்ட பெண்கள்

"தங்களின் உடலின்பக் கேளிக்கைகளைத் தேடிவருகின்றனர் (looking for fun)"

என்று அதனை விளக்கினார்.

அதாவது ஒரு அடக்கமான குடும்பப் பாங்கான பெண் தனியாக வரத் துணிய மாட்டாள் என்பதுதான் இங்கு அனுமானம். எனவே எந்த ஆணும் அவளை அனுபவிக்கத் துணியலாம். அதற்கு சமூகத்தின் அனுமதி உண்டு.


"கட்டுப்படாத பெண் கெட்டுப் போட்டு ஓடும்"


பழமொழியும் சொல்ல முடியாத அளவு தீங்கினை பெண்கள் சந்ததிகளுக்கு இழைத்திருக்கின்றது. அனேகமான, ஏன் சகலவும் என்று கூடக் கூறலாம், குடும்ப வன்முறைகளையும் ஆராய்ந்து பார்த்தால், புருஷன்மார் தங்களது மனைவியரின் பாலுணர்வினைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே வன்முறையைப் பிரயோகிக்கின்றனர் என்பதை உணர்ந்து கொள்ளலாம். வன்முறை மூலம் அவளைத் தனக்கு நடுங்கவைத்தால் தான் வேறு யாரையும் அவள் நாடாமல் தடுக்கலாம் என்கின்ற உணர்வே அவனின் அடிமனதில், சிலசமயங்களில் அவனையறியாமலேயே, ஆழமாகப் பதிந்து விடுகின்றது. புருஷன் என்றால் அடிப்பான்தானே என்று இங்கும்கூட சமூகமும் அதற்கு ஒத்துக் கொடுக்கின்றது.

மேற் கூறிய அலசலின் அடிப்படையில் முதலமைச்சரின் உவமானத்தினை நோக்கலாம். வடமாகாணசபை என்னும் அரசியல் அலகு புருஷனாக சித்தரிக்கப்படுகின்றது. மனைவியோ அந்த அரசியல் அலகுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அரச அதிகாரிகளைக் குறிக்கின்றாள். இங்கே அதிகார ஏற்றத் தாழ்வுகள் ஆண் பெண் உறவுகள் மூலம் வெளிக் கொணரப்படுவதைக் காணலாம்.

இதேபோல்தான் இவருடைய முன்னைய நாள் அறிக்கையொன்றில்







"கணவனும் மனைவியும் அடித்துக் கொள்ளும் போது வெளியாட்கள் உள் நுழையக் கூடாது"

என்கின்ற கருத்தில் அமைந்திருந்தது. (பெரும்பான்மையான சிங்களவரும் சிறுபான்மையான தமிழர்களும் அடித்துக்கொள்ளும்போது தமிழ் நாட்டைக் குறித்திருந்தார்) இங்கும் வலிமையில் குறைந்தவர்கள் பெண்பாலிலும் வலிமையில் கூடியவர்கள் ஆண்பாலிலும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றார்கள். முதலாவதாக இங்கு பெண்களின் இரண்டாந்தர அந்தஸ்து வலியுறுத்தப்படுகின்றது.

அடுத்ததாக குறிப்பிட்ட உரையில்

"அதிகாரம் கூடிய அண்டை வீட்டுக்காரனுடன் மனைவி சோரம் போகின்றாள்"

(ஸ்ரீலங்கா அரசும் - மத்திய அரசு உத்தியோகத்தர்களும்) என்னும் கருத்துப்படக் கூறியிருந்தார். வடக்கின் அரச அதிகாரிகள் மக்களின் நலன் கருதிச் செயற்படாமல் ஆளும் வர்க்கத்துடன் இணைந்திருக்கும் இந்தச் செயல் எவ்வளவு இழிவானது என்பதையே இவ்வசனம் வலியுறுத்தப் பார்க்கின்றது.

அந்தக் கதையை மாற்றி கணவன் அடுத்த வீட்டுக்காரியுடன் செல்வதாக உதாரணம் கொண்டிருந்தால் கேட்பவர் வாசிப்பவர் மனதில் அதேயளவு வெறுப்பு எழமுடியாது. கணவன் இரண்டு பெண்டாட்டிக்காரனாக அல்லது பல சின்னவீடுகள் வைத்திருப்பவனாக இருக்கலாம். அதொன்றும் தனது குடும்பத்தை விட்டு அடுத்த வீட்டுக்காரனுடன் சோரம் போகும் மனைவி உருவாக்கும் அளவு ஆட்சேபனைகளை சமூகத்தின் மத்தியில் கிளப்பாது. அந்த ஆண் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றான் என்றோ அல்லது சோரம் போகின்றான் என்றோ சமூகம் குறிப்பிட்டுக் கேள்விப்பட்டு இருக்கின்றோமா?

கடைசியில் பார்த்தால் தனியே பெண்களின் பாலியல் ஒழுக்கத்தினை மட்டும் சமூகம் பூதக்கண்ணாடி போட்டு இழிவாக நோக்க வைக்கும் கைங்கரியத்தினையே முதலமைச்சரின் இவ்வசனம் செய்துமுடிக்கின்றது என்பதைக் காணலாம். அதுவும் அவர்களுக்கு மனித உயிர்கள் என்னும் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய மரியாதையினை எமது சமூகத்தில் இல்லா தொழிக்கின்றது.

ஒவ்வொரு மொழியில் வழங்கக்கூடிய பிரயோகங்கள் எல்லாமுமே காலங்காலமாக எமது சமூகத்தில் நிலவி வந்த ஆண் பெண் உறவுகளை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டன. தமிழில் அவன் என்னும் பதத்துக்கு மரியாதை குறிக்கும் பதமாக அவர் என்னும் சொல் இருக்கின்றது. அவள் என்னும் சொல்லுக்கு மரியாதையுடன் குறிக்கக்கூடிய என்ன சொல் இருக்கின்றது? விபச்சாரத்தில் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டாலும் கூட விபச்சாரி என்கின்ற சொல் பெண்களையே குறிக்கக் காணலாம். விதவை என்கின்ற சொல்லை நாம் உபயோகிக்கும் அளவுக்கு தபுதாரி (மனைவியை இழந்தவன்) என்கின்ற சொல் எமது வழக்கில் உள்ளதா? அப்படிப் பெண்களின் குடும்ப அந்தஸ்து (marital status) முக்கியமான அளவுக்கு ஆண்களின் குடும்ப அந்தஸ்து முக்கியமாகப் போகவில்லை.

இவற்றால்தான் ஒரு சமூகத்திலுள்ள ஆண் பெண் உறவுகளை உருமாற்ற வேண்டின் அச்சமூகத்தின் மொழிப் பிரயோகத்தையும் மாற்றுவது அவசியமாகின்றது. சமீபத்தில் ஸ்கன்டினேவிய நாடொன்றில், அது ஸ்வீடன் என்று நினைக்கின்றேன், ஆண் பெண் சமத்துவத்தினை அங்கீகரிக்கின்ற ஒரு புதிய அகராதியினை வெளியிட்டு இருக்கின்றார்களாம். இது இப்பொழுது அங்குள்ள பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் புழங்க ஆரம்பித்திருக்கின்றது.

ஆங்கில மொழியிலும் கூட அரசியல் ரீதியாகச் சரியான (politically correct) மொழிப் பிரயோகங்கள் வழக்கத்துக்கு வந்திருக்கின்றன. முன்பு Mankind என்பதை இப்பொழுது unmankind என்பார்கள். அவன் என்று மட்டும் குறிப்பிடாமல் எங்கும் அவன் அவள் என்று குறிப்பிடுவார்கள். இதுவரைகாலமும் மனிதன் பிறந்தான், வளர்ந்தான், அவன் கண்டுபிடித்தான் என்று ஆண்பாலிலல்லவா மானிட இனம் முழுவதையும் நாம் குறிப்பதை வழக்கமாகக் கொண்டோம்?

எங்கள் நாட்டிலும் நாம் இனியும் பழமைவாதிகளாக இருக்கமுடியாது. எமது மொழிப் பிரயோகங்களையும் குறிப்பிட்ட எதிர்மறையான படிமங்களைப் பிரதிபலிக்கும் சொற்களையும் பழமொழிகளையும் இல்லாதொழிக்கும் காலம் வந்துவிட்டது. இதனை முன்னின்று செய்ய வேண்டியவர்கள் எமது அரசியல்வாதிகளும் தலைவர்களும் தான். அவர்களுடைய கூற்றுக்களும் உரைகளும்தான் ஊடகங்களில் பிரதான செய்திகளாவதே இதற்குக் காரணமாகும். அதிலும் தமிழ் மக்களாகிய நாங்கள் எமது ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் தமிழ் தலைவர்களிடமிருந்து பால்நிலை சமத்துவமான மொழிநடையை எதிர்பார்க்கின்றோம். ஏனெனில், பால்நிலை சமத்துவமின்றி சகலருக்கும் உரித்தாகும் ஜனநாயகமும் சுதந்திரமும் இருக்கமுடியாதல்லவா?

Oorbook.com யாதும் ஊரே...

ஊருக்கும் உறவுகளுக்குமான சமூகவலைத் தளம்



Oorbook: A Community Portal

Overview

Oorkbook is a comprehensive portal for people believing in collective living. In today's digitized age, social media platforms allow people to connect from all over the world. However, the focus of these social media platforms is too broad and we believe there is an untapped demand for local community building through this technology. With Oorkbook, a person can connect to local events, postings, news-groups and community wide notifications and discussions all under ONE place by simply subscribing to a postal code(s).

Target audience

- Anyone with a vested interest in community events, discussion, notifications and announcements
- Community members looking to post recreational events and to find recreational events from any registered group in their postal code(s)
- Police, government and newsgroups looking to post community wide notifications to members
- Government and civil service groups looking to build an interactive relationship with the community

Functionality and Design

With Oorbook, users register for the site and then set their geographic locations. These locations can be set by name or by map. Once users have set their geographic location(s) of up to 3 locations, they will be prompted to choose their interests. They can immediately start searching and posting. The interests chosen by the user will determine what the users' home page for the site displays when they are logged in. For example, if the user is interested in recreation events they will see postings about those invents in their geographic area(s). Although users are limited in their number of chosen geographic locations to ensure the user experiences community wide interaction, their amount of interests is not limited.

In addition to choosing defaults interests, users can also create their own interest groups for their geographic areas and have other users subscribe to that group. This allows community members to customize the oorbook experience for themselves. If users wish to chose to share their discussion or interest group with other social media platforms they can do so as well.

Significance

We believe that Oorbook can significantly change the way we look at local community building. The rise of the internet and social media has seen the rise of many internet communities that are not bound by geographic locations. However, the scope of these communities is too large to effectively bring people closer to their geographic physical community. Oorbook will allow users to familiarize themselves with people, groups, events and discussions that are significant to their home communities. We hope that anyone interested in this project sees the potential of Oorbook and our vision to bring it into existence officially.

ஊர்புக் நேயர்களிடம் ஒரு வேண்டுகோள்:

ஊர்புக் உங்களை உங்கள் ஊருக்கு அழைத்துச் சென்று உங்களது உற்றார் உறவினருடனும் நண்பர்களுடனும் இணைக்கும் சமூக வலைத்தளம். எனவே நீங்கள் உங்களது சொந்தப் பெயரில், அல்லது ஊரில் அறியப்பட்ட பெயரிலேயே இணைந்துகொள்வது ஏனையவர்களால் இலகுவில் இனங்கண்டு உரையாடவும் தமது எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளவும் உதவிகரமாக இருக்கும். அறியப்படாத புனைபெயர்களில் ஒரு ஊருக்குள் உள் நுழைந்து ஊர்புக்கின் நன்நோக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் வகையில் நடந்துகொள்பவர்களை ஊரவர்களே இணைந்து ஒதுக்கி வைப்பதற்கான ஏற்பாடுகள் ஊர்புக்கில் இருப்பினும் அவற்றைத் தவிர்பதற்கே இவ் வேண்டுகோள்.

போலிங் பூத் (Polling Booth)

உங்கள் ஊரில் ஏதேனும் விடயம் தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடாத்தலாம். அல்லது ஏற்கெனவே ஊர்புக் கில் நடாத்தப்படும் வாக்கெடுப்பிலும் கலந்துகொள்ளலாம்.

கிராமசேவகர் பிரிவு

இலங்கையில் உங்கள் கிராமசேவகர் பிரிவையோ, போஸ்டல் கோர்டையோ அறிய வேண்டுமா? ஊர்புக்கில் "அட் லொகேஷன்" இற்குச் சென்று அங்குள்ள "சேர்ச் டேட்டாபேஸ்" இல் உங்கள் ஊரின் பெயரை இட்டால் போஸ்டல் கோர்ட், கிராமசேவகர் பிரிவின் இலக்கம், மாவட்டம், மாகாணம் யாவற்றையும் பட்டியலாகத் தரும்.

ஊர்புக்கில் விரைவில்:

உங்கள் ஊருக்கேயுரிய பிரத்தியேகமான அறிவித்தல்களை உங்கள் அரசாங்கமோ, அல்லது உள்ளுராட்சிச் சபையோ ஊர்புக் கூடாக உங்களுக்கு அறியத்தரலாம்.

உதாரணமாக உங்கள் பிரதேசத்தில் நாளை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை மின்சாரம் துண்டிக்கப்படிருக்கும் என்ற அறிவித்தலை ஊர்புக் கிலுள்ள அறிவிப்புப் பலகையில் மின்சாரசபை உங்கள் பிரதேசத்துக்கு மட்டும் அறிவிக்கலாம்.

உங்கள் Resumeகளை ஊர்புக் லேபர் மார்கெட்டில் நிரந்தரமாக சேமித்து, அவ்வப்போது புதுப்பித்து, வைத்துக்கொள்ள வசதி கிட்டவுள்ளது. உலகெங்குமுள்ள வேலை வழங்குநர்கள் எந்தவேளையிலும் உங்களைத் தேர்வு செய்யக்கூடியவாறு தயாராக இருங்கள்.

உங்களிடமுள்ள மூலப்பொருட்கள், முடிவுப் பொருட்கள், சேவைகள் பற்றி விபரங்களை ஊர்புக்கின் Bulk Sale Officeல் பதிவுசெய்து கொள்வனவாளர்களுக்கு அறியத்தருவதன் மூலமாக அவர்களுக்கு எப்போதும் கிட்டக்கூடியவர்களாக இருங்கள்.

ஊர்புக் கில் விளம்பரம் செய்ய...

ஊர்புக் கில் 2015 பொங்கல் தினத்திலிருந்து நீங்கள் விரும்பிய ஊர்களில் விளம்பரம் செய்யலாம். விளம்பரங்களைப் பற்றிய விபரங்கள் விரைவில் அறியத்தரப்படும்.

Oorbook.com புதிதாக ஒரு சோஷல் மீடியா

– லாவண்யா –

நான் ஒரு சோஷல் மீடியாப் பிரியை. தமிழில் சமூக வலைத்தளம்-அதுதான் என் உலகம். பேஸ் புக் வந்ததும் எனக்கு ரொம்பக் குஷி. விதம் விதமாய்ப் படங்கள் போட்டு லைக் வாங்கிக் குவித்தேன். நக்கலும் குத்தலுமாய்க் கொமெண்டுகள் போட்டு நண்பர்களைச் சீண்டினேன். வாங்கிக் கட்டியும் இருக்கிறேன்.

பின்னர் டுவிட்டர் பக்கம் கொஞ்சம் மினக்கெட்டேன். நிறையப் பேரைப் பின்தொடர்ந்து பார்த்தேன். எனக்கும் பல பலோவர்ஸ். பின்னர் லிங்க்ட் இன் சென்று என்ர கேரியரில் இருக்கும் பலரை அறிமுகம் செய்துகொண்டேன். இவை எல்லாமிருக்க, இப்போது நான் ஊர் புக்கில் உலவுகிறேன்.

ஊர் புக் எனக்கு ஒரு சைக்கிள் எடுத்துக்கொண்டு எனது ஊருக்குள் உலாவரும் அனுபவம். எங்கோ இருந்துகொண்டு எனது ஊரில் என்ன நடக்கிறதென்று விடுப்புப்பார்த்து, அங்குள்ளவர்கள் பேசிக் கொள்வதையெல்லாம் அறிந்து, நானும் நாலு கதைகள் பேசியபடி பம்பலாய் போகுது பொழுது. வித்தியாசம் என்னவென்றால் இங்கே இடங்கள் வாரியாய் குழுக்கள் அமைத்துப் பேசுகிறோம். அதாவது நான் எனது விருப்பம்போல் ஐந்தாறு இடங்களைத் தெரிந்தெடுத்து அவ்வவ் இடங்களிலுள்ள குழுக்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வேன். இலங்கையில் மானிப்பாய் தெற்கைத் தெரிந்தெடுத்து அவர்களோடு மானிப்பாய் இந்துக்கல்லூரி விடயமாகப் பேசுவேன். கனடாவில் ஸ்காபுறோ ரூஜ்றிவரைத் தெரிந்தெடுத்து, இவர்களிடம் எம் தெருக்களில் உடனுக்குடன் பனி அகற்றவைக்க என்ன செய்யலாமென ஆராய்வேன். இது ஒரு ஊர்ச்சங்கம் கூடிப் பேசுவதுபோல. எங்கெங்கோ வாழும் ஊரவர்கள் கூடிப் பேச இது நல்ல வாய்ப்பு. கும்பலில கோவிந்தாபோலக் கூச்சல்போடாமல், எல்லோரும் பேசுவதை எல்லோரும் கேட்டு எல்லோருக்குமே பதிலளிக்க நல்லதொரு வசதியான ஏற்பாடு.

ஊர்புக் வந்ததால் எங்கள் ஊர்ச்சங்கங்கள், பாடசாலைச் சங்கங்களெல்லாம் பணம் செலவுசெய்து தனித்தனி வெப்சைட்டுகள் செய்து, அதைப் பராமரிப்பதற்கு வேறு ஆட்கள் அமர்த்தி நேரம் ஒதுக்குவதெல்லாம் இனித் தேவையில்லை என்றாக்கி விட்டது. அதெல்லாவற்றையும் எந்தச் செலவுமில்லாமல் இனி ஊர்புக்கிலேயே அவர்கள் செய்துகொள்ளலாம். அதனால் ஒரே மையத்திலேயே என்னைப்போன்ற அனேகம்பேர் அவற்றைப் பார்த்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் முடியும்.

இந்த ஊர்புக்கில் சுவாரசியமான விடயம் என்னவென்றால் எந்த வகையான விடயம் பேசவேண்டுமோ, அந்த வகையைமட்டும் இடப்பக்கத்திலுள்ள பட்டியலிலிருந்து தெரிந்தெடுத்து, அதில் எனது தலைப்பொன்றைப் போடுவேன். அந்தத் தலைப்பின்கீழ் நான் விரும்பியபடி ஒவ்வொரு உபதலைப்பைப் போட்டு, பிரித்துப் பிரித்து விடயங்களை எழுத முடியும். அவற்றில் படங்கள், வீடியோக்கள் ஆடியோக்கள் எதையும் போட வசதி உள்ளது. இப்போ நான் சினிமா பற்றி எழுத விரும்பினால் "ஆர்ட் அன் கல்ச்ர்" என்ற பிரிவுக்குள் போய், சினிமா என்று தலைப்பை இடுவேன். இனி அதன்கீழ் கத்தி படம் பற்றி ஏதும் கூற நினைத்தால் கத்தி என்ற உபதலைப்பிட்டு அதுபற்றி எழுதுவேன். பின்னர், அதே சினிமா தலைப்பின்கீழ் "திரைக்கதை" என்று இன்னோர் உபதலைப்பிட்டு அதுபற்றியும் எழுதுவேன். இல்லை, "பொலிடிக்ஸ்" என்ற பிரிவுக்குள் போய் "இலங்கை ஜனாதிபதி தேர்தல்" என்று தலைப்பிட்டு, தமிழர் யாரை ஆதரிப்பது என்ற உபதலைப்பிட்டு அதுபற்றிப் பேசுவேன். எனது கருத்துக்கு பலர் பதில் எழுத, அவர்களுக்கு நான் திரும்பப் பதிலெழுத, அவர்களும் தங்களுக்குள் ஒருத்தருக்கொருத்தர் பதிலெழுத... விவாதம் விரிந்துகொண்டே போகும். விடயம் சூடுபிடித்ததும் படு-சுவாரசியம் தொத்திக்கொள்ளும். ஒவ்வொரு பிரிவிலும் என்னென்ன தலைப்புகளில் விவாதிக்கிறார்களென்பதையெல்லாம் அப்பிரிவுகளைத் தொட்டதும் காட்டிவிடும். விரும்பிய தலைப்புக்குள் நானும் போய் விவாதிப்பேன். எனது கருத்துகளுக்கு எத்தனை பதில்கள் வந்திருக்கின்றன என்பதும் அங்கு தெரியும். ஒவ்வொரு தலைப்புக்கும் லைக், அண்லைக் போடலாம். அதேவேளை நான் ஊர்புக்குக்கைத் திறந்த கையோடு, அதில் அதிகம் விவாதிக்கப்படும் விடயங்கள் என்னென்ன என்ற விபரங்கள் அங்கே ஓடிக்கொண்டிருக்கும். அவற்றைப் பார்த்ததும் எனக்கு இருப்புக்கொள்ளுமா என்ன?

எனக்குப் பிடித்த விடயம் இதில் என்னவென்றால், நபர்களைவிட பேசுகின்ற விடயத்துக்குத்தான் இங்கே முக்கியத்துவம். அதை அறிவதற்கு பேசுபவர் யாரென்று எனக்குத் தெரிந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. எனது ஊரைத் தெரிவு செய்த எவரும் அங்கு பேசலாம். மற்றவர்கள் அங்கு பேச முடியாது, ஆனால் என்ன நடக்கிறதென்று பார்க்கலாம். அதாவது இது ஒரு சங்கம் போல. எங்கள் சங்கத்தில் சேராதவர்கள் அங்கு கருத்துக்கூற முடியாதுதானே. இல்லை நீங்களும் பேச வேண்டுமா? சுலபம், எங்கள் ஊரைத் தெரிவு செய்துவிடுங்கள்!

இவற்றைவிட மற்றொரு வசதியை நான் சொல்லியே ஆகவேண்டும். அதுதான் போலிங் புத்! அதாவது, இங்கு நாம் விரும்பியவற்றுக்கெல்லாம் அபிப்பிராய வாக்கெடுப்புகளும் நடத்தலாம். எமது சங்கத் தலைவரை, உறுப்பினர்களைத் தெரிந்தெடுக்க நாமே வாக்கெடுப்பு நடத்தலாம். நாம் விவாதித்த ஒரு விடயத்தில்கூட அதற்கு ஆதரவானவர்கள் எதிரானவர்கள் எவ்வளவுபேரெனக் காண வாக்கெடுப்பு வைக்கலாம். எங்கள் ஊர் பியூட்டி குயின் யாரென்றும் ஒரு சுவாரசியமான வாக்கெடுப்பு வைக்கலாமில்லையா? இப்படி நாம் ஊருக்கு ஊர் ஒருபக்கம் வாக்கெடுப்புகளை நடத்த, மறுபக்கம் ஊர்புக்கூட பொதுவாக்கெடுப்புகள் பலவற்றை அடிக்கடி நடத்தும் வசதியும் உள்ளது. அதை அது உலகம் முழுக்கவும் நடத்தலாம், ஒரு நாட்டுக்குள்ளோ, அல்லது மாகாணத்துக்குள்ளோ, மாவட்டத்துக்குள்ளோ, இல்லை ஒரு ஊருக்குள்ளோகூட நடத்தலாம். உதாரணத்துக்கு இலங்கை ஜனாதிபதி தேர்தல் 2015 பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை இலங்கை பூராவும் அவர்கள் நடத்தலாம். இல்லை தமிழ் தரப்பு யாரை ஆதரிக்க வேண்டுமெனக்கேட்டு உலகம் பூராவும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தலாம். இப்படி ஒரு வசதி இருப்பது எம் அரசியல் தலைவர்களுக்கு மக்கள் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள உதவுமல்லவா?

ஊர்புக்கில் இன்னொரு பயனுள்ள விடயமாக எனக்குப்படுவது என்னவென்றால் அறிவிப்புப் பலகை! அரசாங்கங்கள், அல்லது அரசாங்க இலாக்காக்கள் தங்கள் அறிவுப்புகளை இதில் இடலாம். உதாரணத்துக்கு மானிப்பாய் லைபிரரியில் இம்மாதம் இன்ன திகதியில் சிறுவர்களுக்கான போலியோ தடுப்பூசி போடப்படும் என்று யாழ் சுகாதார இலாக்கா அறிவிக்கலாம். இதேவேளை, கனடாவிலும் ஒரு பாடசாலை தமது உயர்தர வகுப்பு புதிய மாணவர்களைச் சேர்க்கும் நாள்பற்றிய அறிவிப்பை இதில் இடலாம். இவ்வாறான அறிவுப்புகளை அவர்கள் ஏரியாவுக்கு ஏற்றவாறு மட்டுப்படுத்திக் கொள்ளலாம். அதாவது ஒரு ஊருக்கான அறிவிப்பை அவ்வூருக்குள்ளும், மாவட்டத்துக்கான, மாகாணத்துக்கான, அல்லது மொத்த நாட்டுக்கான அறிவுப்புக்களை அவற்றுக்குரிய விஸ்தீரணத்திலும் அறிவிக்கலாம். இவ் வசதியை அரசாங்க அமைப்புகள் யாவும் பயன்படுத்தத் தொடங்கியதும் இது காலப்போக்கில் எமக்கு மிகவும் பயனுள்ளதாக அமையுமென நினைக்கிறேன் நான். ஏனெனில் எனது ஊர்புக் பக்கத்திலேயே எல்லா அறிவுப்புக்களையும் உடனுக்குடன் நான் பார்த்துவிடுவேனே.

இவற்றைவிட இங்கு ஒரு கலெண்டரும் இருக்கு. ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு கலெண்டர். அந்தந்த ஊர்களின் நிகழ்வுகள், முக்கிய தினங்கள் யாவற்றையும் திகதிவாரியாக இதில் முற்கூட்டியே பதிவிடலாம்.

நான் வெறும் பொழுதுபோக்காகத்தான் இந்த ஊர்புக்குள்ளே நுழைந்தேன். ஆனால் இங்கே பொழுதுபோக்கு மட்டுமல்லாமல் பயனுள்ள விடயங்கள் பல இருப்பது எனக்கு ஆர்வமூட்டுகிறது. நான் விவாதித்த விடயங்களை அடையாளம் செய்து, பின்னர் மீட்டுப்பார்க்கவும் முடிகிறது. பிறர் கூறிய நல்ல கருத்துக்களையும் அவ்வாறே சேகரித்து வைக்க முடிகிறது.

OORbook
• COM

கேள்வி பதில்கள்

1. ஊர்புக் ஒரு வெப்சைட்டா?

இல்லை, அது சமூக வலைத்தளம். அதாவது பேஸ்புக், டுவிட்டர், லிங்க்ட் இன் போன்று அதுவும் ஒரு சோஷல் நெட்வேர்க். ஆனால் அவற்றிலிருந்து அம்சங்களிலும், செயற்பாட்டிலும் வேறுபட்டது.

2. ஊர்புக் எவ்வாறு ஃபேஸ்புக், டுவிட்டர், லிங்க்ட் இன் போன்றவற்றிலிருந்து வேறுபடுகிறது?

ஊர்புக் அமைவிடங்கள் வாரியாக செயற்படுகிறது. அதாவது ஒவ்வொரு ஊரையும் அங்கு நிகழும் செயற்பாடுகளை மையப்படுத்தி, அவற்றுடன் தொடர்பான மக்களை அங்கு குழுக்களாக இணைக்கிறது. நிகழ்வுகளைப் பற்றி விவாதிக்க வழிசெய்கிறது.

3. ஊர்புக் என்ன செய்கிறது?

ஒரு குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்தவர்கள், அல்லது அவ்வூருடன் ஏதாவது வகையில் தொடர்புடையவர்கள் அவ்வூரில் இருந்துகொண்டோ அல்லது உலகின் எப்பாகத்திலும் இருந்துகொண்டோ அனைவரும் அவ்வூரின் இணையத் தயத்தில் ஒன்றுகூடவும், பலதரப்பட்ட விடயங்களை பகிர்ந்து கொள்ளவும், உரையாடவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும் ஊர்புக் வழிசெய்கிறது. உதாரணமாக, நல்லூரைச் சேர்ந்வர்கள் நல்லூரில் இருந்துகொண்டோ, அல்லது உலகின் எப்பாகத்தில் இருந்துகொண்டோ இச் சமூகவலைத்தளத்தில் நல்லூர் என்ற ஊரினூடாக ஏனையோருடன் இணைந்து தமது கருத்துக்கள், படங்கள், வீடியோக்கள், ஓடியோக்கள் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளவும், நல்லூரின் பல்வேறு விடயங்களைத் தமக்குள் கலந்து முடிவெடுக்கவும் முடியும். அது பாடசாலை விடயமாக இருக்கலாம், சனசமூகநிலைய விடயமாக இருக்கலாம். எதுவாகவும் இருக்கலாம். ஊரில் நிகழ்ந்த ஒரு சம்பவமாகக்கூட இருக்கலாம். அல்லது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியதாகக்கூட இருக்கலாம்.

4. ஊர்புக்கில் வசதியாக கலந்துரையாட முடியுமாமே, மற்றையவற்றைவிட அப்படி என்ன விஷேடம் அதில்?

ஊர்புக் விடயங்களை வகைப்படுத்திக் கலந்துரையாட வழிசெய்கிறது. விபரித்துச் சொன்னால் ஊர்புக் முகப்புப் பக்கத்திலேயே அரசியல், கலை கலாசாரம், கல்வி, பிஸ்னஸ், கொம்யூட்டர், வாகனங்கள், உணவு, வாழ்க்கை முறை, செல்லப் பிராணிகள், விலங்குகள், விளையாட்டு, பொழுதுபோக்கு, சினிமா, உல்லாசப்பயணம் என வெவ்வேறு ஆர்வத்துக்குரிய துறைகளின் பட்டியல் உள்ளது. நீங்கள் விரும்பிய பிரிவுக்குள் சென்று அங்கு நிகழும் கலந்துரையாடலின் தலைப்புக்களைப் பார்த்து, விரும்பிய ஒன்றில் கலந்துகொள்ளலாம். இல்லையேல் நீங்களே ஒரு தலைப்பை எழுதி அதன்கீழ் ஒரு கலந்துரையாடலை ஆரம்பிக்கலாம். அது ஜனாதிபதி தேர்தல் போன்ற சீரியஸான அரசியலாகவுமிருக்கலாம். அல்லது சினிமாபோன்ற பொழுதுபோக்குக்கானதாகவும் இருக்கலாம். அல்லது ஒரு தகவலைப் பரிமாற, வாழ்த்துக்களைத் தெரிவிக்க, வீடியோ ஓடியோக்களைப் பகிர என எதையும் செய்துகொள்ளலாம். அத்தோடு, கலந்துரையாடலை ஆரம்பித்தவருக்கும் ஏனையோருக்குமான உரையாடலும், பங்குபற்றுபவர்கள் தம்மிடையே உரையாடுவதும் வெவ்வேறான ஒழுங்கில் யார் யாருடன் உரையாடுகிறார்கள் என்பது தெளிவாகப் புரியும்படி இங்கே பிரித்துக் காட்டப்பட்டிருக்கும்.

5. ஊர்புக்கில் வேறு என்னென்ன பயனுள்ள அம்சங்கள் உள்ளனவென நான் தெரிந்துகொள்ளலாமா?

இங்குள்ள விஷேடமான கலந்துரையாடல் களத்தைப்பற்றி ஏற்கெனவே சொல்லியுள்ளோம். அதைவிட நீங்கள் வாக்கெடுப்பு நிலையம் (போலிங் பூத்) சென்று வாக்கெடுப்புகள் நடத்தலாம், கலெண்டரில் ஊர் நிகழ்ச்சிகள்பற்றி முற்கூட்டி அறியத்தரலாம், விரைவில் அறிவிப்புப் பலகை (டாஷ் போர்ட்)யில் அரசாங்க அறிவிப்புகளைப் பார்க்கலாம். விற்பனையாளர்கள் கொள்வனவாளர்கள் பயன்படுத்திக்கொள்ளும் பல்க் சேல்ஸ், வேலை வழங்குநர்கள், வேலை தேடுவோர் பயன்படத்திக்கொள்ளும் ஜொப் பாங்க் போன்ற புதிய பல விடயங்கள் இடம்பெறவுள்ளன. விளம்பரதாரர்களுக்கும் மிகச் சாதகமான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

6. ஊர்புக் போலிங் பூத்தை நான் எதற்குப் பயன்படுத்தலாம்?

இது ஒரு வாக்கெடுப்பு நிலையம். இதைப் பல விடயங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்களே உங்கள் ஊர் அங்கத்துவர் மத்தியில் ஒரு விடயம் குறித்து வாக்கெடுப்பு நிகழ்த்தி முடிவெடுக்கலாம். உதாரணமாக உங்கள் ஊர் தலைவரைத் நீங்களே வாக்கெடுப்பு நிகழ்த்தி தெரிவு செய்யலாம். அல்லது உங்கள் தலைப்பொன்றின் கீழான விவாதத்தில்கூட நீங்கள் அந்த வாக்கொடுப்பை நிகழ்த்தி அதை ஆதரிப்பவர்கள் எதிர்ப்பவர்கள் எத்தனை எத்தனைபேர் எனக் கண்டுகொள்ளலாம்.

இதைவிட, ஊர்புக் நடத்தும் பொதுவான அபிப்பிராய வாக்கெடுப்பிலும் நீங்கள் கலந்துகொள்ளலாம். இத்தகைய வாக்கெடுப்புக்களை தேச மட்டத்தில், மாகாண மட்டத்தில், மாவட்ட மட்டத்தில் அல்லது ஊர் மட்டத்தில் என அவ் வாக்கெடுப்புக்குத் தேவையான மட்டத்தில் ஊர்புக் நிகழ்த்தும். இவற்றை ஒரு பொது நோக்கம் கருதியோ, அல்லது அரசாங்க அமைப்புகள், அல்லது நிறுவனங்களின் வேண்டுகோளின் பிரகாரமோ ஊர்புக் மேற்கொள்ளும்.

7. ஊர்புக் கலெண்டர் எமக்கு எப்படிப் பயன்தருகிறது?

இது அந்தந்த ஊர்களைச் சார்ந்தவர்கள் அங்கு நிகழவுள்ள நிகழ்ச்சிகள் மற்றும் விடயங்களை திகதிவாரியாக அறிவிக்கும் பகுதி. அவ் ஊர்களைத் தெரிவு செய்துகொண்ட எவரும் தங்கள் குடும்ப விஷேடங்கள் பற்றிய அறிவிப்புக்களைக்கூட இதில் இடலாம்.

8. ஊர்புக்கின் அறிவிப்புப் பலகையால் எமக்கு என்ன பயன்?

ஊர்புக்கிலுள்ள அறிவிப்பு பலகை (டாஷ் போர்ட்) என்பது அரசு மற்றும் அரச நிறுவனங்கள் தங்கள் அறிவுப்புகளை ஊர்மக்களுக்குத் தெரியப்படுத்தும் இடமாகும். உதாரணமாக உங்கள் ஊரில் போலியோ தடுப்பூசி போடும் நிலையம் தினம் பற்றிய அறிவிப்பை சுகாதாரத் திணைக்களம் அதில் அறிவிக்கலாம். அல்லது எந்தெந்தப் பகுதிகளில் எவ்வெவ் நேரங்களில் மின்வெட்டு என்பதை ஒரு நாட்டின் மின்சாரசபை அந்தந்த ஊர்களைத் தெரிந்து அறிவிக்கலாம். குறித்த ஒரு வீதியில் திருத்தவேலை நடைபெற்றால் அதையும் சூழவுள்ள ஊர்களுக்கு அறிவிக்கலாம். இத்தகைய அறிவிப்புக்களை முழுநாட்டுக்கோ, அல்லது குறிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ஊர்களுக்கு மட்டுமோ உரிய அரசாங்க மட்டங்கள் அறிவிக்கலாம்.

9. ஊர்புக்கில் நான் எப்படி இணைவது?

இரண்டு வகையில் இணையலாம். முதலில் நீங்கள் oorbook.com ற்குச் செல்லுங்கள். அங்குள்ள "சைன் அப்" படிவத்தில் கேட்கப்பட்ட விபரங்களை நிரப்பி இணையலாம். அல்லது நீங்கள் ஃபேஸ்புக், டுவிட்டர் போன்ற வேறு சமூக வலைத்தளங்களில் ஏற்கெனவே இருந்தால் அவற்றின் அடையாளக் குறிகளை கிளிக் செய்து ஊர்புக் கில் இணைவதற்கான சம்மதமாக ஓகேயை கிளிக்செய்தும் சுலபமாக இணையலாம். ஊர்புக் என்பது பரந்த உலகு. உள்ளே நுழைந்து உங்கள் ஊர்களில் உலாவுங்கள்!

10. ஊர்புக் கில் எனது கிராமத்தை உருவாக்குவது எப்படி?

எந்தவொரு கிராமத்தையும் நீங்கள் ஊர்புக் கில் உருவாக்க வேண்டியதில்லை. ஊர்புக் உலகின் அத்தனை கிராமங்களையும் தனது இணையத்தில் பதிவு செய்துள்ளது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் இணையக் கிராமத்துக்குச் செல்லவேண்டியது மட்டும்தான். அங்கிருக்கும் உங்கள் நண்பர்கள் உறவினர்களுடன் இணைந்துகொள்ளுங்கள். இல்லாதவர்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

11. நான் விரும்பும் ஊர்களுக்குச் செல்வதற்கான வழி என்ன?

மிகவும் சுலபம். "அட் லொக்கேஷன்" ஊடாக அவற்றுக்குச் செல்லலாம். "அட் லொக்கேஷன்" நீங்கள் ஊர்புக் கில் சேர்ந்ததும் தானாக உங்கள் முன் தோன்றும். நீங்கள் முன்னரே ஊர்புக்கில் சேர்ந்திருந்து மேலும் புதிய ஊர்களில் சேர விரும்பினால் உங்கள் ஊரைகாட்டிநிற்கும் வரியின் அம்புக்குறியை கிளிக் செய்ததும் விரியும் பட்டியலில் "அட் லொகேஷன்" இருக்கும். அதைக் கிளிக் செய்ததும் "சேர்ச் டேட்டா பேஸ்" மற்றும் "சேர்ச் மப்" என்ற இரு பகுதிகளைக்கொண்ட பெட்டியொன்று திறக்கும். அங்கு, "சேர்ச் டேட்டா பேஸ்" என்ற பகுதியில் அவ் ஊரின் பெயரையோ போஸ்டல் கோர்டையோ இட, அப் பெயரை ஒத்த பெயர்ப்பட்டியல் வரும். சரியானதை

தெரிவு செய்து "அட் லொக்கேஷன்" என்ற பச்சை பட்டனை அழுத்தியதும் அவ் ஊரில் நீங்கள் சேர்ந்துகொள்வீர்கள்.

ஒருவேளை உங்கள் ஊர் டேடாபேசில் இல்லையா? கவலை வேண்டாம், நீங்கள் மெப் மூலமாகவும் விரும்பிய ஊரில் சேரலாம். அருகேயுள்ள "சேர்ச் மெப்" என்பதை கிளிக் செய்யுங்கள். உலக வரைபடம் ஒன்று உடனே தோன்றும். அதன் அடியிலுள்ள தேடும் பெட்டியில் உங்கள் ஊரின் பெயரை டைப்செய்து தேடும் பட்டனை அழுத்த, அவ் ஊரையொத்த பெயர்களை வரைபடத்தில் பெயரிட்டுக் காட்டும். சரியானதை தெரிந்து அடியிலுள்ள "செட் லொக்கேஷன்" பட்டனை கிளிக் செய்ய, நீங்கள் சேரவிரும்பும் ஊர் காண்பிக்கப்படும். "அட் லொகேஷன்"னை கிளிக் செய்து இந்த ஊரை உங்கள் பட்டியலில் இணைத்துக்கொள்ளுங்கள்.

12. நான் கனடாவில் காபுறோவில் இருக்கிறேன். இலங்கையில் மானிப்பாய் தெற்கைச் சார்ந்தவன். எந்த ஊரை நான் தெரிவுசெய்வது?

கவலைப்படாதீர்கள். நீங்கள் இரண்டையுமே தெரிவு செய்யலாம். ஏனெனில் நீங்கள் 3 ஊர்கள்வரை இப்பொழுது தெரிவு செய்யலாம். அவை அனைத்திலும் நிகழும் வேறுபட்ட கலந்துரையாடல்கள் மற்றும் அனைத்து விடயங்களிலும் பங்கேற்கலாம்.

13. துஷ்பிரயோகங்களை முறையிடுவது எப்படி?

ஒவ்வொருவரது கருத்துக்கும் அருகே துஷ்பிரயோகங்களை முறையிடுவதற்கான குறியீடு இருக்கும். அதை கிளிக் செய்து முறையிடலாம்.

14. ஊர்புக்கில் விவாதிக்கும் விடயங்களை ஏனைய சமூக வலைத்தளங்களிலும் பகிரமுடியுமா?

முடியும். முகப்பில் தரப்பட்டிருக்கும் ஏனைய சமூக வலைத்தளங்களின் அடையாளங்களைக் கிளிக் செய்து அவற்றிலும் பகிரலாம். இவ்வாறு பகிரும்போது, நீங்கள் பகிரப்படும் விடயம் பற்றிய குறிப்பொன்றை எழுதுவது உங்கள் பகிர்வைத் தவறாது பார்ப்பதற்குத் தூண்டும்.

15. ஊர்புக் தமிழ்த் தேசியத்துக்கான தனித்துவமான ஒரு சமூக வலைத்தளமா?

இல்லை, ஊர்புக் , "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற 18 நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்ப் புலவர் தெணியன் பூங்குன்றனார் எடுத்துரைத்த அனைத்துலகப் பிரகடனத்தை பொய்யாமொழியாகப் பேண முனைகின்ற தமிழரது முயற்சி. அதாவது இது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. எந்த நாட்டவரும் பயன்படுத்தலாம். உலகின் எப்பாகத்திலுள்ள ஊர்களிலும் இதைப் பயன்படுத்தலாம்.

16. ஊர்புக் கில் தமிழில் எழுத முடியாதா?

தற்போது நேரடியாக ஆங்கிலத்தில்தான் எழுதலாம். ஆனால் யுனிகோர்ட் பாவித்து தமிழில் எழுதியதை இங்கே பிரதிசெய்து ஒட்டிக்கொள்ளலாம். விரைவில் ஊர்புக்கில் 86 மொழிகளில் நேரடியாக எழுதக்கூடிய ஏற்பாடு செய்யப்படும்.

யாதும் ஊரே...


@ GTA Square
Friends
MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email லுடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
Sri Lanka
Ph: 94-112-363663
No-11-2/1, 33rd lane,
Wellawatta,
Canada
Info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257


Western Jewellery
Finest Quality 22k Gold
Specialized in
Singapore and Dubai
பழைய நகைகள்
நியாயவிலைகளில்
பெற்றுக்கொள்ளப்படும்.
அசல் 22 கரட்
தங்க வைர நகைகளை
அதி நவீன டிசைன்களில்
உங்கள் எண்ணம் போல்
பெற்றுக்கொள்ளலாம்.
ஏழு நாட்களும்
திறந்திருக்கும்
நம்பிக்கை - நாணயம் - கைராசி
சர்வதேச துரித பணமாற்றுச் சேவை!
Tel: 416.335.9500, Cell: 416.627.5434
GTA Square Mall, 115-5215 Finch Ave. E,
Scarborough, On. M1S 0C2


GANESHA
TAKEOUT & CATERING
விழாக்களுக்கான கொழுக்கட்டை, மோதகம்,
பலகார ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
Tel: 905-305-0522 | Cell: 416-358-5225


Mornelle I·D·A Drug Mart
இது உங்கள் மருந்தகம்
அனைத்து மருந்துவத் திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்
We accept all drug plans
முதியோர்களுக்கும்,
சமூகநல உதவி
பெறுபவர்களுக்கும் $2
அறவிடப்படமாட்டாது
We do not charge $2
deductible for seniors &
welfare recipients
தமிழில் உரையாடி உங்கள் மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்
Contact: Jeyanthy or Chiman Mistry (Jimmy)
Tel: 416-289-2010
fax: 416-289-4064
1288 MARKHAM RD., SUITE 161, [AT ELLESMERE] SCARBOROUGH, ON, M1H 3C3

பொலிவுதரும் காலணிகள்

காலணிகள் நாகரிகத்தின் அடையாளமாக மட்டுமல்லாமல்– உடல்ஆரோக்கியத்தின் பாதுகாவலானாகவும் திகழ்கிறது. ஒரு காலத்தில் மேட்டுக்குடி மக்கள் மட்டுமே அணியக்கூடிய பொருளாக இருந்த அது இன்று எல்லோரது கால்களிலும் இடம்பிடித்து விட்டது.

நமது உடலை தூக்கி சுமப்பது கால்கள். சுகாதாரமற்ற இடங்களிலும் நடக்கும் போது, கால்கள் நோய்க் கிருமிகளைத் தொடுகின்றன. பாதங்களைச் சரியாகப் பராமரிக்காவிட்டால், அந்த நோய்க்கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாகுகிறோம். அதனால்தான் வெளியே சென்றுவிட்டுத் திரும்பியதும், கால்களை நான்றாகக் கழுவி சுத்தம் செய்துவிட்டு வீட்டிற்குள் செல்லும் பழக்கம் ஏற்பட்டது. ஆனால் இப்போது அந்தப் பழக்கம் இல்லை. ஒரு சில இடங்களில் இருந்தாலும் ஏதோ சடங்குபோல் கால்களில் தண்ணீர் ஊற்றி நனைத்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடிவிடுகிறார்கள்.

ஆதி மனிதனும் காலணி அணிந்திருக்கிறான். அவனுக்கு அப்போது எந்த மூலப்பொருள் கிடைத்ததோ அதைவைத்து அவன் தனக்கு காலணிகளை உருவாக்கிக் கொண்டான். காலம் மாற மாற காலணிகளும் நவீனமயப்பட்டு வந்திருக்கின்றன.

பெண்களுக்கென்றும், ஆண்களுக்கென்றும் தனித்தனி வடிவங்களில்ப் பல்வேறு டிசைன்களில் கிடைக்கின்றன. ஆடைக்கு ஏற்ற வகைகளில் எல்லாம் காலணிகளை அணிந்து அழகுபார்க்க முடிகிறது. காலணிகளைப் பற்றிய ஆய்வு ஒன்று "பிரான்சு, அமெரிக்காவுக்கு அடுத்த படியாக இந்தியாவில் தான் அதி நீவீன காலணிகள் பயன்படுத்தப்படுகின்றன" என்று குறிப்பிடுகின்றது.

மிருகங்களின் தோலில் செய்யப்படும் காலணிகள் நீடித்து உழைக்கக் கூடியது. ஆனால் ஒரு சிலருக்கு அவைகள் ஒவ்வாமையை ஏற்படுத்தும். கவனிக்காமல் விட்டால் கால்கள் புண்ணாகிவிடும்.

ஒருவருடைய காலணி சரியில்லை என்பதை அவரது முகத்தைப் பார்த்தே கண்டுபிடித்துவிடலாம். முரண்பாடான காலணியால் ஏற்படும் உபாதைகள் மூளைவரை சென்று ஒருவரின் மனநிலையை மாற்றும். உடலுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தும். ஆதலால் உடலுக்குப் பொருத்தமான காலணிகளைத் தேர்வு செய்யவேண்டியது மிக அவசியம்.

ஒருவருக்குப் பொருந்தும் காலணி இன்னொருவருக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. காலின் அமைப்பு உடலின் எடையை பொறுத்து, எவ்வளவு அழகான காலணியாக இருந்தாலும் காலில் போட்டு கொஞ்சத் தூரம் நடந்து பார்க்கவேண்டும். நாம் அணியும் காலணிகளில் நாகரிகம் புகுந்து கொண்டது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தான். அவர்கள் அந்தஸ்துப் பெற்றவர்கள் பிரபுக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் ஆடைகள் மண்ணில் புரளாமல் பாதுகாக்கவும், தங்களை உயர்குடி மக்கள் என்று காட்டிக்கொள்ளவும் விதவிதமாகப் பெரிய காலணிகளை அணிந்தார்கள். இந்தியாவில், ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தான் பள்ளிகளில், காலணி அணியும் வழக்கம் கட்டாயப்படுத்தப்பட்டது. இது குழந்தைகளின் கால்களைப் பாதுகாக்கவும், தொற்று நோய்கள் பரவாமலிருக்கவும், உடலின் தட்ப வெப்பத்தைச் சீராக வைத்திருக்கவும் பயன்படுத்தப்பட்டது. குழந்தைகள் வளரும் பருவத்தில் கால்கள் அழகான வடிவத்தைப் பெறவும் அன்றைய காலணிகள் உதவின. வெள்ளைக்காரர்கள் நமக்கு கற்றுக்கொடுத்த பழக்கத்தில் இது ஆரோக்கியமான பழக்கவழக்கம்.

கார்ப்பிணிப் பெண்கள் அணியும் காலணிகள் மிக மென்மையாக இருக்கவேண்டும். வழுவழுப்புடைய பிளாஸ்டிக் காலணிகளை அவர்கள் அணியக்கூடாது. காலணியால் கர்ப்பிணிப் பெண்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டால் அது அவர்களது வயிற்றிலிருக்கும் சிசுவையும் பாதிக்கும் என்பது ஆய்வுரீதியான உண்மையாகும்.

கர்ப்பிணிகளின் மகிழ்ச்சி, கோபம், சோர்வு அனைத்தும் வயிற்றில் இருக்கும் சிசுவிடமும் தாக்கத்தை ஏற்படுத்தும். காலணிகள் அசௌகரியமாக இருந்தால் அதனால் கர்ப்பிணிக்கு ஏற்படும் உணர்வு ரீதியாக மாற்றங்களும் சிசுவைத் தாக்கும். அதனால் சில நாடுகளில் வருங்காலத் தலைமுறையைச் சிறப்பாக உருவாக்க, கர்ப்பிணிகளுக்கு அரசே இலவசமாக விசேஷ காலணிகளை வடிவமைத்துக் கொடுக்கிறது. அது மென்மையாக, மணத்தோடு தயார் ஆகிறது.



எந்த வகையான உடையானாலும் காலணி இல்லாமல் அங்காரம் முழுமையடையாது. நாம் அணியும் உடைக்கேற்ற காலணிகள் நமது அழகையும் மேம்படுத்திக்காட்டுகின்றன.

கறுப்பு நிற முழு நீள அனார்க்கலி உடைக்கு சிவப்பு நிற ஷூ பொருத்தமாக இருக்கும். இளம்பச்சைநிற உடைக்கு கரும்பச்சைநிறக் காலணி அழகாகக் காட்சியளிக்கும். மஞ்சள், ரோஸ் நிற உடைக்கு அதே நிற காலணிகள் பொருந்தும். குள்ளமாக இருப்பவர்கள் சற்று தடிமனான காலணிகள் அணியலாம். அகலமான கால்களுக்கு டிசைன் போட்ட காலணிகள் சிறந்தது. கால்களைப் பெரிதாகக்காட்ட பெரிய காலணிகளை வாங்கக்கூடாது. அது நடக்க அசௌகரியமாக இருக்கும். அடர்ந்த நிறம் கொண்ட காலணிகளை அவர்கள் பயன்படுத்தவேண்டும். காலணிகளை அழகுபடுத்தும் கலை இப்போது அதிகரித்து வருகிறது. சிறு மணிகள், பூக்கள், ஜரிகை வேலைப்பாடுகளுடன் அழகு படுத்துகிறார்கள். அத்தகைய காலணிகள் பெண்களை அதிகம் கவர்ந்து ஈர்க்கிறது.



குழந்தைகளும் சிறுவர்களும் அணிந்திருக்கும் உடைகளுக்கு பொருத்தமாக காலணி அணிந்தாலும் மிக அழகாக இருக்கும். ஆனால் அதில் அதைவிட சௌகரியம் முக்கியம் என்பதை உணர வேண்டும்.

அரசர்கள் காலத்தில் காலணிகள் தயாரிப்பில் வினோதங்கள் நிகழ்ந்துள்ளன. விதவிதமாக காலணி அணியும் ஆர்வமுடைய ராஜஸ்தான் மன்னர்கள் காலணி தாயரிக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு கிராமத்தையே ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவுரங்கசீப் மன்னன் தன்னுடைய காலணியை பெரிய தாம்பாளத்தட்டில் வைத்து ஒரு வீரனிடம் கொடுத்து ஊரூராகச் சென்று வரி வசூலித்து வர அனுப்பியிருக்கிறார். சிற்றரசர்கள் அந்தக் காலணியை வணங்கி மரியாதை செய்து அந்த வீரனிடம் வரி கொடுத்து அனுப்பவேண்டும். அந்தச் செருப்பைத் தூக்கிக்கொண்டு தங்கள் எல்லைக்குள் நுழைந்தவர்களை சில மன்னர்கள் நையப் புடைத்தும் அனுப்பியிருக்கிறார்கள். இதிகாச காலத்தில் ராமனின் காலணி சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்தது.

மக்கள் காலணிகளைப் பெருமளவு அணிய ஆரம்பித்ததும் புதிய தொழிநுட்பங்களும், நவீன கருவிகளும், கற்பனைகளும் அதில் புகுத்தப்பட்டன. பல்வேறு மூலப்பொருட்களைக் கொண்டு, வெளிநாட்டு உதவியுடன் நவீன எந்திரங்களைக் கொண்டும் உலக அளவில் தற்போது காலணிகளை தாயரிக்கிறார்கள். புதிதாக காலணி தயாரிப்பில் ஈடுபட்ட ஒரு தொழிலதிபர் தன் தயாரிப்பை சர்வதேச அளவில் விற்பனை செய்ய திட்டமிட்டு தன் உதவியாளர்கள் இருவரை ஆபிரிக்காவிற்கு அனுப்பினார்.

ஆபிரிக்கா சென்ற ஒருவர் திரும்பி வந்து "காட்டுப்பயலுக ஒருத்தன் கூட காலில் செருப்பு போட மாட்டேங்கிறானுங்க அங்கெல்லாம் நம்ம செருப்பு வியாபாரம் ஆகாது" என்றார்.

உடனே மற்றொருவர் "நாம் தயாரிக்கும் செருப்பு அத்தனையும் வியாபாரமாகக் கூடிய ஒரே இடம் ஆப்பிரிக்காதான். ஒருத்தரும் செருப்பு போட்டலை. செருப்பின் பயனபாடு அவர்களுக்கு தெரியலை. அதைப் புரிய வைத்துவிட்டால் நம் காலணி மொத்தத்தையும் அந்த நாட்டிலேயே விற்றுவிடலாம்" என்றான். இப்படி ஆரம்பித்த காலணித் தொழில் இப்போது கொடிகட்டிப் பறக்கிறது. பிரபலங்கள் பல வண்ணங்களில் வடிவங்களில் நூற்றுக்கு மேற்பட்ட தினுசுகளில் காலணி வைத்திருக்கிறார்கள்.

நீங்கள் முன்பு படித்த வளாகத்திற்கு, பின் எப்போதாவது போனதுண்டா? ஒருகாலத்தில் உங்களுக்கு நெருக்கமாயிருந்த இடங்கள் அந்நியமாகிப் போயிருப்பதை உணர்ந்திருக்கின்றீர்களா? அல்லது புதிய மாணவர்களின் மலர்ச்சியான முகங்களைப் பார்த்தபின், இன்னும் கொஞ்சக் காலம் வளாகத்தில் இருந்து படித்திருக்கலாமோ என்று யோசித்திருக்கின்றீர்களா? கடந்த காலம் விட்டுச் சென்ற சுவடுகள் அழியாமல் இருப்பதும், ஆனால் அதை பின் தொடர்ந்து போக முடியாதென யதார்த்தம் உணர்த்தவும், என்ன செய்வதென்று திகைக்கவும் செய்கின்ற ஒருவராக நீங்கள் இருந்திருக்கின்றீர்களா? அப்படியாயின் நீங்கள் உங்களை ஜெஸியில் அடையாளங் கண்டு கொள்ள முடியும்.



கலைத்துறையில் பட்டம் பெற்று விட்டு, இன்னொரு வளாகத்தில் புதிய மாணவர்களைச் சேர்க்கும் துறையில் ஜெஸி வேலை செய்துகொண்டிருக்கின்றார். வாழ்க்கையும் அவ்வளவு சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. சேர்ந்து வாழ்ந்த காதலி பிரிந்து போகின்றார், ஆடைகளைத் துவைக்கச் செல்லும் இடத்தில் யாரோ ஒருவர் அனைத்து ஆடைகளையும் களவாடியும் செல்கின்றார். வாழ்க்கை என்பது ஆச்சரியங்களினால் மட்டுமில்லை, எதிர்பாராத நெருக்கடிகளினாலும் சூழ்ந்ததென சோர்ந்து போயிருக்கும் ஜெஸியிற்கு ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது.

அவருக்குக் கற்பித்த, மார்க்சியத்தில் ஈடுபாடுடைய பேராசிரியர் கற்பித்தலிருந்து ஓய்வுபெற்றுப் போகின்றார் எனவும், தனது பிரிவுபசார விழாவில் ஜெஸியும் கலந்துகொள்ளவேண்டுமென அழைப்பு விடுக்கின்றார். விழாவில் கலந்துகொள்ள அவ்வளவு பிரியப்படாதபோதும், வாழ்வின் தினசரி நெருக்கடியிலிருந்து தப்பித்துவிடலாமென்பதால் தான் படித்த வளாகத்திற்கு நீண்ட காலங்களுக்குப் பிறகு ஜெஸி போவதற்குச் சம்மதிக்கின்றார்.

பதின்மம் மெல்லியதாகக் கரைந்து முடிகின்ற ஒருகாலத்தில் வளாகம் சென்றிருக்கின்றீர்களா? அப்படியானால் என்னோடும், என்னை அடையாளங் கண்டுகொள்கின்ற ஜெஸியோடும் சேர்ந்து சற்று வாருங்கள். ஜெஸியைப் போலவே மீண்டும் நீண்ட காலங்களுக்குப் பின் வளாகம் செல்லும் உங்களையும் அந்தச் சூழல் வசீகரிக்கவேசெய்யும். வாழ்வில் கசப்பான காலங்களைச் சந்தித்திருந்தாலும் வாழ்வு இன்னும் சலிக்காது உயிர்ப்புடன் இருப்பதைப் போல, உங்களுக்கு வளாகம் எவ்வகையான நினைவுகளைத் தந்திருந்தாலும், நீங்கள் நுழையும்போது உங்களை யறியாது goosebumps களைத் தருவதை இப்போது உணர்கின்றீர்களல்லவா?

ஜெஸி வளாகத்திற்குள் நுழையும்போதே ஒரு பதின்மராகிவிடுகின்றார். வழி நெடுக இருக்கும் பெஞ்சுகளில் ஏறிக்குதிக்கிறார். கடந்து போகும் அனைவரையும் பார்த்துப் புன்னகைக்கின்றார். உற்சாகமிகுதியில் புல்வெளியில் படுத்துக்கிடந்தபடி திறந்த வானத்தை மனம் நிறைந்து இரசிக்கிறார். இனி ஜெஸியைப் பிரித்துப் பார்க்கவே முடியாது. நீங்கள், நான், ஜெஸி எல்லோரும் கிட்டத்தட்ட ஒருவராகப் போய்விடுகின்றோம்.

நாம் இப்போது எமக்குப் பிடித்த பேராசிரியரைச் சந்திக்கின்றோம். பிரிவுபசார நிகழ்வில் பேராசிரியரின் நண்பர்களுடன் அளாவுகின்றோம். அங்கே தற்செயலாக அந்த நண்பர் ஒருவரின் மகளையும் சந்திக்கின்றீர்கள். அவளுக்கு நீங்கள் எப்படியும் பெயரிட்டுக் கொள்ளலாம். எளிதாக இருப்பதற்கு ஸிபி என அவளை அழைத்துக் கொள்கின்றேன். ஆரம்ப அறிமுகத்திற்குப் பிறகு அவளை நீங்கள் சந்திக்கும் எத்தனையோ பெண்களில் ஒருவரென மறந்தும் விடுகின்றீர்கள்.





இடையில் நீங்கள் நீளமொரு இரவில் ஒரு வித்தியாசமான மனிதனை வளாகத்துப் பெஞ்சில் சந்திக்கின்றீர்கள். அவன் உங்களுக்கு விநோதமானவாத் தெரிந்தாலும், அவனை உங்களுக்குப் பிடித்துவிடுகின்றது. அவன் எளிதில் உங்களுடைய அலுப்பான வாழ்க்கையைக் கண்டுகொண்டதில் இன்னும் ஆச்சரியமடைகின்றீர்கள். இந்த இரவு இப்படியே முடிந்துவிடக்கூடாதென, இசைஅதிரும்மாணவர்களின் கொண்டாடத்திற்குக் கூட்டிச் செல்கிறான். மகிழ்ச்சியாயிருக்கும் மாணவர்களிடையே உங்களை ஒருவராகப் பொருத்திக் கொள்ள முடியாதிருக்கின்றது. நீங்கள் அங்கிருந்து விடைபெற விரும்புகின்றீர்கள்.

அப்போது தற்செயலாய் ஸிபியை மீண்டும் சந்திக்கின்றீர்கள். அவளுக்கு உங்கள் வரவு ஆச்சரியமாயிருக்கின்றது. இவ்வாறான இடங்களிற்குரிய ஆடையை நீங்கள் அணிந்திருக்கவில்லையெனக் கூறிவிட்டு, உங்கள் கழுத்துப் பட்டியை நெகிழ்த்துவிடுகின்றாள். நெகிழ்ந்தது உங்கள் கழுத்துப்பட்டி மட்டுமல்ல, நீங்கள் இறுக்கி மூடியிருந்த இதயத்தின் வாசல்களுமே. எனினும் வெளியே போகவே இன்னும் விரும்புகின்றீர்கள். விநோதமான உங்கள் நண்பன், ஸிபியிற்கு உங்கள் மீது ஏதோ ஈர்ப்பு இருக்கிறதெனச் சொல்லி, நீங்கள் சுதாகரிப்பதற்குள்ளேயே, ஸிபியுடன் அடுத்தநாள் காலை தேநீர் அருந்துவதற்கான சந்திப்பையும் ஏற்பாடு செய்துவிடுகின்றான்.

ஸிபியைச் சந்திக்கக் காத்திருக்கின்றீர்கள். இடையில், நீங்கள் வளாக காலத்தில் வாசித்த பெரும்புத்தகம் ஒன்றை வாசிக்கும் ஒருவனைக் கண்டு நெருக்கம் கொள்கின்றீர்கள். ஸிபி உற்சாகமாய் வருகின்றாள். தேநீருடன், அவளுடன் சேர்ந்து நடக்கத் தொடங்குகின்றீர்கள். உங்களுக்குப் பரிட்சயமான இடங்களுக்குச் செல்லும்போது உங்கள் கடந்தகால நினைவுகளை ஸிபியுடன் உற்சாகத்துடன் பகிர்ந்துகொள்கின்றீர்கள். ஸிபி இரண்டாமாண்டு மாணவி என்றாலும் அறிவுக்கூர்மையுடைய பெண். உங்களுக்கு நிகராக எல்லாவற்றையும் கதைக்க, நீங்கள் இன்னும் நெருக்கத்தை உணர்கின்றீர்கள். அவளுக்குப் பிடித்தமான நாடக மேடையில், அவள் தன் நினைவுகளைப் பகிர்கிறாள். மகிழ்ச்சியின் விளிம்பில் உங்களை முத்தமிட விரும்புகின்றாள். உங்களுக்கு அச்சமாயிருக்கின்றது. உங்கள் தயக்கத்தைப் புரிந்து கொண்ட ஸிபி நெற்றியிலும், கன்னங்களிலும் முத்தமிட அனுமதி கேட்கின்றாள்.

வளாகததிற்குள் இருந்த கொஞ்சநாட்களிற்குள் இந்த வாழ்க்கை இவ்வளவு அழகானதா என்று தோன்றுகின்றது. அதற்கு ஸிபிதான் முக்கிய காரணம் என்பதையும் நினைவுபடுத்தத் தேவையுமில்லை. ஸிபியிடமும், வளாகத்திடமிருந்தும் விடைபெற்றுக் கொள்கின்றீர்கள். ஸிபி, உங்களுக்குக் கடிதம் எழுதச் சொல்கிறாள். கடிதம் என்பது மின்னஞ்சல்களோ, ரெக்ஸ் மெஸேஜ் போன்ற நவீன தொழில்நுட்பத்தினால் விளைந்தவற்றையல்ல அவள் குறிப்பிடுவது. கையால், மை நிறைந்து எழுதபட்ட எழுதுக்கள் என நினைவு படுத்துகின்றாள். அதுமட்டுமில்லாது செவ்வியல் மற்றும் ஒப்ரா இசைகளை அறிமுகப்படுத்துகின்றாள். எப்படி உரிய முறையில் கேட்பது எனவும் கற்றுத் தருகின்றாள். எழுதும் கடிதங்களினால் மட்டுமே நீங்களிருவரும் தொடர்பில் இருக்கின்றீர்கள். ஸிபியின் கடிதங்கள் இப்போதும் உங்களின் வாழ்க்கையின் ஒருபகுதியாகிவிட்டது. கலை என்பது எப்படி வாழ்க்கையை இன்னொரு தளத்திற்குக் கொண்டு செல்லும் என்பதை நகர நெருக்கடி வாழ்க்கையிற்குள் இருந்தபோதும் தெளிவாக உணர்ந்துகொள்கின்றீர்கள். நகரத்தில் தனித்திருந்தாலும், வெளியில் காணும் எல்லோரையும் பார்த்து முகம் மலர்ந்து சிரிக்கின்றீர்கள். அவர்கள் பதிலாய்த் தரும் சிரிப்பில் ஸிபியை நினைவு கூருகின்றீர்கள்.

இப்போது சட்டென்று இந்த உறவு எங்கே போய் முடியப்போகின்றதென்று யோசிக்கத்

தொடங்குகின்றீர்கள். 19 வயதில் இருக்கும் பெண்ணோடு 30களில் இருக்கும் உங்களுக்கான வயது வித்தியாசம் நெருடலைத் தருகின்றது. வெவ்வேறு காலங்களில் நீங்களும் அவளும் என்ன வய்தில் இருப்பீர்களென தாளில் எழுதியெழுதிப் பார்க்கின்றீர்கள். நீங்கள் 80களில் இருக்கும்போது அவளுக்கு 70 வயதாக இருக்குமென நினைத்து அந்த நினைவுகளை சற்று ஒதுக்கி வைக்கின்றீர்கள்.


ஒருநாள் ஸிபி உங்களை நேரில் காணவேண்டுமென்று ஆசைப்படுகின்றாள். உங்களை அவளின் கடிதங்கள் நெகிழ்த்தியதுபோல, அவளையும் நீங்கள் எழுதியவை மரை வைத்திருக்குமல்லவா? உங்களுக்கு அவளது வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்ற தயக்கம் இருக்கிறது. நிறைய யோசித்தபின், வருவது வரட்டுமென ஸிபியைச் சந்திக்க, நீங்கள் படித்த வளாகத்திற்குச் செல்கின்றீர்கள். உங்கள் எதிர்பாராத வருகை ஸிபியை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது.



அவளது மாணவ அறையில் நீங்கள் இருவரும் இருந்து நிறையக் கதைக்கின்றீர்கள். தற்செயலாய் ஸிபி vampire வகை Twilight நாவல்களைப் படிப்பதைப் பார்த்து ஆச்சரியப்படும் நீங்கள் ஸ 'பியோடு ஒரு விவாதத்தைத் தொடங்குகின்றீர்கள். இவ்வளவு அறிவுக்கூர்மையுள்ள ஸிபி இவ்வாறான நாவல்களை வாசிப்பாள் என்பதை நம்பமுடியாதிருக்கின்றது. 'இதையேன் வாசிக்கிறாய்?' என்று கேட்கின்றீர்கள். 'வாசிக்கும் எல்லாவற்றுக்கும் ஏதாவது காரணம் இருக்கவேண்டியிருக்கா, பிடித்திருக்கிறது வாசிக்கிறேன்' எனகிறாள் ஸிபி. நீங்கள் தொடர்ந்து அது வாசிப்பதற்குரிய நாவலே இல்லை என விவாதிக்கின்றீர்கள். 'நாவலை வாசிக்காமல், அது குறித்துக் கருத்துச் சொல்வது தவறு, உனக்குப் பிடிக்காதவை எல்லாவற்றையும் எரிக்கச் சொல்லிவிடுவாய் போலிருக்கிறது, இவ்வாறு விவாதிப்பதே ஆபத்து' என்கிறாள்.

உங்களை ஏதோ ஒருவகையில் ஸிபி தீண்டிவிடுகிறாள். நான் இந்த நாவல்களை வாசிக்கும்வரை உன்னோடு பேசப்போவதில்லையென நாவலையெடுத்துக்கொண்டு போய் வாசிக்கத் தொடங்குகின்றீர்கள். அடுத்த நாள் ஸிபியைச் சந்தித்து, 'வாசித்து முடித்துவிட்டேன், இதுவே நான் ஆங்கிலத்தில் வாசித்த மிக மோசமான நாவல்' என்கின்றீர்கள். 'அப்படியாயின் மற்றமொழிகளில் இதைவிட மோசமான நாவல்கள் இருக்கின்றதா' எனத் துடுக்குத்தனமாய் ஸிபி கேட்கிறாள். 'தெரியவில்லை, ஆனால் இந்த நாவலை மற்ற நாவல்களில் மொழிபெயர்க்கும்போது இதுவே அந்தந்த மொழிகளிலும் மோசமான நாவலாய் இருக்கும் என்பது உறுதி' என பதிலிறுக்கின்றீர்கள். இங்கேதான் நீங்கள் ஒரு வளாகத்து மாணவர் இல்லையென்பதையும், அதேபோல் நீங்கள் ஒரு முதிர்ச்சியடைந்த ஒரு ஆணாக மாறவில்லை என்பதையும் காலம் உங்களுக்குச் சுட்டி நிற்கின்றது.


அன்றிரவு ஸிபி தன்னோடு தங்கியிருந்த தோழியை வெளியே அனுப்பிவிட்டு, உங்களை தன் அறைக்கு அழைக்கிறாள். எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, 'இதுதான் எனக்கு முதன்முறை என்னைக் கவனமாகக் கையாளு' என்கின்றாள். உங்களுக்கு ஸிபி மீது நட்பை மீறிய காதல் இருக்கிறது. ஏன் காமம் கூட அவ்வப்போது தலைதூக்கிப் பார்ப்பதுண்டு. ஆனால் இத்தனை வயது வித்தியாசமுள்ள பெண்ணோடு, உறவுக்குப் போவது நெருடலாயிருக்கின்றது. நீங்கள் ஏதேதோ காரணங்கள் சொல்லித் தவிர்க்கப் பார்க்கின்றீர்கள். 'எனக்கு எல்லாம் தெரியும், நான் நிறைய யோசித்தே மனமுவந்து என்னைத் தருகின்றேன்' என்கிறாள் ஸிபி. நீங்கள் அவளை வேறு வழியில் திசை திருப்ப முயல்கின்றீர்கள். ஸிபியிற்கு தன் ஆசை நிராகரிப்பட்டதால் கோபம் வருகின்றது. இனி என்னைச் சந்திக்காதேயென உங்களை அறையை விட்டு வெளியே போகச் சொல்கின்றாள்.



உங்களுக்கு இந்த இரவு மிக நீண்ட இன்னொரு துயர் மிகுந்த இரவாய்ப் போய்விடுகின்றது. பாரிற்குப் போய் நிறைய மதுவை அருந்துகின்றீர்கள். அங்கே உங்களுக்கு ஆங்கில இலக்கியம் படிப்பித்த, புத்தகங்கள் மீது காதல் வரச் செய்த உங்கள் ஆங்கிலப் பேராசிரியையைச் சந்திக்கின்றீர்கள். அவருக்கும் அன்றைய இரவு நிம்மதியற்றதாக இருந்திருக்கும் போலும். இரவிரவாய் நிறையக் கதைத்து, பேராசிரியையின் வீட்டுப் படுக்கையறை வரை போகச் செய்கின்றது. நீங்கள் அவரோடு நெருக்கமாய் இருந்த பொழுதில், 'நீங்கள்தான் கவிதையை இந்தளவிற்கு வாழ்வோடு நெருக்கம் கொள்ளமுடியும்' என சொல்லித் தந்தவர் என நெகிழ்கின்றீர்கள். அவர், 'கவிதையும் வாழ்க்கையையும் ஒன்றென முட்டாள்தனமாய் ஒப்பிட்டுக்கொள்ளாதே' என் இன்னொரு பாடத்தைக் கற்பித்து விடியமுன்னரே தன் வீட்டை விட்டுத் துரத்திவிடுகின்றார்.

நீங்கள் இப்போது மீண்டும் உங்களின் அலுப்பான வாழ்க்கையிற்குள் நுழைந்துவிட்டீர்கள். இடையில் ஸிபியோடு சந்தித்த இன்னொரு மாணவனின் தற்கொலையைக் காப்பாற்ற படித்த வளாகத்திற்குச் செல்கின்றீர்கள். அவனுக்கு, 'புத்திசாலியாக இருப்பதால் இளமையில் சாகலாம் என்று நினைக்காதே, வயது முதிர்ந்து கூட இயற்கையாகச் சாகலாம்' என்று அறிவுரை கூறுகின்றீர்கள். நீங்கள் வளாக காலத்தில் கனதியான புத்தகங்களை வாசித்ததுபோல, வாசிக்கும் அவனிடம் இன்னும் மனச்சிக்கல்களை ஏற்படுத்தும் புத்தகங்களை பிடுத்தெறிந்துவிட்டு, மனதை இன்னொருபக்கம் திருப்பக்கூடிய, vampire வகை நூற்களை வாசிக்கச் சொல்கின்றீர்கள். ஆனால் இம்முறை நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான ஸிபியைச் சந்திக்கவே இல்லை.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. நீங்கள் திரும்பவும் புத்தக உலகிற்குள் மூழ்குகின்றீர்கள். உங்களின் புத்தக வாசிப்பு, புத்தகக் கடையில் வாசிக்கும் பெண்ணொருத்தியுடன் நட்பைக் கொண்டு வருகிறது. புத்தகங்கள் எப்போதும் எங்களை வேறு உலகில் எங்களையறியாமலே வாழ வைக்கின்றன. புத்தகங்களுடன் எனக்குரிய உலகிற்குள் இருந்துவிட்டேன். இப்போதுதான் கொஞ்சம் வெளி வாழ்க்கைக்கும், வெளி மனிதர்களோடும் பழக முயற்சிக்கின்றேன்' எனத் தன் தவிப்பைச் சொல்லும் அனா உங்களுக்குரிய நெருக்கமான அலைவரிசையில் இருப்பதைக் கண்டுகொள்கின்றீர்கள்.



பிறகாலங்களில் உங்களுக்குரிய காதலை அனாவால் மட்டுமே தரமுடியுமென்பதைப் புரிந்துகொள்கின்றீர்கள். ஆனால் ஸிபியின்றி, அனாவின் அருமையை உணர்ந்திருக்க முடியாது என்பதும் உங்களுக்கும் நன்கு தெரிகிறது. ஸிபி உங்கள் வாழ்வில் வந்ததை நினைவுகூருமுகமாகவும், அவள் தந்த அழகிய நாட்களுக்கு நன்றி செலுத்தவும் அவளுக்கு vampire வகையான 'ட்ராகுலா' புத்தகத்தை அனுப்பி வைக்கின்றீர்கள்.



ஸிபி அந்த நூலைப் பார்த்து மகிழ்ச்சியடையும் தருணத்தில் உங்களுக்கான இன்னொரு நாள் அழகாகின்றது. நீங்கள் ஸிபியையோ அல்லது ஸிபி உங்களையோ மறப்பது அவ்வளவு எளிதன்று. எனெனில் எதையும் எதிர்பார்க்காத காதல் என்பது அடியாழங்களில் புதையுண்டு போகாது என்றுமே உயிர்ப்புடன் இருப்பதுதானில்லையா?

(Liberal Arts திரைப்பட பாதிப்பில் எழுதியது)

பிளாட்டினம்

தங்கத்தைத் தாண்டிய கதை!

கொலம்பிய நாட்டில் ஆறுகளை ஒட்டிய பகுதிகளில் தங்கவேட்டைக்கு கிளம்பிய குழுவின் கண்களில் வெண்மை நிறம் கொண்ட ஒரு உலோகம் பட்டது. அவர்கள் அதை பெரிதாக கருதாமல் தங்கத்தை தேடி பயணத்தை தொடர்ந்தனர். அப்படி ஒதுக்கப்பட்ட உலோகம் தான் விலைமதிப்பற்ற பிளாட்டினம் என்பது பின்னாளில் அவர்களுக்குத் தெரியவந்தது.

ரஷ்யாவில் பிளாட்டினத்தில் நாணயங்கள் செய்தனர். பூர்வீக தென் அமெரிக்கர்களும் இதனை பயன் படுத்தியிருக்கிறார்கள். பிளாட்டினத்தின் மதிப்புத் தெரியாமல் அதற்கு தங்க முலாம் பூசி ஏமாற்றி விற்பனை செய்ததும் ஸ்பெயின் நாட்டில் நடந்துள்ளது. அதனை தடுக்க தங்க முலாம் பூசிய பிளாட்டினத்தை சேகரித்து கடலில் வீசி எறிந்திருக்கிறான் அந்த நாட்டு மன்னன்.



எவ்வளவு தான் நெருப்பில் சுட்டாலும் தங்கம் போலவே பிளாட்டினமும் தாங்கக் கூடியது. அதன் உருகு நிலை 1773.5 டிகிரி செல்சியஸ். இது எந்த அமிலத்திலும் கரையாது என்பதால் வினையூக்கியாக பயன் படுத்துகிறார்கள். தற்போது ஆபரணமாக கூடுதல் விலைக்கு விற்கப்பட்டாலும் தொடக்க காலத்தில் இதனை சிகரெட் லைட்டர்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

1829ம் ஆண்டு காலகட்டத்தில் ரஸ்யாவில் யூரல் மலைச் சரிவில் பிளாட்டினம் பெருமளவு கிடைத்துள்ளது. இதனுடன் இரும்பைக் கலந்து உறுதியான எஃகு இரும்பைத் தயாரித்துள்ளனர். பிளாட்டினத்தை எவ்வளவு மெல்லிய கம்பி இழைகளாகவும் உருவாக்கலாம் என்பதால் ஆபரணங்கள் தயாரிப்பில் எளிதாக பயன்படுத்தப்படுகிறது. இத தவிர துண்துளைகளைகள் கொண்ட பிளாட்டினகுழாய் வழியாக ரேயான் இழைகளை செலுத்தி மூக்குக் கண்ணாடி, காமிரா லென்ஸ் உள்பட பல பொருட்களை தயாரிக்கிறார்கள். கப்பல் மற்றும் விமானங்களில் எடைகுறைந்த ஆனால் உறுதியாக இருக்கவேண்டிய பாகங்களை செய்ய பிளாட்டினத்தை பயன்படுத்துகிறார்கள். பிளாட்டினத்தில் ஒக்சிஜனையும், ஹைட்ரஜனையும் செலுத்துவதன் மூலம் வெப்பத்தை உண்டாக்கலாம் என்பது தெரியவந்ததால் விண்கலங்களில் இதன் மூலம் மின் உற்பத்தி செய்யும் பற்றரிகளைத் தயாரித்தனர். மருத்துவத்துறையில் பிளாட்டினம் எலெக்ட்ரோடுகளை ரத்த நாளங்களில் செலுத்தி இருதய நோய்களையும் வேறு சில நோய்களையும் கண்டறிய முடிகிறது.



பிளாட்டினம் உற்பத்தியில் முதலிடம் ரஷ்யாவிற்குத்தான் இருந்தாலும் கனடா, தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலும் பிளாட்டினம் கிடைக்கின்றது. தங்கம் கூட ஆபரணங்கள் தவிர ஒரேயொரு பயனை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால் பிளாட்டினம் பல்வேறு துறைகளில் மனித சமுதாயத்திற்கு உதவுகிறது.



எமது பிரதம ஆசிரியர் கலாசூரி ஆறுமுகம் சிவநேசச்செல்வன் அவர்களது சகோதரர் டாக்டர் ஆறுமுகம் சிவகணேசநாதன் (Dr.Rosa) MBBS, FRCS(Eng), FRCPC அவர்களது மறைவுகுறித்து முகவரி சஞ்சிகை தன் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

மறைவு: 10/12/2014

முகவரி

ஆ
பேர
அ
ஒரு த




மறந்தே போயிருக்கும் பலருக்கு. இங்கு கனடாவில், இது கிறிஸ்மஸ் காலம், குதூகலம், கொண்டாட்டம்... எத்தனை பார்ட்டிகள்! யாரையும் ஞாபகம் வைத்துக்கொள்ளும்படி சொல்ல நான் என்ன இறந்தவர்களின் பிரதிநிதியா? அத்தோடு "துக்கங்களைக் கேட்டால் தூர விலகு" - என்ற பொலிஸ் எங்களில் பலருக்கு. அதுவும் நியாயம் தானே! நாள் ஓடுகிற ஓட்டத்தில், கையில் கிடைத்த பணம் கைமாறுவதற்கிடையில் அனுபவிக்கக் கிடைத்ததை அனுபவிப்பதை விடுத்து நடந்ததை நினைத்து வாடி வருந்த என்னதான் அப்படி வில்லங்கம் நமக்கு?



ஏதோ நான் ஒரு போட்டோகிராபராக இருந்து, அந்தக் காட்சிகளைப் படமாக்கியதால் அவை கமராவுக்கூடாக என் கண்கள்வழியே மூளையில் போய் பதிந்துவிட்டதால் உறுத்திக்கொண்டிருக்கிறது.



ம்... ஒரு தசாப்த காலம் உருண்டோடிவிட்டது. அன்று என்ன தேதி? அதை எப்படி மறப்பது? கிறிஸ்மஸ் கடந்து விடிந்த முதலாம் பொழுது. 2004 டிசம்பர் 26. தெஹிவளை முகாந்திரம் வீதியில் கடற்கரையிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் 23ம் இலக்க வீடு - நான் வாடகைக்கிருந்த ஒரு உறவினர் வீடு - அங்கே காலை 10 மணியளவில் டீவியில் கிரிக்கெட் மெட்ச் பார்த்துக்கொண்டிருந்தேன். விஜி - வீட்டுக்காரரின் மகன், பரபரப்பாக ஓடிவந்தான். என்ன என்பதுபோல் பார்க்கும்போதே சொல்லத் தொடங்கிவிட்டான். "அண்ணா, மிராக்கிள் நடக்குதாம். கடல் வத்தி, பாறையெல்லாம் தெரியுதாம். மீனெல்லாம் துடிக்குதாம். யேசு வந்து மீன்தாறாராமெண்டு சனம் ஓடுது...." உயிர்தெழுந்த யேசு அவரை விசுவாசித்த மீனவர்களுக்கு அற்புதத்தால் பெருந்தொகை மீன் கிடைக்க வைத்ததாக பைபிளில் சொல்லியிருப்பதுபோல் அன்றும் நிகழ்வதாக சனம் நினைத்துவிட்டது. ஆனால் ஏதோ நடக்கிறது, தாமதித்தால் மறைந்துவிடலாமென எண்ணி அவனது பரபரப்புக்கு ஈடுகொடுத்து நானும் ஓடினேன். அந்தப் பரபரப்பில் எனது துறைக்குரிய புரஃபஷனல் கமராக்களைத் தயாராக்கிக்கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. கையில் கிடைத்த சிறிய ஃபியூஜி கெமராவை எடுத்துக்கொண்டு ஓடினேன். அதுதான் நான் விட்ட பெரும் தவறு என்பது கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்ததும் புரிந்தது.





அங்கு நான் கண்ட காட்சி! ஆம். அவன் சொன்னது அப்படியே உண்மை. கடல் உள்ளே போய்க்கொண்டிருந்தது. நான் சின்ன வயதுமுதல் எத்தனையோ தடவை இந்தக் கடற்கரையில் உலாவியிருக்கிறேன். ஒருநாளும் காணாத காட்சியாக, கடலின் தரை, அதிலிருந்த பாறைகள் எல்லாம் தெரிந்தன. செய்தி அறிந்து ஏற்கெனவே அங்கே சனம் திரண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. நான் பிரமிப்புடன் அந்தச் சின்னக் கெமராவை நொந்தபடி, அந்தப் பெரிய காட்சியைப் படம்பிடித்துக்கொண்டு முன்னே நகர்ந்தேன். ஆனால் ஒரு பொலிஸ் வாகனத்தின் ஒலிபெருக்கி அனைவரையும் உடனே பாதுகாப்பான உயரமான இடங்களுக்கு ஓடிவிடும்படி அபாய அறிவிப்புச் செய்துகொண்டிருந்தது. அவர்களுக்கு சுனாமிச் செய்தி ஏற்கெனவே தெரிந்திருந்தது. இலங்கையின் மறு பகுதியை சுனாமி ஏற்கெனவே தாக்கியிருந்தது. ஆனால் ஒலிபெருக்கி கத்து மட்டும் கத்தினாலும் அந்த அறிவிப்புக்களை யாரும் லட்சியம்செய்யாதபடி காட்சியின் பீடிப்பு அவர்களைக் கட்டிப்போட்டிருந்தது.

அப்போதுதான் ஒரு அலை உருவாகி எம்மை நோக்கி வேகமாக வரத் தொடங்கியது. அது அசாதாரணமான நீளம்கொண்டதாக இருந்தது. நீளமாக இருந்தாலும் அச்சுறுத்தும் வகையில் ஒன்றும் உயரமாக இருக்கவில்லை. அதனால் அதன் ஆபத்து எமக்குப் புரியவில்லை. உண்மையில் என்ன நிகழ்ந்ததென்றால் கடல் திடீரெனப் பொங்கி, நீர் அதிகரித்து, கடல் மட்டம் உள்ளே உயர்ந்து கொண்டிருந்த தேயன்றி அது பேரலையாக வெளித் தெரியவில்லை.

எங்கோ தொலைவில் நின்ற கடலின் விழிம்பு முதலாவது அலையோடு திடீரென எனது காலில் வந்து முட்டியது. வெறுமையாய் இருந்த நிலமெல்லாம் நீரில் மூழ்கிவிட்டது. மீண்டும் இன்னொரு அலை தொலைவில் தெரிய... விபரீதத்தைப் புரிந்துகொண்டு ஓடிச்சென்று உயரத்தில் இருந்த புகையிரதத் தண்டவாளத்தைக் கடந்து நிற்க, என்னைத் துரத்தியபடியே வந்தது அந்த அலை. ஆபத்து சூழ்வது உணர்வுக்குத் தெரிந்தாலும் என் கமெராக்கார மனது, தானே செயற்பட்டு இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிட்டாதென உந்தி, காண்பவற்றையெல்லாம் உடனே படம் பிடித்துக்கொள்ளச் செய்தது.



கடற்கரையைத் தாண்டிய மேட்டில் நின்ற தென்னை மரங்களெல்லாம் கடலுக்குள் சென்றுவிட்டன. கடற்கரை வீடுகளையும் மோதியது அலை. அதைக் கடந்து தண்டவாளத்தையும் கடந்தது. "ஓடிவிடு" என்று என்னைப் பிடித்து உள்ளுணர்வு தள்ளியபோதுதான் ஓடினேன். தண்ணீரில் மறைந்திருந்த பள்ளத்துள் கால் தடக்கி வீழ்ந்தேன். நல்ல காலமாக என் கை கெமரா நனையாமல் உயர்த்திப்

ிப்

லை

ிவு

ாப்தம்!



பிடித்துக் கொண்டது. எழுந்து மேலே ஓடினேன். முகாந்திரம் ஒழுங்கை கடற்கரையிலிருந்து செங்குத்தான மேடாக உயர்ந்து செல்லும் ஒரு ஒழுங்கை. அதனால் நான் விரைவாக மேட்டுப் பகுதிக்கு ஏறிவிட்டேன். என்றாலும் படம் பிடிப்பதை நிறுத்தவில்லை. ஒழுங்கைக்குள் நுழைந்துவிட்ட கடல்நீரையும் படம் பிடித்தேன். அது எனது வீட்டையும் தாண்டி வந்துவிட்டது. அதாவது 400 மீற்றருக்கும் மேல் உள்நுழைந்து விட்டது. என்ன கொடுமையென்றால் எனது சின்னக் கெமராவால் தொலைவை ஸூம்பண்ணி எடுக்க முடியவில்லை.



சுமார் 15 நிமிடத்திற்குள் கடல்நீர் திரும்பச் சென்றுவிட்டது. ஒரேயொரு அடிதான். வந்து அடித்துவிட்டு கோபம் நீங்கி திரும்பிவிட்டதுபோல் இருந்தது. திரும்பச் சென்று கரையைப் பார்த்தேன். அதன் கோபம் புரிந்தது. கரையோர வீடுகளை அப்படியே அலாக்காய்த் தூக்கிவந்து தண்ட வாளத்தைக் கடந்து வெறும் தகரங்களாக சுவரோரம் ஒதுக்கி வைத்திருந்தது. வீடுகள் இருந்த தடயங்களாக தரையில் சில எச்ச சொச்சங்கள் மட்டும் துருத்திக்கொண்டிருந்தன. கடற்கரையிலிருந்த கொங்கிறீட் கதிரையொன்றை அப்படியே புரட்டிப் போட்டிருந்தது. ஓய்ந்துவிட்ட ஒரு யுத்த களத்தின் சவக்களையை ஏந்திக்கொண்ட மன உணர்வோடு வீதிக்கு வந்தேன். அங்கே அவ்விடத்தின் முதலாவது அகதிக் குடும்பமொன்று செய்வதறியாது கடை வாசலில் குந்தியிருந்தது. ஒரு சிறுமியின் கையில் நாய்க்குட்டி. அருகே இன்னொரு நாய். தரையில் இரத்தம். தமது நாய்களைமட்டும் எப்படியோ காப்பாற்றிக் கொண்டுவந்துவிட்டார்கள். ஒருவர் மட்டும் அப் பகுதியில் இறந்ததாய் அறிந்தேன். சுமார் 15பேர்வரை காயமடைந்திருந்தார்கள்.









கொழும்பில் வீசியது ஒரு சிறிய சுனாமி அலைதான். ஆனால் முல்லைத்தீவு முதல், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை என இலங்கையின் மறுகரையில் தாக்கி காலிவரை வந்த சுனாமி அலைதான் பல்லாயிரம் மக்களைப் பலிகொண்டு கோரத்தாண்டவம் ஆடிச் சென்ற ஆழிப் பேரலை. இலங்கையை மட்டுமல்ல, இந்தோனேஷியா, சுமாந்திரா, பிலிப்பைன்ஸ், நிக்கோபார், அந்தமான் தீவு, மாலைதீவு, இந்தியா ஆகிய தென்கிழக்காசிய நாடுகளைத் தாக்கி, சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் பேரை சில நிமிடங்களில் மொத்தமாகப் பலிகொண்டது இச் சுனாமி.

இலங்கையில் மட்டும் பலியுண்டோர் 30,196 பேரென்பது உறுதிப்படுத்தப்பட்ட தரவு. உறுதிப்படுத்தப்படாத மரணங்கள் இன்னும் அதிகமாயிருக்கலாம். அம்பாறை மாவட்டத்தில் மட்டும் ஐயாயிரம்பேர் பலியாகியுள்ளனர். காலிக்கருகே தெல்வத்த எனுமிடத்தில் கரையோர புகையிரதப் பாதையில் பயணித்த ட்ரெயினொன்றைத் தாக்கிய சுனாமி அலையில் சுமார் 1700 பயணிகள் அப்படியே பலியானார்கள். யாழ் வடமராட்சியிலும் முல்லைத்தீவிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மரணங்கள் எண்ணப்பட்டன. கிழக்கே திருகோணமலையில் சுமார் 2 கிலோமீற்றருக்கு உள்ளே புகுந்த கடல் வெள்ளம் 800 பேர்வரை பலிகொண்டது. திருகோணமலை கடற்படைத்தளம் கடல்நீரால் ஏறத்தாள மூழ்கடிக்கப்பட்டது. மட்டக்களப்பில் 69 பேர் பலியானதாகக் கணக்கிடப்பட்டது.

உலக நாடுகள் ஏதேதோ எல்லாம் நிதியுதவி செய்ததாக செய்திகள் கூறின. அந்த நிதியுதவிகள் பாதிக்கப்பட்டோரை எவ்வளவுதூரம் எட்டின என்பது கேள்வியாயுள்ளது. இங்கே, கனடா முதற்கொண்டு வட அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியாவென, புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் சுனாமி அனர்த்தத்துக்கெனப் பெருந்தொகையில் நிதி சேகரிக்கப்பட்டதாகவும் அறிந்தேன். சில உதவிகள் கடல் கடக்காது தேங்கிவிட்டதாகவும் கதைகள் உண்டு. உண்மை பொய் அறியேன்.

கொழும்பில் பிரிட்டிஷ் கவுன்சிலில் சிறந்த 10 படங்களைத் தெரிவு செய்வதற்காக “Photo Competition of Sri Lankan Disaster” என்ற தலைப்பில் ஒரு புகைப்படப் போட்டி வைத்தது. சுமார் பன்னிரெண்டாயிரம் பேர் கலந்துகொண்டார்கள். எனது இந்த சிறிய கமராவால் எடுக்கப்பட்ட படங்களின் தரம் போதுமானதாக இருக்காதென்ற ஐயத்துடன்தான் படங்களை அனுப்பினேன். ஆனால் அது சிறந்த 10 படங்களுள் ஒன்றாகத் தெரிவாகியது. காரணம் வேறொன்றுமில்லை. அந்தப் படம் ஆபத்தான அவ்வேளையில் அத்தனை கிட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட அரிதான ஒன்றாகுமென்பதால் கமராவின் தரம் அங்கு பொருட்படுத்தப்படவில்லை. அழிவின்பின் படமெடுத்துக் காட்டுவது சிரமமானதல்ல. அழிவின்போது அதற்குள் நின்று படமெடுப்பதே போட்டோகிராபிக்கான கொமிட்மென்ட் (தொழில் தர்மம்) என்பதே அவர்களின் விளக்கம். எனினும் ஒரு கமராமென் எப்போதும் தனது தொழிலுக்கான கமராவை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்ற பாடத்தை (செய்யும் தொழிலுக்கு எப்போதும் தயார் நிலையில் இருக்கவேண்டும்) எனக்குப் புகட்டியுள்ளது. படங்கள் இருக்கட்டும். அதன் பின் உள்ள துயர்தான் மிகவும் கொடியது. ♦



" Joyeux Noël et Bonne Année

Merry Christmas and
Happy New Year!

அனைத்து உறவுகள்ளுக்கும் நத்தார்
மற்றும் புது வருட வாழ்த்துக்கள் "



Esan Kulasegaram
416 835 1700

Viki Velauthan
416 457 7162



போய் வா அப்பா!

ஜெயந்தன் ஜேசுதாஸ்

ஈழ இலக்கியத்தின் மையங்களில் ஒருவாராக இயங்கி, படைபூக்கம் மிகுந்த பல கலகப் புனைவுகளை தந்து, நவீனத் தமிழ் இலக்கியத்தை செழுமைபடுத்திய 'அப்பா எஸ்போ' என்று எங்களால் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட எஸ். பொன்னுதுரை நேற்று ஆஸ்த்ரேலியாவில் மறைந்தார் என்ற செய்தி என்னை இடியாகத் தாக்கியது. இன்னும் லட்சக்கணக்கான அவர் பெறாத என்னைப்போன்ற தமிழ்ப் பிள்ளைகளை அவரது மறைவுச் செய்தி கலங்க வைக்கும்.

அது 2003 -ம் ஆண்டு கல்கியில் செய்தியாளராகப் பணி. தம்பியுகபாரதியிடமிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு. "அண்ணா இன்னும் கொஞ்ச நேரத்தில் எஸ்போ என்றொருவர் பேசுவார். கோடம்பாக்கம் காவல்நிலையத்தில் அவரை அழைத்திருக்கிறார்கள். அவரது ஆஸ்த்ரேலிய கடவுச் சீட்டு ஓவர் ஸ்டே ஆகிவிட்டது. கொஞ்சம் உதவமுடியுமா?" என்றார். எனக்கோ சிரிப்புதான் வந்தது. நான் செல்வாக்குடன் திகழ பொலிட்டிகல் பீட் செய்தியாளன் கிடையாது. என்றாலும் எனக்கு கல்கியில் வேலை வாங்கிக் கொடுத்த யுகபாரதியின் பேச்சை எப்படித் தட்டுவது? "சரி" என்று சொல்லிவிட்டு "யார் இந்த எஸ்போ?" என்று கேட்டுவிட்டேன். "நல்ல வேளை இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டீர்கள். தாத்தாவிடம் கேட்டுவிடாதீர்கள். அவரது மித்ர பதிப்பகத்துக்கு அழைத்துப்போகிறேன். அப்போது உங்களுக்கே விளங்கும்" என்றார்.

கொஞ்ச நேரத்தில் "ஜெயந்தன் இருக்காரா? நான் எஸ்போ கதைக்கிறேன்" என்று ஈழத்தமிழில் பேசிய குரல் கரகரப்பாக பிசிறு தட்டினாலும் கம்பீரமாக இருந்தது. அந்தக்குரலில் என் அப்பாவின் சாயலும் கலந்திருந்தது. "எனக்காக எனது பதிப்பகத்துக்கு வரமுடியுமா?" என்றார். கோடம்பாக்கம் மேம்பாலத்தின் கீழ் இருக்கும் மசூதிக்குச் சொந்தமான வணிக வளாகத்தில்தான் எஸ்போவின் 'மித்ர' பதிப்பகத்தின் அலுவலகம் இயங்கிவந்தது.

அங்கே சென்றதும் மிக எளிமையாக தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் பேசியது எதுவுமே என் காதில் விழவில்லை. காரணம் அவர் பார்ப்பதற்கு என் அப்பாவைப் போலவே இருந்தார். ஓவர் ஸ்டே பிரச்சினையைச் சொன்னார். மென்மை மனமும் சொல்வன்மையும் மிக்க ரவி.ஆறுமுகம் ஐபிஎஸ் என் நினைவுக்கு வர அவருக்கு போன் செய்து விவரத்தைச் சொன்னேன். அவ்வளவுதான். "என்ன எஸ்போ சென்னையில்தான் வசிக்கிறாரா?! அவருக்கு என் விசாரிப்புகளைச் சொல்லுங்கள். நான் மதிக்கும் மிக உயர்ந்த முற்போக்கு எழுத்தாளர். உடனே நீங்கள் கமிஷனர் அலுவலகம் சென்று கூடுதல் கமிஷனர் பாலச்சந்திரனைப் பாருங்கள். நான் அவருக்கு இப்போதே போன் செய்து சொல்கிறேன்" என்றவர் எஸ்போவுடன் சிலவார்த்தைகள் பேசமுடியுமா என்று கேட்டு, அரைமணிநேரம் அவரோடு பேசிக்கொண்டிருந்தார். அவர்களது உரையாடலில் வந்து விழுந்தது 'தீ' என்ற சொல்.

பிறகு கட்டாயப்படுத்தி என்னை அவருடன் மதிய உணவு உண்ண வைத்த எஸ்போ "எனது எழுத்துக்களில் எதையும் படித்திருக்கிறீர்களா செயந்தன்?" என்றார். நான் ஒரு துண்டு இஞ்சியை விழுங்கியவனைப் போல விழித்தேன். "இயக்கியம் வாசிப்பீர்கள்தானே?" என்றபடி உள்ளே எழுந்து சென்றவர். தீ, சடங்கு ஆகிய நாவல்களை என்னிடம் கொண்டு வந்து தந்தார். இரண்டுமே பழைய பதிப்புகள்.

பிறகு அங்கிருந்து காரில் கமிஷனர் அலுவலகம் சென்று பாலச்சந்திரனைச் சந்தித்து கூடுதல் அவகாசம் கிடைக்க கோரிக்கை வைத்தோம். அவர் அங்கிருந்து கோடம்பாக்கம் காவல் நிலையத்துக்கு கூப்பிட்டுச் சொல்ல, நாங்கள் காவல் நிலையும் சென்று பிரச்சினை இல்லாமல் திரும்பினோம். ஒரு எழுத்தாளனாகவும் கல்வியாளனாகவும் இருந்ததால் அவருக்கு நீட்டிப்புக் கிடைத்தது.

அன்று மாலை வீடு திரும்பியதும் இரவு தீ நாவலைப் புரட்ட ஆரம்பித்தேன். காய்ந்த புற்களை மேய்வதைப்போல் புகைந்துகொண்டிருந்த எனது நவீன வாசிப்புக்கு உண்மையாகவே தீ மூட்டியது எஸ்போவின் தீ. சடங்கு, தீ போன்ற படைப்புகளின் ஊடாக, பாலியலைப் பேசக் கூடாத ஒன்றாக கருதும் மனப்பாங்கை உடைத்து நிரவியிருந்தார் எஸ்பொ.

அதன்பிறகு அவரை நான் அப்பா என்றே அழைக்க ஆரம்பித்தேன். அவரது புலம்பெயர் சோகத்தின் பின்னணியில் இருந்த ஈடுசெய்ய முடியாத இழப்பு களைத் தெரிந்து கொண்டேன். அவரது ஆஸ்த்ரேலிய, நைஜீரிய பேராசியப்பணி அனுபவங்களை தெரிந்து கொண்டேன். பல மாலைகளில் யுகபாரதிக்கு தெரியாமல் அவருடன் சூளைமேடு பாரில் மடங்க மடங்க மது அருந்தியிருக்கிறேன். அவர் வழியாக ஈழ இனவிடுதலைப்போரின் அரசியலை புரிந்திருக்கிறேன். அவர் திரும்பவும் ஆஸ்த்ரேலியா திரும்பவும்வரை அவரது கொச்சையான வசவுகளையும், இலக்கியப் பகிர்தலையும் கலவையாய் ரசித்திருக்கிறேன். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, எஸ்போ எனும் தனி மனிதனின் பாசத்தை நுகர்ந்திருக்கிறேன்.

ஆஸ்த்ரேலியாவில் எழுதத் தொடங்கிய தனது 1500 பக்க சுயசரிதையான 'வரலாற்றில் வாழ்தல்' நூலை அவர் சென்னையில்தான் நிறைவு செய்து அச்சிட்டார். அது எஸ்போவின் வாழ்க்கை வழியே ஈழத்தின் அரசியல் வரலாற்றையும் ஈழ இலக்கியப் போக்குகளையும் பதிவு செய்திருக்கும் மாபெரும் ஆவணம். அவரது சுயசரிதையை முன்வைத்து கல்கிக்காக அவரை நேர் கண்டு எழுதியதையும் மறக்கமுடியாது.



அப்பா எஸ்போ... நிம்மதியாய்ப் போய்வா... உன் கலகத் தடங்களில் எங்கள் எழுத்துக்கள் தொடரும்... இந்த பூமியெங்கும் அவை பற்றிப் படரும்...

புலம்பெயர்ந்தோர் வாழ்வில் "நிறம்மாறும் கோலங்கள்"



டென்மார்க்கிலிருந்து மருத்துவர் வீ. கதிர்காமநாதன்

"புலம் பெயர் மக்கள்" வாழ்வின் இடர்கள், தேவைகள், உளக் குமுறல்கள் பற்றிய கரிசனையே இக் கட்டுரையின் நோக்கம். எமது கட்டாய, இன்றியமையாத "பொது வாழ்வியல் இடர்களை" புகலிட நாடுகளில் எமது "ஈழத் தமிழர்" என்ற சுய அடையாளம் முழுமையாக மறைந்துவிடாது, எதிர்கால சந்ததிகளிடம் எப்படிக் கொடுப்பது, ஒப்படைப்பது, என்பது பற்றிய முன்னோட்ட கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தும் முயற்சியாகவும் இக் கட்டுரை எழுதப்படுகிறது. நிற்க!

புலம் பெயர் மக்களின் அடிப்படையான, கட்டாயமான செயல்பாட்டின் வடிவத்தினை நாம் "இணைவாக்கம்," "இசைவாக்கம்," அல்லது "தக அமைதல்" என்ற தலையங்கங்களில் அடக்கலாம். அதாவது ஒரு உயிரினம் அல்லது மனிதர்கள் தாம் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த சூழலை விட்டு வேற்றுச் சூழலுக்கு சுயமாகவோ அல்லது கட்டாயமாகவோ இடம் பெயரும்போது ஏற்படுகின்ற மாற்றங்களை உள்ளடக்குகின்றது. புதிய சூழலுக்கு ஏற்ற மாதிரி தன்னை மாற்றியமைக்காவிட்டால் உயிரினங்கள் விரைவில் செத்து மடிந்துவிடும். (டார்வினின் கூர்ப்புவிதி இதைத்தான் "தக்கன பிழைக்கும், தகாதன அழியும்" என்கிறது.) இந்த இயற்கை நியதி தாவரங்கள் விலங்குகளுக்கு மட்டு மல்ல மனிதராகிய எமக்கும் பொருந்தும். ஆனால் பகுத்தறிவுள்ள மனிதன் வெப்ப வலயநாடுகளிலிருந்து குளிர் நாடுகளுக்கு இடம் பெரும்போது தாவர விலங்குகள் போலன்றி, தானாகவே சூழலைப் புரிந்து உணர்ந்து தனது இருப்பைத் தொடர பல முயற்சிகளை மேற்கொள்கிறான். அதற்காக நாம் நமது நாகரீகத்தையும் சற்று மாற்றி, குளிர் தாங்கும் கம்பளிச் சட்டைகள், கழுத்து மௌஃப்ளர், கையுறை, தடித்த காலணி எனப் பலவற்றை விரும்பி அணிந்துகொள்கிறோம். இவ்வகை அணிகள் பற்றிய தேவையே எம் சொந்த நாட்டில் இருக்கவில்லை. இந்த உடைமாற்றம்-அணி மாற்றம் அவசியமானது, எவரும் மறுக்க முடியாத தேவையும் கூட.

ஆனால் வெறும் காலநிலைக்கு மட்டும் நாம் இசைவாக்கம் செய்வது போதுமானதல்ல. இந்த அடிப்படையன தக-அமைவையடுத்து, உணவுவகை, மொழி, கலாசாரம், கல்வி, தொழில், வாழ்வியல் முறைகள், சிந்தனை முறைகள், கருத்துப் பாங்குகள், புதிய சமூக கலாசார விழுமியங்களின் தாக்கங்கள், நன்மைகள் என எமக்கு இன்னோரன்ன விடயங்களில் இணைவு, இசைவு, தக-அமைவு தேவைப்படுகிறது.

இந்தப் புதிய மக்கள் தொகுதிகள் தம் நாட்டிற்கு வந்து எதிர்கொள்ளக்கூடிய விடயங்கள் பற்றி புகலிட அரசுகள் ஏற்கெனவே "இசைவாக்க சட்டக் கோப்புகளை" உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இவ் அரசுகளின் சட்டக்கோப்புகளின் வழிகாட்டல்கள் உருவாகுவதற்கு, ஆரம்பத்தில் மேற்கு நாடுகளில் பல, தமக்குரிய குடியேற்ற நாடுகள், கைப்பற்றப்பட்ட நாடுகள் என வைத்திருந்த வரலாறும் அவர்களுக்கு உதவியுள்ளது. அக் காலகட்டத்தில் தாங்களும் கைப்பற்றப்பட்ட நாடுகளின் சுதேச மக்களும் எப்படியான இணைவது, என்ன விதமான இணைவாக்க நுட்பங்கள் சுதேசிகளை எப்போதும் இரண்டாம்தர, மூன்றாம்தர பிரஜைகளாக வைத்திருக்கும், அதேநேரம் தாம் விட்டுச் சென்றாலும் தமக்கு ஏராளமான விசுவாசத்துடனும் நன்றி உணர்வுடனும் அவர்களை இருக்கவைக்கும் அல்லது தமது இருப்பிற்கு பங்கம் விளையாது பார்த்துக்கொள்ளல் போன்ற பலவிதமான விடயங்களை "அறிவியல்" ரீதியாக அலசி ஆய்வு செய்து பல்கலைக்கழக பாடநெறியாகவும் ஆக்கிக்கொண்டார்கள். இவ்வகையான அறிவியல்சார் உண்மைகள் இன்றைய காலகட்டத்தில் தம் நாடு களைத் தேடி ஓடி வருகின்ற அகதி மக்களைத் தமது சமூகங்களுடன் முரண்படாது, எதிர்த்து நிற்காது, சுமுகமாக, மரியாதையாக, கௌரவத்துடன் இணைத்துக்கொள்ள அவர்களுக்கு உதவுகின்றது.

எனினும் இவ் அகதி மக்களில் முதற் சந்ததியினர் புகலிட நாட்டின் தாராள நடைமுறை இணைவாக்க செயற்பாட்டால் வியப்பு அடைந்து பலமடங்கு நன்றிக் கடனுடைய சிந்தனைப் போக்குடன் காணப்படுன்றா ர்கள். ஆனால், இரண்டாம் மூன்றாம் எதிர்கால சந்ததி யினரின் மனப்பாங்கு, புகலிட சமூக தக-அமைவு ஆகியவை பல கேள்விகளை எழுப்புகின்றதை நாம் இன்று கண்கூடாகப் பார்க்கிறோம். இங்கு அகதி மக்கள் என்று அழைக்கப்படுபவர்கள் வெறும் ஈழத் தமிழ் மக்கள் மட்டுமல்ல. பல நாட்டையும் சேர்ந்த அகதி மக்களை அது சுட்டி நிற்கிறது. காரணம் இணைவாக்க செயற்பாடு எல்லாருக்கும் பொருந்து வதாகும்.

இனி இவ் இணைவாக்கம் பற்றிய அறிவியல் கண்ணோட்ட கருத்து முறைகளைப் பார்ப்போம். Jhtotl அறிவியலின் அடிப்படை அம்சமான கருது கோள் அல்லது வரைவிலக்கணம் தேவைப்படுகிறது. பின்வரும் வரைவிலக்கணம் பிரேரிக்கப்பட்டுகிறது.

"எந்தவொரு உயிரினமும் இயற்கை சூழலில் வலுவுள்ள சந்ததிகளைப் படைத்து ஊழிக்காலம்வரை சஞ்சரிப்பதற்கு, காலத்திற் கும் சூழலுக்கும் ஏற்ற தக-அமைவு செயற் பாட்டில் கூர்மையான வினைத்திறமை உள்ளவையாக இருக்க வேண்டும்." இதை இலகுவான வார்த்தையில் சொல்வதானால், காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப தம் இயல்புகளை மாற்றிக்கொண்டு அவற்றைத் தம் சந்ததிகளுக்கும் கடத்தக்கூடியவையாக இருத்தல் வேண்டும்.

இவ் வரைவிலக்கணத்தை உயிரியல் அடிப்படை விதி எனலாம். ஆனால் இதனைப் பகுத்துப் பார்க்கும்போது "காலம் - சூழல்" என்பது மிகவும் பிரமாண்டமான விடயங்களைக் குறித்து நிற்பதை நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டும். "காலம்" என்ற பதம், சமூகத்தில் அல்லது இயற்கையில் ஏற்படுகின்ற முன்னேற்றமான அல்லது பின்னேற்றமான, நன்மையான அல்லது தீமையான பல செயற்பாடுகளின் "இப்போ - இன்று" என்ற வட்டத்தினை உள்ளடக்குகின்றது. இதற்கு ஒரு கிராமியப் பழமொழியை உதாரணம் சொல்லலாம். "ஒருதடவை கடந்த ஆற்றை மறுதடவை கடக்க இயலாது." இதன் அர்த்தம் எடுத்த எடுப்பில் உங்களுக்குப் புரியாது. ஏன், திரும்பவும் கடக்கலாம் தானே என்ற கேள்வி உங்களுக்கு எழும். ஆனால், இதன் அர்த்தம் என்னவென்றால் ஒரு தடவை ஆற்றைக் கடக்கும்போது நீங்கள் கடந்த அதே நீரை நீங்கள் மறுதடவை கடக்க முடியாது என்பதே. அந்த நீர் போய்விடும். இப்போது கடப்பது வேறு நீர். இதுபோலவே கால மற்றங்களுடன் இசை வாவது என்பது தொடர்ந்து மாற்றமுறும் விடயங்களின் அவ்வப்போதய நிலைமைக்கேற்ப உயிரினங்கள் தங்கள் வாழ்வியலை அமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

இதேபோல் "சூழல்" என்ற பதமும் அக-புற சூழல் விடயங்களைக் குறித்து நிற்கிறது. உதாரணமாக அகச் சூழலில் - அதாவது மனதில் - ஒரு உயிரினம் அச்சம் கொண்டு வாழுமாயின் அது விரைவாக நோய்வாய்ப்படும் வாய்ப்புக்கு ஆளாகிவிடும். ஆவ்வவை உயிரிணங்களுக்குப் பிறக்கும் சந்ததிகள்கூட நோஞ்சானாகப் பிறந்து, விரைவில் அவ் இனம் அழியும் வாய்ப்புக்கள் அதிகம். அதுபோல, புறச் சூழல் பற்றி பெரிதாய்ச் சொல்ல வேண்டியதில்லை. காரணம் எமது உள்நாட்டு யுத்தத்தில் உள்ள புறச்சூழல் எப்படியான நெருக்குதல்களை எம்மீது செலுத்தியது என்பதற்கு எம்மில் பலர் சாட்சியங்களாக இன்றும் இருக்கிறோம்.

தொடரும்..



புகலிட ஈழத் தமிழரின் கேங்ஸ்டர் திரைப்படங்கள்

யமுனா ராஜேந்திரன்

புகலிடத்தில் கேங்க்ஸ்டர் திரைப்படங்கள் என்பது ஈழத்தமிழர்கள் எடுக்கும் குறும்படங்களிலும் முழுநீளப்படங்களிலும் ஒரு முக்கியமான திரைப்பட வகையினமாக ஆகியிருப்பதற்கான காரணங்கள் என்ன?

இங்கிலாந்தைச் சேர்ந்த தயாபரன் 'இங்கிலாந்து கேங்ஸ்டர்ஸ்' என புருனல் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப ஊடக ஆய்வுத்துறைக்கென ஒரு விவரணப்படத்தை உருவாக்கி இருக்கிறார். 'ஸ்டில் லைப்' மற்றும் 'ஆர்டிகல் 38' என இரு குறும்படங்களை குவேரா மற்றும் நெல்சன் சிவலிங்கம் சகோதரர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். கனடாவிலிருந்து இயக்குனர் லெனின் எம். சிவம் '1999' என கனடிய தமிழ் கேங்ஸ்டரிசம் குறித்த ஒரு முழு நீளப்படத்தினை எடுத்திருக்கிறார். பட்ரிக் பத்மநாபன் 'வெஞ்ஜியன்ஸ்' என குறும்படம் எடுத்திருக்கிறார். பிரான்சிலிருந்து சதா பிரணவன் 'இடி முழக்கம்' படத்தை இயக்க, பிரேமா சந்தானகோபால 'நோய்வீதி' எனும் குறும்படத்தை இயக்கியிருக்கிறார். மூன்று நாடுகளிலிருந்து வந்த இந்த ஏழு திரைப்படங்களும் ஈழத் தமிழரினால் எடுக்கப்பட்ட ஈழத் தமிழ் கேங்க்ஸ்டர்கள் பற்றிய திரைப்படங்கள். இவர்களது திரைப்படங்களுக்கான கருவாக கேங்க்ஸ்டர்கள் யதார்த்தத்தில் இங்கிலாந்திலும் கனடாவிலும் பிரான்சிலும் உருவாகி வருவதற்கான சமூகவியல் காரணங்கள் என்ன?

இலங்கையிலிருந்து வந்த வரலாற்று ரீதியில் குறிப்பிடத்தக்க சிங்கள மொழித் திரைப்படங்களில் கேங்க்ஸ்டர் கிளாசிக்குகள் என்று சொல்லத்தக்க படங்கள் என எதுவும் இல்லை. இலங்கைத் தமிழர்களாலும் இலங்கைக்குள் அப்படியான படங்கள் எடுக்கப்பட்டதற்கான சான்றுகளும் இல்லை. இச்சூழலில் இப்படியான திரைப்படங்களை உருவாக்க ஈழத்தின் புகலிட இளைஞர்களைத் தூண்டிய சூழல் என்ன?

எவ்வாறாக பிரான்சிஸ் போர்டு கொப்பாலெ, மார்ட்டின் ஸ்கோர்சிசே மற்றும் மரியா வான் பீப்பிள்ஸ் போன்றோரின் ஹாலிவுட் கேங்க்ஸ்டர் திரைப்படங்கள் குறித்த ஆய்வுகளை அமெரிக்காவில் நிலவிய அன்றன்றைய சமூக ஒதுக்கல் மற்றும் நிற ஒதுக்கல் அரசியல் சூழலிலிருந்து பிரிக்க இயலாதோ, எவ்வாறு யகுசா கலாச்சாரத்தை ஜப்பானின் மூடுண்ட இறுக்கமான முதலாளிய சமூக அமைப்புக்கு மாற்றான நிழல் முதலாளித்துவம் குறித்த ஆய்வுகளிலிருந்து பிரிக்க முடியாதோ, அது போலவே ஈழத் தமிழர்களுக்கிடையில் உருவாகியிருக்கும் கேங்க்ஸ்டர் கலாச்சாரத்தைக் குறித்த ஆய்வுகளை இலங்கையின் சிங்கள இனவாத அரசியலிருந்தும் மற்றும் மேற்கத்திய இன நிற ஒதுக்கல் தொடர்பான அரசியல் விவாதங்களில் இருந்தும் பிரிக்க முடியாது.

எண்பதுகளிலும் தொண்ணூறுகளின் ஆரம்ப ஆண்டுகளிலும் கனடாவில் ஈழத்தமிழர்களினிடையில் கேங்க்ஸ்டர் கலாச்சாரம் என்பது மிகப் பெரும் பிரச்சினையாக எழுந்து நின்றது. இங்கிலாந்தில் தொண்ணூறுகளில் அதீதமாகத் தோன்றிய கேங்க்ஸ்டர் கலாச்சாரம் கனடாவைப் போலவே இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேய்நிலையை அடைந்தது. பிரான்சிலும் கேங்க்ஸ்டர் கலாச்சாரம் எனும் அளவில் உச்சத்தில் இருந்த கேங்க்ஸ்டர்களின் நடவடிக்கைகள் கனடா இங்கிலாந்து போலவே தேய்நிலையை அடைந்திருக்கிறது. குழு அளவிலான வன்முறைக் கலாச்சாரம் முடிவுக்கு வந்து கொண்டிருப்பது போலத் தோன்றினாலும், தனிநபர்களுக்கிடையிலான வன்முறைக் கலாச்சாரம் என்பது இளைய தலைமுறையினர் மத்தியில் ஒரு பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது. விளைவாக அப்போதுதான் பதின்மவயதைக் கடந்த இளைஞர்கள் தொடர்ந்து கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். இப்படி மரணமுறுகிறவர்களில் பெரும்பாலுமானவர்கள் 1983 ஜுலைக் கலவரத்தின் பின் பிறந்து புலம்பெயர்ந்தவர்கள் என்பது ஒரு மகத்தான சோகமாக இருக்கிறது.

எண்பதுகளிலிருந்து இன்றுவரையிலுமான இந்த வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில்தான் ஈழ சினிமாவின் இளம் இயக்குனர்கள் தமது ஈழ கேங்க்ஸ்டர் படங்களை உருவாக்கி வருகிறார்கள்.

நெற்றியின் பக்கவாட்டில் அழுத்தப்பட்ட துப்பாக்கியிலிருந்து அழுத்தப்படும் ஈயரவை முகத்தை துளைத்துச் சென்று தெறிக்கும் இரத்தத்துடன் சுவற்றில் மோதிச் சிதறும். நெற்றிப் பொட்டினைத் துளைக்கும் துப்பாக்கி ரவை பின் மண்டையில் குபுக்கென இரத்தச்சேற்றினூடே சுவற்றில் அடிக்கும். கை சாய்ந்த நிலையில் அதிலிருந்து சீறும் கேங்க்ஸ்டரின் ரவைகள் பட்டு சரிந்து தரையில் குப்புறக் கவிழ்ந்த உடல்களிலிருந்து இரத்தம் மெதுவாக வெளியேறிப் பரவும். ரயில் வண்டித் தொடராக மனிதர்கள் ஒருவரது தலைக்கு பிறிதொருவர் துப்பாக்கியை நீட்டியபடி நான்கு அல்லது ஐந்து பேர் நின்று கொண்டிருக்க காமெரா வட்டச்சுழலில் முன் போய் பின்திரும்பி வரும். சமகால கேங்க்ஸ்டர் திரைப்படங்கள் அனைத்திலும் இந்தக் காட்சிகள் இடம்பெறும்.

இந்தக் காரணங்களை முற்றிலும் தவிர்த்த பிற காரணங்களுனுக்காக தனிப்பட்ட முறையில் கேங்க்ஸ்டர் திரைப்படங்களைப் பார்ப்பது எனக்கு அளவிலாத உவகையை அளிக்கிறது. அடிநிலை மக்களின் வாழ்க்கையை சில படங்கள் மிகமிக நேர்த்தியுடன் சித்தரிக்கும் காரணத்திற்காக நான் திரும்பத் திரும்பவும் சில கேங்க்ஸ்டர் படங்களைப் பார்ப்பதுண்டு.

நிலவும் அறம்சார்ந்து வாழும் அரசுசார் சிந்தை கொண்ட பொதுமகனுக்கு இப்படங்கள் அதிர்ச்சியை அளிக்கின்றன. தமது அன்றாட வாழ்க்கையைப் பதட்டத்தில் கழிக்கும் அடிநிலை மனிதர்களுக்கு, கீழ் மத்தியதரவர்க்க மனிதனுக்கு இப்படங்கள் சந்தோஷத்தையும் குதூகலத்தையும் அளிக்கின்றன. கனவு நிறைவேற்றமாக, தமது அவாக்களின் நிறைவேற்றமாக கணிசமான வெகுமக்களால் பார்க்கப்படுவதனால்தான் கேங்க்ஸ்டர் படங்கள் உலகெங்கிலும் பெருவெற்றி பெறுகின்றன.

ஹாலிவுட் சினிமா துவங்கி, ஐரோப்பிய, மூன்றாம் உலகின் திரைப்படங்கள், இந்தி, தமிழகத் திரைப்படங்கள் என கேங்க்ஸ்டார் படங்களில் கிளாசிக்குகள் எனச் சில படங்கள் இருக்கின்றன. பிரான்சிஸ் போர்ட் குப்போலாவின் மூன்று பாகங்களிலான 'காட் பாதர்' (12/12/14 காட் பாதர் 2 ற்கு 40 வயது) இந்தத் திரை வகையினத்தின் உலக அளவிலான தலைச்சன் திரைப்படம். மார்ட்டின் ஸ்கோர்சிசேயின் 'குட் பெலாஸ்', குவின்டன் டாரன்டினோவின் 'ரிசர்வாயர் டாக்ஸ்' மற்றும் 'பல்ப் பிக்ஸன்' போன்றன ஹாலிவுட் சினிமாவின் கேங்க்ஸ்டர் கிளாசிக்குகள். தென் அமெரிக்க இயக்குனரும், பின்னாளில் ஹாலிவுட் சினிமாவைப் பாதித்தவருமான ரோபர்ட் ரோட்ரிக்சின் 'எல் மரயாச்சி', பிரேசில் இயக்குனரான கொன்சலாசின் 'சிட்டி ஆப் காட்'

மற்றும் 'அமரோஸ் பெரோஸ்', தென் ஆப்ரிக்காவின் கெவின் கூட்ஸ் இயக்கிய 'புளாட்' போன்றன ஹாலிவுட் சினிமாவினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் உலக கேங்க்ஸ்டர் கிளாசிக்குகளாக இருக்கின்றன.

ஹாலிவுட் சினிமாவின் கவ்பாய் திரைப்படங்களில் துப்பாக்கிகளைச் சுழற்றியபடி குதிரைகளில் சுற்றிவந்த மலைக்கிராமத்தின் வீரர்கள், அமெரிக்காவின் உயர்ந்த கட்டிடங்கள் நிறைந்த நகர்ப்புறத்தினுள் நுழைந்தபோது, அவர்களது கைத்துப்பாக்கிகள் இயந்திரத் துப்பாக்கிக்களாகவும் அவர்களது குதிரைகள் கறுப்புநிற வேககார்களாகவும் ஆகியது. கேங்க்ஸ்டர் திரைப்படங்களில் வடிவ அளவில் நிகழ்ந்த மாற்றம் இது.

அகிரா குரசோவாவின் 'செவன் சமுராய்' ஹாலிவுட்டில் 'தி மேக்னிபிசியன்ட் செவன்' ஆனது. ஏழை விவசாயிகளை கொள்ளையரிடமிருந்து காக்கும் வீரர்களாக அவர்கள் இருந்தார்கள். கொள்ளையரிடமிருந்து அப்பாவி மக்களைக் காத்த அவர்கள் அரசு நிறுவனத்திற்கு வெளியில் தமது குழுசார்ந்த அறம் கொண்டவர்களாக இருந்தார்கள். அரசு நிறுவனத்திற்கு மாற்றாக வெகுமக்கள் இத்தகைய குழுக்களை நம்பியவர்களாக, தீமைக்கு எதிராக தமக்கான நீதி தேடித்தருபவர்களாகக் குழுக்களைக் கருதினவர்களாக இருந்தார்கள்.

நிழல் அரசுகளாக, நிழல் நிலப்பிரபுத்துவமாக, நிழல் முதலாளித்துவமாக இத்தகைய குழுக்கள் தமது சாம்ராஜ்யங்களைக் கட்டியும் வந்திருக்கிறது. 'ராபின்குட்' மேற்கத்தியக் கலாச்சாரத்திற்கு என்றால் நமக்கு 'மலையூர் மம்பட்டியான்' இருக்கிறான். நம் காலத்திய எடுத்துக்காட்டு சந்தனக் கடத்தல் வீரப்பன். வீரப்பன் பிரச்சினையை மையமாக வைத்து, அவரை வில்லனாகச் சித்தரிக்காத இரண்டு திரைப்படங்கள் தமிழில் வந்திருக்கின்றன. முரளி-நாசர் நடித்த 'அதர்மம்' மற்றும் மம்முட்டி-நெப்போலியன் நடித்த 'எதிரும் புதிரும்' என்பன அந்த இரண்டு படங்கள். தமிழக எல்லைப்புற மலைவாழ் மக்கள் எதிர்கொண்ட காவல்துறையின் மிருகத்தனமான அடக்குமுறையையும் சித்திரவதைகளையும் அதற்கு எதிராக நின்ற வீரப்பனை மலைமக்கள் சாதகமாகப் பார்த்த வரலாறும் நம்காலத்திய நிஜம்.

நிழல் கடவுள்கள் இப்படித்தான் வரலாற்றில் எழுந்தார்கள். அவர்கள் அதிகாரத்தின் முன் அனாதரவான மக்கள் மத்தியில் திரைநாயகர்களாகவும் வலம் வருகிறார்கள்.

சமுராய்கள்-யகுசாக்கள், கவ்பாய்கள்-கேங்க்ஸ்டர்கள் போன்ற ஜப்பானிய, ஹாலிவுட் மரபு போலவே இந்தியாவிலும் காடுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மறைந்திருந்த கொள்ளையர்கள் பெருநகர்களின் தாதாக்கள் என நமக்கும் கேங்க்ஸ்டர் படங்கள் என்பன இருவகையிலானவை. இந்தியில் வெளியாகின 'ஸோலே'யும், 'பன்டிட் குயி(ன்)'னும் கிராமிய கேங்க்ஸ்டர் படங்கள் என்றால், 'தர்மாத்மா'வும், 'சத்யா'வும், 'சர்க்கா(ர்)'ரும், 'நாயக(ன்)'னும், நகரப்புற தாதாக்களின் படங்கள்.

கேங்க்ஸ்டர் திரைப்படங்கள் வெகுமக்களிடம் பெற்ற வரவேற்புக்கும் வெற்றிக்கும் காரணம் சொல்லும் சமூகவியல் ஆய்வுகள் குவிந்து கிடக்கின்றன. ஹாலிவுட் கேங்க்ஸ்டர் படங்கள் வெற்றிபெறும் தருணங்களிலெல்லாம் அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடியும் வேலையின்மையும் அதிகரித்திருப்பதாகச் சொல்கிறார் 'குட்பெலாஸ்' படத்தின் வசனகர்த்தாவான நிக்கலஸ் பிலெக்கி. இருபது ஆண்டுகள் காவல்துறையினிடையிலும் கேங்க்ஸ்டர்களுக்கிடையிலும் குற்றத்துறைச் செய்தியாளராகப் பணியாற்றியவர் அவர்.

வெகுமக்கள் தமக்கு ஒரு பிரச்சினை என வந்துவிட்டால் நீதி மன்றத்திலோ காவல்துறையினரிடமோ நீதி கிடைக்காது என அவர்கள் தம் வாழ்வு அனுபவத்தில் கருதுகிறார்கள். அவர்கள் எதிர்த்துப் போராட நேர்கிற வசதி பெற்றவர்கள் அல்லது அரசு அதிகாரம் கொண்டவர்களிடம் எண்ணற்ற வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். நீதித்துறை அதிகாரிகள் அவர்களிடம் இருக்கிறார்கள். தம்மால் ஒரு போதும் இவர்களிடம் போராடி வெற்றிபெற முடியாது என அவர்கள் கருதுகிறார்கள். இவர்களை எதிர்த்து மோதி, இவர்களைக் கொலை செய்து, போராடி மடிகிற கேங்க்ஸ்டர்களை இத்தகைய கையறு நிலை மக்களே விரும்புகிறார்கள் என்கிறார் நிக்கலஸ் பிலெக்கி.


(கடவுளற்ற உலகின் கடவுளர்கள் என்ற தலைப்பில் யமுனா ராஜேந்திரன் எழுதிய ஆக்கத்தின் முதற்பகுதி இது.)

செக்ஸ் சுவிட்ச்!



மூளையில் இருக்கும் நியூரான்களில், உடலில் சுரக்கும ஆக்ஸிடோக்ஸின் என்ற ஹார்மோனுக்கு ஏற்ப மாறுகின்ற ஒரு சில நியூரான்கள்தான் ஒருவரது பாலுணர்வைக் கட்டுப்படுத்துகின்றன என்பதை எலிகளில் ஆய்வு நடத்தி விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

'காதல் ஹார்மோன்' என்றே சொல்லப்படுகின்ற ஆக்ஸடோஸின்கள்தான் பாலுணர்வு வழிந்தோடும் வேளைகளில் ஒருவரது நடவடிக்கைகளை செயல்பாடுகளை



கட்டுப்படுத்துகிறது என்பது நமக்கு ஏற்கனவே ஓரளவுக்கு தெரிந்த விடயம்தான்.



அப்படியிருக்க ஆக்ஸிடோஸினால் ஆட்கொள்ளப்படுகின்ற மூளையின் உயிரணுத் தொகுதியை எலிகளில் செயலிழக்கச் செய்து விஞ்ஞானிகள் ஆராய்ந்தபோது, ஒரு ஆண் எலிக்கு ஒரு கட்டையைப் பார்ப்பதும், சேரத் தயாராகவுள்ள ஒரு பெண் எலியைப் பார்ப்பதும் ஒன்றாக இருந்திருக்கிறது.

அதாவது இவ்விரண்டைப் பார்க்கும்போதும் அதன் மூளையில் ஏற்படும் உணர்வு ஒரே மாதிரியாக இருந்திருந்தது என விஞ்ஞானிகள் செல் என்ற அறிவியல் சஞ்சிகையில் தெரிவித்துள்ளனர்.

ஆண்களுக்கு மட்டும்தான் என்றில்லை, பெண் எலிகள் துணை தேடும் பருவத்திலும், இந்த நியூரான்களைக் கட்டுப்படுத்திவிட்டால் அவை பாலுறவில் நாட்டம் கொள்வதே இல்லையாம்.

ஆக இந்த நியூரான்களை கட்டுப்படுத்திவிட்டால், அல்லது ஆக்ஸிடோஸின் சுரப்பதை கட்டுப்படுத்திவிட்டால், காமம் காலியாகிவிடும் எனத் தெரிகிறது.

இந்த ஆய்வின் முடிவுகள் சிறப்பம்சம் வாய்ந்தவை ஏனென்றால், மிகக் குறைந்த அளவில் இருக்கும் இந்த நியூரான்களுக்கு இத்தனை வல்லமை இருப்பது இப்போதுதான் விளங்குகிறது என இந்த ஆய்வில் பங்காற்றிய நியூயார்க் ராக்ஃபெல்லர் பல்கலைக்கழகத்தின் நதானியல் ஹெய்ன்ஸ் கூறுகிறார்.

மூளையின் மேற்பரப்பில் முன்பகுதியில் ப்ரிஃப்ரண்டல் கார்ட்டெக்ஸ் என்று சொல்லப்படும் இடத்தில் ஆக்ஸிடோஸின் வயப்படும் இந்த நியூரான்கள் அமைந்திருக்கின்றன.

ஒருவரது குணாதிசயம், நமது கற்கும் ஆற்றல், நமது சமூக நடத்தை போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் மூளைப் பகுதி இது.

அதேபோல ஒரு பெண் பிள்ளை பெற்றவுடன் தான் பெற்ற பிள்ளை மீது அவருக்கு ஏற்படும் பாசத்துக்கும் பிணைப்புக்கும் பின்னால் இருப்பதும் ஆக்ஸிடோஸின் ஹார்மோன்கள்தான்.

நியூரான்கள் ஒன்றுடன் ஒன்று தகவல் பரிமாறிக்கொள்ளும் பாலமாக ஆக்ஸிடோஸின்கள் செயல்படுவதை இந்த ஆய்வு நிரூபித்துள்ளது.



"காதல் வந்தால் சொல்லி அனுப்பு
உயிரோடு இருந்தால் வருகின்றேன்"

என்று இன்று ஒரு கவிஞன் எழுதுகின்றான்.

"ஒருத்தி ஒருவனை நினைத்துவிட்டால் அந்த
உறவுக்கு பெயர் என்ன – காதல்"

என்று இன்னும் ஒரு கவிஞன் நாற்பது ஆண்டுகள் முன் எழுதி உள்ளான்.

எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்றுழி,
கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்..

இவ்வாறு கம்பனும், காலம் காலமாக தமிழ் கவிகள் எழுதி வரும் அளவுக்கு காதல் என்ன செய்துவிடுகின்றது இந்த மனித குலத்தை.

எக்காலத்தில் காதலை எழுதினாலும் அதன் இனிமை மாறாது இருக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகள் முன் வாழ்ந்த வள்ளுவர் காதலின் பண்புகளை மிகவும் அழகாக சொல்கின்றார். ஒரு பெண்ணை மையபடுத்தி காதலை வர்ணிக்கும் பொழுது, ஒரு பெண் அவளது மைகொண்ட விழிகளை அசைக்க ஆடவர் உயிர் ஆடுகின்றது. அந்த விழி அசைவின் ஒரு நோக்கம் ஆடவர்மனதை காயப்டுதுவது இன்னும் ஒரு நோக்கம் அந்த காயங்களை குணாப்படுத்துவது.

அவள் அவனை நோக்கினாள் அவன் ஆனந்தம் கொண்டான். அவள் அவனை நோக்காது விழியை மறு திசையில் அசைத்து சென்றாள் அவன் வருந்தினான். இரு நோக்கு அவளது கண்ணில் ஒன்று மன நோயை கொடுக்கும் மற்றயது அந்த நோய்க்கு மருந்தாகும்.

இருநோக்கிவளுண்   கணுள்ளதொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

இரு நோக்கு அவளின் கண்ணில் உள்ளது. ஒரு நோக்கு நோய் நோக்கு மற்றயது அந்த நோயை நீக்கும் நோக்கு....

உன் பார்வை பட்டதும்
நீரை வார்த்தது வானம்...
உன் பார்வை பிரிந்ததும்
பாலை வனம் ஆனது சோலை

ஹனா

ஒருபெண்ணின் பார்வை ஒரு ஆடவனை நோய்க்குள் தள்ளிவிடும் நோக்காகவும், பின் அந்த நோய் மருந்து போல இன்னுமொரு பார்வை. இரு நோக்கு இவளின் கண்உள் உளது....

இன்று ஒரு கவிஞன்

பார்க்காதே... பார்க்காதே... அய்யய்யோ
பார்க்காதே....
நீ பார்த்தா பறக்கிறேன்.. பாதை மறக்கிறேன்...
பேச்சை குறைக்கிறேன் சட்டுன்னுதான்....
நேக்கா சிரிக்கிறேன்... நாக்கை கடிக்கிறேன்...
சோக்கா நடிக்கிறேன் பட்டுன்னுதான்....
இந்த ஒரு பார்வை யால தானே நானும்
பாழானேன்....

அவளது பார்வைக்குள் எவ்வளவு இருக்கின்றது.

பெண்ணே என்னை அப்படி பார்க்காதே. உன் மையுண்ட கண் என்னை காமத்தில் தள்ளி மன நோய் கொள்ள செய்கின்றது. உன் பார்வை என்மீது கொண்ட காதலால் இருப்பின் நீ உன் கண்ணால் வெளிப்படுத்துகின்ற அசைவு என் நோய்க்கு மருந்தாக மாறிவிடுகின்றது. உன் கண் நிகழ்த்துகின்ற நோக்கு எது. அன்பான நோக்கு, ஆபத்தான நோக்கு எது என்று அறியாது நான் வாடுகின்றேன். நீ பொதுவாக எலோரையும் பார்பதுபோல என்னை பார்ப்பது நியாயம் இல்லை. அது என்னை வதைகின்றது. நீ பொதுவாக பார்த்தேன் என்று மட்டும் சொல்லிவிடாதே. உன் நோய் செய்யும் பார்வைதான் அது. என்னை மட்டும் பார்க்கும் உன் நோக்கினை என் மீது செலுத்து நான் உயிர் வாழ்வேன்

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாகம் அன்று பெரிது.

உன் கண் களவு கொள்ளுகின்றது என்னை. வதைக்கின்றது, என் எண்ணமும் சிறுது சிறுதாக காமத்தின் நோத்கதுள் இழுக்கின்றது. உன் பார்வை கூட காமத்தில் சிவந்த செம்பாகம் என்று சொல்லும் அளவு பெரியது. உன்னால் எப்படி முடிகின்றது. குறுகிய சின்ன இமைகள் இவ்வளவு பெரியதாக ஒரு பார்வையை எப்படி செய்கின்றது...

இவ்வாறு காதலின் சுகம் இலக்கியமாக மிக அருமையாக வேறு எந்த மொழியிலும் சொல்லப்பட்டு இருக்குமா என்று மனம் சிந்திக்க தொடங்குகிறது....


Shan Sarvananthan
Call: 416 - 720 - 1184
MERRY CHRISTMAS
CIVIC
Formula Honda
Where You're Treated Like Family
2240 Markham Road, Scarborough, ON, M1B 2W4 Off: 416 -754-4555 Fax: 416-754-9465 atheesans@formulahonda.com www.formulahonda.com


GASA RESTAURANT
காசா உணவகம்
Take Out & Catering
we are specialist in Biriyani
Kotthu Rotti கொத்து றொட்டி
Idiyappa Kotthu இடியப்பம் கொத்து
Masala Dosai மசாலா தோசை
Buriyani புரியாணி
Cutlad கட்லட்
Susiyam சூசியம்
Singapore Noodles சிங்கப்பூர் நூடில்ஸ்
2950 , Kennedy Road, Unit # 3 Scarborough ON. M1V 1T1 416 321 1219
50 New Delhi Dr, Unit # 51 Markham, ON. L3S 0B5 905 471 6300
Combo for 20 People
BIRIYANI
(Mutton, Beef, Chicken)
Thandoori Chicken
Egg, Red Onion,
Vattilappam or
Fruit Salad
PUTTU PIRATTAL
(Squid, Scrap, Shrimp)
Thandoori, Chicken, Egg
Red Onion, Vattilappam or
Fruit Salad
SINGAPORE NOODLES
Thandoori Chicken, Veg Pattis
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream
STRING HOPPER BIRIYANI
Eggplant Pirattal,
Samosa, Veg Pattis,
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream
KOTTHU ROTTI
(Mutton, Beef, Chicken)
Thandoori, Chicken,
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream



நான்கு மனைவிகள்

ஒருவனுக்கு நான்கு மனைவிகள் இருந்தார்கள். ஆனால் அவன் தனது நான்காவது மனைவியை மட்டும் மிக அதிகமாக நேசித்தான். அந்த மனைவியின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றினான். அவளுக்கு தேவையானதை எல்லாம் செய்துகொடுத்தான்.

அவன் தனது மூன்றாவது மனைவியைக்கூட நேசித்தான். ஆனால் அவளைத் தனது நண்பர்களுக்கு முன்னால் காட்டிக்கொள்ள பயந்தான்.

பிறரோடு ஓடி விடுவாளோ என்று பயந்தான்.

அவன் தனது இரண்டாவது மனைவியையும் நேசித்தான். ஆனால் தனக்கு பிரச்சினைகள் வரும்போது மட்டும் அவளிடம் போவான். அவளும் அவனுடைய பிரச்சினைகளில் உதவினாள்.

ஆனால் அவன் ஒருபோதும் தனது முதல் மனைவியை நேசிக்கவே இல்லை. ஆனால் அவளோ அவன்மீது மிகவும் நேசம் வைத்திருந்தாள். அவனது எல்லா தேவைகளையும் அவள் கவனித்து கொண்டாள்.

ஒருநாள் அவன் மரணப்படுக்கையில் விழுந்தான். தான் இறக்கப்போவதை உணர்ந்துவிட்டான். தான் இறந்த பின் தன்னுடன் இருக்க ஒரு மனைவியை விரும்பினான்.

எனவே தன்னுடன் சாக யார் தயாராய் இருக்கிறார்கள் என அறிந்துகொள்ள விரும்பினான். தான் அதிகம் நேசித்த நான்காவது மனைவியை அழைத்தான்.

அவளோ அதிரடியாக மறுத்துவிட்டு அவனை விட்டு நீங்கினாள். அவன் தனது மூன்றாவது மனைவியை அழைத்தான்.

அவளோ நீயோ சாகப்போகிறாய். நான் வேறு ஒருவருடன் போகப்போகிறேன் என்று கூறிவிட்டு சென்றுவிட்டாள்.

பிறகு தனது இரண்டாவது மனைவியை அழைத்துக் கேட்டான். அவளும் சாரி என்னால் உன் கல்லறைவரைக்கும் வரமுடியும். கடைசி வரை உன்னுடன் வரமுடியாது என்று மறுத்துவிட்டாள்.

நொந்துபோன அவன் இதயம் தளர்ந்து போனது. அப்போது தான் அவனது முதல் மனைவியின் குரல் ஒலித்தது.

"நீ எங்கே போனாலும் நான் உன்னுடனே இருப்பேன். உன்னுடன் நான் கண்டிப்பாக வருவேன்" என்று சொன்னாள். ஆனால் அவளோ எலும்பும் தோலுமாக சாகும் தருவாயில் இருந்தாள். காரணம் அவன் அவளை நன்கு கவனித்துக் கொள்ளாததுதான். அவன் வருந்தினான். நான் நன்றாக இருக்கும் போதே உன்னையும் சரியாகக் கவனித்திருக்கவேண்டும். தவறிவிட்டேன் என்று அழுதான். அந்த வருத்தத்திலேயே மரித்தும் போயினான்.

அவனுக்கு மட்டுமல்ல நமக்கும் நான்கு மனைவியர் உண்டு.

நான்காவது மனைவி நமது உடம்பு. நாம் என்னதான் வாழ்நாள் முழுக்க நன்றாகக் கவனித்துக் கொண்டாலும் கடைசியில் நம்முடன் வரப்போவதில்லை. நாம் இறந்ததும் அதுவும் அழிந்து போகிறது.

மூன்றாவது மனைவி நமது சொத்து சுகம்தான். நாம் மறைந்ததும் அவை வேறு யாருடனோ சென்றுவிடுகிறது.

இரண்டாம் மனைவி என்பது நமது குடும்பம் மற்றும் நண்பர்கள். அவர்கள் நமது கல்லறை வரையில் தான் நம்முடன் கைகோர்ப்பார்கள்.

அதற்குமேல் நம்முடன் கூட வரப்போவதில்லை. முதல் மனைவியானவள் நாம் கவனிக்காமல் விட்ட நமது மனச்சாட்சி.

நாம் நன்றாக இருக்கும் போது நம்மால் கவனிக்கப்படாமல் நலிந்து சிதைந்து போய் இருந்தாலும் நம்முடன் இறுதி வரை கூட வரப்போவது அதுதான். நம்மை மதித்து யாரும் நம் மரணத்தின்பின் பேசுவார்களானால் அது நாம் மனசாட்சிப்படி ஆற்றிய நற்காரியங்களால்தான்.

ஜனவரி	நாள்	தமிழ் தேதி	சு.நே.:-	இ.கா.:-
1	வியாழன்	மார்கழி 17	கா-12.36-01.36 மா-02.36-04.06	கா-1.30-03.00 மா-10.30-12.00
2	வெள்ளி	மார்கழி 18	கா-11.36-12.36 மா-06.36-07.36	கா-10.30-12.00 மா-01.30-03.00
3	சனி	மார்கழி 19	கா-09.36-10.36 மா-06.41-07.41	கா-9.00-10.30 மா-3.00-4.30
4	ஞாயிறு	மார்கழி 20	கா-08.35-09.35 மா-10.30-11.30	கா-4.30-6.00 மா-7.30-9.30
5	திங்கள்	மார்கழி 21	கா-09.05-09.35 மா-07.35-08.35	கா-7.30-9.00 மா-4.30-6.30
6	செவ்வாய்	மார்கழி 22	கா-09.34-10.34 மா-06.34-07.34	கா-3.00-4.30 மா-9.00-10.30
7	புதன்	மார்கழி 23	கா-11.33-12.33 மா-06.33-07.33	கா-12.00-1.30 மா-12.00-1.30
8	வியாழன்	மார்கழி 24	கா-12.33-01.33 மா-02.33-04.03	கா-1.30-3.00 மா-10.30-12.00
9	வெள்ளி	மார்கழி 25	கா-11.32-12.32 மா-06.32-07.32	கா-10.30-12.00 மா-1.30-3.00
10	சனி	மார்கழி 26	கா-09.31-10.31 மா-06.36-07.36	கா-9.00-10.30 மா-3.00-4.30
11	ஞாயிறு	மார்கழி 27	கா-08.30-09.30 மா-05.45-06.45	கா-4.30-6.00 மா-7.30-9.00
12	திங்கள்	மார்கழி 28	கா-08.59-09.29 மா-07.29-08.29	கா-7.30-9.00 மா-4.30-6.00
13	செவ்வாய்	மார்கழி 29	கா-09.28-10.28 மா-06.28-07.28	கா-3.00-4.30 மா-9.00-10.30
14	புதன்	தை 01	கா-11.27-12.27 மா-06.27-07.27	கா-12.00-1.30 மா-12.00-1.30 TV (முகவரி தொலைக்காட்சி) ஆரம்பம்
15	வியாழன்	தை 02	கா-12.26-01.26 மா-02.26-03.56	கா-1.30-3.00 மா-10.30-12.00
16	வெள்ளி	தை 03	கா-11.24-12.24 மா-06.24-07.24	கா-10.30-12.00 மா-1.30-3.00
17	சனி	தை 04	கா-09.23-10.23 மா-06.28-07.28	கா-9.00-10.30 மா-3.00-4.30
18	ஞாயிறு	தை 05	கா-08.22-09.22 மா-05.37-6.37	கா-4.30-6.00 மா-7.30-9.00
19	திங்கள்	தை 06	கா-08.50-09.20 மா-7.20-8.20	கா-7.30-9.00 மா-4.30-6.00
20	செவ்வாய்	தை 07	கா-9.19-10.19 மா-6.19-7.19	கா-3.00-4.30 மா-9.00-10.30
21	புதன்	தை 08	கா-11.17-12.17 மா-6.17-7.17	கா-12.00-1.30 மா-12.00-1.30
22	வியாழன்	தை 09	கா-12.16-1.16 மா-2.16-3.46	கா-1.30-3.00 மா-10.30-12.00
23	வெள்ளி	தை 10	கா-11.14-12.14 மா-6.14-7.14	கா-10.30-12.00 மா-1.30-3.00
24	சனி	தை 11	கா-9.13-10.13 மா-6.18-7.18	கா-9.00-10.30 மா-3.00-4.30
25	ஞாயிறு	தை 12	கா-8.11-9.11 மா-5.26-6.26	கா-4.30-6.00 மா-7.30-9.00
26	திங்கள்	தை 13	கா-8.39-9.09 மா-7.09-8.09	கா-7.30-9.00 மா-4.30-6.00
27	செவ்வாய்	தை 14	கா-9.08-10.08 மா-6.08-7.08	கா-3.00-4.30 மா-9.00-10.30
28	புதன்	தை 15	கா-11.06-12.06 மா-6.06-7.06	கா-12.00-1.30 மா-12.00-1.30
29	வியாழன்	தை 16	கா-12.04-1.04 மா-2.04-3.34	கா-1.30-3.00 மா-10.30-12.00
30	வெள்ளி	தை 17	கா-11.02-12.02 மா-6.02-7.02	கா-10.30-12.00 மா-1.30-3.00
31	சனி	தை 18	கா-9.00-10.00 மா-6.05-7.05	கா-9.00-10.30 மா-3.00-4.30



"என் கரெக்டரையே புரிஞ்சுக்க மாட்டேங்கிறிங்க..." என்று சத்தியராஜின் வில்லன் டயலக்கோடு சென்ற தடவை விடைபெற்றது ஞாபகம். அந்த வில்லன் கெரெக்டர் யாருமில்லை, உங்களுக்கு உள்ளே உள்ள ஒரு பேர்வழிதான்.

விடயத்தை தேங்காயுடைப்பாய் உடைத்து வைக்கிறேன். அதாவது நாம் பிறருக்குத் தெரிவது போல், உண்மையில் நாம் இல்லை. பிறர் நமக்குத் தெரிவதுபோலும் உண்மையில் அவர்களும் இல்லை. நமக்குள்ளே இன்னொரு நான் இருக்கிறது. அது யார்?


பூச்சியத்துக்குள்ளேயொரு ராட்சியத்தை ஆண்டு
கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன்
அதைப் புரிந்துகொண்டால் அவன்தான் இறைவன்

என்ற பாட்டுக் கேட்டிருக்கிறீர்களா? அதுபோல் உங்களுக்கே புரியாமல் உங்களுக்குள்ளே இன்னொரு நான் இருப்பான் - இல்லையேல் இருப்பாள். அந்த உள்ளிருக்கும் இன்னொரு நானுக்குப் பெயர்தான் இன்னர் கெரெக்டர். வெளியே உங்களுக்கு ஒரு கெரெக்டர் இருக்கும். நீங்கள் ஒரு நல்ல பிள்ளையென்று பள்ளிக்கூடத்திலும் கெரெக்டர் சேர்டிபிகேட் வாங்கி, மடிப்புக் கசங்காமல் ஃபைல் பண்ணி வைத்து இன்டர்வியூக்களிலெல்லாம் பெருமையோடு காட்டிக்கொள்வீர்கள். ஒழுங்கான பிள்ளை, அடக்கமான பிள்ளை, பண்பான பிள்ளை என்றெல்லாம் அக்கம் பக்கத்தில் பெயரெடுத்து, பெண்பார்க்கும் போதோ, இல்லை மாப்பிள்ளை பார்க்கும்போதோ உங்களைப்பற்றி விசாரித்தால் நல்ல ரெக்கமன்டேஷன் எல்லாம் கிடைக்கும். அதெல்லாம் உங்கள் எக்ஸ்டேர்னல் கெரெக்டர் மட்டும்தான். வெளிப்பார்வைக்கு நீங்கள் எப்படி, உங்கள் நடத்தை எப்படி, குணம் எப்படி என்று வெளிக்காட்டிக்கொண்டிருக்கும் கெரெக்டர்தான். அதுவே உங்கள் உண்மையான கெரெக்டரென நீங்களே வெகுவாய் நம்பிக் கொண்டுகூட இருக்கலாம். ஆனால், இதையும் மீறி இன்னொரு கெரெக்டர், - அதுதான் நான் சொன்ன இன்னர் கெரெக்டர், உங்களுக்குள்ளே உறங்கிக்கொண்டிருக்கிறது.

"என்குள்ளே தூங்கிக்கொண்டிருக்கிற சிங்கத்தைத் தட்டியெழுப்பிவிடாதே!" என்று சினிமா ஹீரோக்கள் வசனம் பேசுவார்களே, அந்தச் சிங்கமோ, சிம்பான்சியோ அவர்களின் இன்னர் கெரெக்டர் அல்ல. அது அவர்களுக்கே தெரிந்த அவர்களின் கெரெக்டரின் மற்றொரு பக்கம். ஆனால் இன்னர் கெரெக்டர் என்பது ஒரு கள்வன் போல. உங்களுக்கே தெரியாமல் உங்கள் வீட்டுக்குள் (உங்கள் மனதுக்குள்) உலாவுவான். ஆனால் உங்கள் மிக மிக அந்தரங்கமான விடயங்களை எல்லாம் அவன்தான் தீர்மானிப்பான். அவன் உங்களது உடல்ரீதியான, உணர்வு ரீதியான பச்சையான விருப்பங்களை உங்களிடம் உந்திக்கொண்டிருப்பான்.

கடவுள் பாதி மிருகம் பாதி
கலந்து செய்த கலவை நான்
மிருகம் கொன்று மிருகம்
கொன்று
கடவுள் வளர்க்கப்பார்க்கின்றேன்
கடவுள் கொன்று உணவாய் தின்று
மிருகம் மட்டும் வளர்கிறதே....

என்று ஆளவந்தானில் கமலஹாசன் உறுமுவதும் இந்த இன்னர் கெரெக்டரின் தொல்லையால்தான். அந்த இன்னர் கெரெக்டரையே ஒரு எக்ஸ்டேர்னல் கெரெக்டாக மாற்றிவிட்டால் எப்படி இருக்கும் என்பதாக அமைந்த பாத்திரம்தான் ஆளவந்தானின் அந்த நந்தகுமாரன். எத்தனை நந்தகுமாரன்கள் எம்முள் இருக்கிறார்களோ யாருக்குத் தெரியும். அவனை அடையாளம் காணவேண்டுமா? சரி காட்டுகிறேன் பார்த்துக் கொள்ளுங்கள்.



நீங்கள் பழகிப்பார்க்காத மனிதர்களைப் பார்க்கும்போது ஒரு சிலரைப் பிடிக்கிறது ஒருசிலரைப் பிடிப்பதில்லை. எதைவைத்துப் பிடிக்கிறது எதை வைத்துப் பிடிப்பதில்லையென்று நீங்கள் உங்களையே கேட்டுப்பார்ப்பதில்லை. அந்த "எதைவைத்துத் தீர்மானிப்பது" என்பதை உங்கள் இன்னர் கெரெக்டர்தான் முடிவுசெய்கிறது. நீங்கள் மனதார நல்ல சிந்தனைகளோடு ஒரு கோவிலுக்கு வழிபடச்சென்று காரை நிறுத்தும்போது, மற்றவரை முந்தி ஓடிச்சென்று அந்தப் பார்க்கிங் ஸ்பொட்டைப் பிடிக்கச் சொல்லுதே அதுதான் அந்த இன்னர் கெரெக்டர். ஆனால் காரால் இறங்கியதும் அது மறைந்துவிட, நீங்கள் முந்தியவரையே பார்த்து, "நீங்களும் கோவிலுக்கோ, நானும் கோவிலுக்குத்தான்..." என்று நட்புறவாட உங்கள் எக்ஸ்டேர்னல் கெரக்டர் ஆஜராகிவிடுகிறது. ஒரு மரணச்சடங்கில் நீங்கள் உங்கள் உறவினர் இறந்ததற்காக அவரின் உடலருகே நின்று அழுதுகொண்டிருக்கும்போதும், உங்கள் கை உங்களை அறியாமல், அடிக்கடி உங்கள் முடிமயிரை ஒழுங்குபடுத்தி விடுகிறதே, இடைக்கிடையே ஹேன்ட் பேக்கைத் திறந்து லிப்ஸ்டிக்கைப் எடுத்து உதட்டில் பூசிவிடுகிறதே, நீங்களா அதற்குச் உத்தரவிட்டீர்கள்? இல்லை. நீங்கள் அழுதுகொண்டிருக்க, உங்கள் இன்னர் கெரெக்டர் உள்ளேயிருந்து அந்த அலுவல்களையெல்லாம் நேர்த்தியாக, தானே பார்த்துக்கொள்கிறது.

- பாஸ்கி -

இந்த இன்னர் கெரெக்டர் நீங்களே பின்னர் நினைத்து அசிங்கப்பட வைக்கும் பல காரியங்களையும் நினைப்புகளையும்கூட உங்களுக்கு ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் உங்கள் மனம் அது வேறு யாரோ செய்த விடயம் என்பதுபோல் அதை நினைத்துப் பார்க்கக்கூட மறுத்து விலகி நிற்கும். ஏன் தெரியுமா? இன்னர் கெரெக்டரின் முடிவென்பதால் நீங்கள் அதை உங்கள் முடிவாக ஒப்புக்கொள்வதில்லை. இந்த வகையில் உங்களை நீங்களே ஏற்பதில்லை.

ஆனால் உண்மையைச் சொல்லவேண்டுமானால் இந்த இன்னர் கெரெக்டர் உங்கள் நன்மைக்காகவே செயற்படுகிறது. ஆனால் அது பச்சையான நன்மையாக இருக்கிறது. அது பாவம், என்ன செய்யும்.


PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
$229,800
Toronto - Nelson/Mclevin
4+1 Rooms, 3 Washrooms
Basement finished
$269,900
Toronto - Sheppard/E.Mccowan
2 Rooms, 2 Washrooms
$299,900
Toronto - Kennedy/Eglinton Ave
3+1 Rooms, 2 Washrooms
$300,000
Oshawa - Simcoe/Wellington
3 Rooms, 1 Washrooms
Oshawa - Harmony Rd. N./Easbourne
3 Rooms, 2 Washrooms
Basement finished & Sep Entrance
Whitby - Baycliffe/Twin Streams
3 Rooms, 3 Washrooms
Stouffville - Mantle/Tenth Line
3 Rooms, 3 Washrooms
$510,000
Toronto - Ellesmere/Neilson
3 Rooms, 2 Washrooms
Basement finished
$529,000
Markham - Kennedy/Hwy 7
3+1 Rooms, 3 Washrooms
$634,813
Brampton - Bovaird/Sunnyvale
4+2 Rooms, 5 Washrooms
Basement finished & Sep Entrance
$644,900
Mississauga - Derry/Terragar
4 Rooms, 4 Washrooms
Basement finished
$659,900
Whitby - Joshua/Montgomery
5 Rooms, 5 Washrooms
Markham - Kennedy/Hwy 7
4 Rooms, 3 Washrooms
$779,900
Mississauga - Mavis/Eglinton
4+1 Rooms, 4 Washrooms
Basement finished
Markham - 16th/Mingay/Mccowan
4+2 Rooms, 6 Washrooms
Toronto - Sheppard/Kingston Rd
5+2 Rooms, 6 Washrooms
Basement finished
HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
Independently Owned and Operated, REALTOR
Sales Representative
HOMELIFE
HIGHER STANDARDS
Uthayan Sivarajah
416 301 5555
Sugan Sivarajah
905 201 0066
Raj Sivarajah
416 843 3333
sivaKumar Sivarajah
416 453 7777

அது பத்து லட்சம் வருடங்களுக்கு முன்னே மனிதனும் மிருகமாக இருந்த போது உருவான சுபாவம். தனது மனக்கிடக்கையை பச்சை பச்சையாய் ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படுத்தக்கூடிய காலத்தய சுபாவம். ஆசையும் வெளிப்படை, காமமும் வெளிப்படை, கோபமும் வெளிப்படை, உடம்பே வெளிப்படை! எல்லோருமே அப்படியென்பதால் யாரும் யாருக்கும் தங்கள் சுபாவங்களை மறைக்க வேண்டியதாயிருக்கவில்லை. ஆனால் நாகரீக உலகம் அப்படியில்லையே. அதற்கு வெளிப்படைத் தன்மை கிடையாது. அதனால் அந்த வெளிப்படையான சுபாவங்கள் உள்ளே அடங்கி இன்னர் கெரெக்டராக உருமாறிவிட, வெளித்தோற்றத்துக்காக நாம் வரித்துக்கொண்ட சுபாவங்கள் எக்ஸ்டேர்னல் கரெக்டராக அமைந்துவிட்டன. உள்ளடங்கியுள்ள இந்த இன்ன கெரெக்டருக்கு நாகரீக உலகில் "சுயநலம்" என்று பெயரிட்டுவிட அது பயந்து மனதின் இருண்ட அடி ஆழத்திற்குள் போய் பதுங்கி விட்டது. இந்தப் பெயர் உங்கள் எக்ஸ்டேர்னல் கெரெக்டருக்குப் பிடிக்காதாகையால், "நான் அவனில்லை" படத்து அன்டி ஹீரோவைப்போல் அது "நான் அவனில்லை" என்றே சொல்லிக்கொள்ளும்.

உடை மாற்றினாய் எந்தன் உயிர் மாற்றினாய்
நெஞ்சை அடியோடு இடம் மாற்றினாய்
தடம் மாற்றினாய் என்னில் தணல் ஏற்றினாய்
தாங்காத சுகம் ஊற்றினாய்...
என்று பெண்களெல்லாம் பாடப்பாட அவனோ
நா...நோ, நோ நோ. நான் அவனில்லை.. நான் அவனில்லை..

என்று ஒரேயடியாக மறுத்தபடி ஓடுவானே அதுபோல!

இப்போ, நம்ம காதலுக்குப் பிரச்சினையும் இந்த இன்னர் கெரெக்டர்தான். அதாவது இந்த இன்னர் கெரெக்டர் உங்களுக்கு எப்படி உண்டோ, அதுபோல் உங்கள் காதலருக்கும் உண்டு. ஆனால் அவருக்குத் தெரிவது உங்கள் எக்ஸ்டேர்னல் கெரெக்டரே. உங்களுக்குத் தெரிவதும் அவரது எக்ஸ்டேர்னல் கெரெக்டரே. நீங்கள் காதலிக்கும் வேளையில் இந்த இன்னர் கெரெக்டர், ஒரு நாகரீகம் தெரிந்த நணபன்போல, "உங்களுக்கு நடுவில நான் வேண்டாம்ப்பா" என்றுகூறி கழன்றுவிடும். நீங்களோ, உங்களை மிக இனியவராக அவருக்குக் காட்டுவீர்கள். அவர் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறென்றுமில்லை என்ற நீதிமன்றச் சத்தியம்போல் உங்கள் செவிகளில் விழும். மனதோ...

உன்னை நான் சந்தித்தேன்
நீ ஆயிரத்தில் ஒருவன்
என்னை நான் கொடுத்தேன்
என் ஆலயத்தின் இறைவன்...
ஓ.. ஆலயத்தின் இறைவன்!

என்று உள்ளே பாடிக்கொண்டிருக்கும். ஆனால் உங்களுக்கு டாட்டா காட்டிச் சென்ற அந்த இன்னர் கெரக்டரோ இப்போதைக்குத் தலைகாட்டாது பதுங்கியிருந்து பார்த்துக்கொண்டிருக்கும். நீங்கள் திருமணம் செய்து குடித்தனம் நடத்த வெளிக்கிட்டதும், அந்தக் காதல் மயக்கம் தெளிந்து வாழ்க்கைக்கான விடயங்களில் இறங்கும்போதுதான் அது தனது கயிற்றை வீசும். அப்போது தொடங்கும் பிரச்சினை.

இப்போது எங்கள் பிரச்சினை என்ன? எம் காதலரின் இன்னர் கெரெக்டரை எப்படிப் புரிந்துகொள்வது என்பது. அதுசரி. முதலில் உங்கள் இன்ன கெரெக்டரை நீங்கள் புரிந்துகொள்ள ரெடியா? ரெடியானாலும் காத்திருக்கத்தான் வேண்டும். பக்கம் முடிந்துவிட்டதே. வட்டு ரூ? மறுமுறை சந்திப்போம். அதுவரை உங்கள் காதலை ஒத்திவைத்... ஓ சொறி, அது அவா அவா இஷ்ட்டம். நமக்கேன் வம்பு!


சப்பாத்துக்கனவு...



மட்டுவில் ஞானக்குமாரன்.

கனகண்ணையும் கண்மணியக்காவும்

தொடர்-3



வடமேல் அரியாலையூர் காத்திகேசுபிள்ளை

எல்லாமே தயாராகியிருந்தன. கராஜ்பக்கம் அடிக்கடி போய்வந்த கனகண்ணையிண்ட நடையிலே இருந்த உற்சாகத்திற்கும் பிறகால, கை கட்டினபடி குறுக்கும் நெடுக்குமாக நடந்து திரிஞ்சபடி கனகண்ண முணுமுணுத்துக்கொண்டிருந்து "உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்" என்ற வாத்தியாரின் தத்துவப் பாடலுக்கும் அர்த்தம் விளங்காமல் கண்மணியக்கா மண்டையைக் குடைந்தபடியிருந்தா. கராஜில கனகண்ணை தனது தயாரிப்புக்களை அடிக்கடி செக் பண்ணிக்கொண்டார். கனகண்ணை கராஜ்பக்கம் அடிக்கடி போய்வந்ததை அவதானித்த கண்மணியக்கா ஆர்வக் கோளாறினால் உந்தப்பட்டு ஒருதடவை சற்செயலாகப் போவதுபோல காறாச் உள்க்கதவுப் பக்கமாய்ப் போய் எட்டிப்பார்த்ததைக் கண்ட கனகண்ணை, "மறைந்திருந்து பார்க்கும் மர்மமென்ன..." என்று போட்ட போட்டிலே, கண்மணியக்கா விறுவிறென்று குசினிப்பக்கம் ஒன்றும் தெரியாததுபோல ஓடிப்போய்ட்டா.

பின்னேரத்தில ஜக்கெட்டையும் போட்டுக் கொண்டு, பின்னால டெக்கில நிண்டு, யாழ்ப்பாணத்தில இருந்து வரழைத்த கோடாப்போட்ட சுருட்டில இரண்டு இழுப்பு இழுத்துப்போட்டு வந்து பேஸ்ட்மெட்டில ஒரு குட்டித்தூக்கம் போடுற கனகண்ணை, அண்டைக்கெண்டு சீலிங்கைப் பார்த்தபடி நடந்து திரிஞ்சது, கண்மணியக்காவை மட்டுமல்ல, பிள்ளைகளையும் கொஞ்சம் குழப்பிப் போட்டுது. வருத்தப்படாத வயோதிபர் சங்கத்தைக் கண்மணியக்காவும் பிள்ளைகளும் ஜஃப்னா பார்லிமென்ட் எண்டு நக்கல் பண்ணுவது வழக்கம். கடைசியாக நடந்த ஜஃப்னா பார்லிமென்டில சிவாலிச் சிங்கத்திட்டயிருந்து ஒலிவாங்கியைப் பறிக்க வெளிக்கிட்டதில தொடங்கின களேபரம், தண்ணிப்போத்தல் மோதலாக முத்திப்போய் ரத்தக் காயங்களில் முடிஞ்சதைப் பற்றித்தான் கனகண்ணை யோசிக்கிறார் போல என்று மகள் சொல்ல, கண்மணியக்காவும் ஆமோதித்துக்கொண்டா. ஐந்து ஐந்தரைக்குத் தொடங்கின டீவி சீரியல் படலம் பத்தரைக்கு முடிஞ்சுபோச்சு. எல்லோரும் படுத்த பிறகும் கனகண்ணை மட்டும் முழிச்சிருந்தார். ஹைட்டோ பில்லுக்குப் பயந்து நூத்து விடுற ஹோல் லைட் எரிஞ்சுகொண்டே இருந்தது. சாமம் 1 மணிக்கு பெக்யார்ட்டில கனகண்ணை யாரையோ திட்டித் தீர்க்கிற சத்தம் கேட்டு முதலில முழிப்பு வந்தது கண்மணியக்காவுக்குத்தான்.

கனகண்ணையிட குரலுக்கு எண்டு, கண்மணியக்காவிண்ட காதுக்குள்ளையும், மூளைக்குள்ளயும் தனி செக்ஷன்களே இருக்கு. கனகாலத்துக்குப் பிறகு கனகண்ணையோட குரல் செவிப்பறையை உதறுகிற மாதிரி வந்ததில, கண்மணியக்கா பயந்துபோனா. உடனேயே பிள்ளைகளைத் தட்டியெழுப்பிக் கொண்டு கிச்சின் சைட்டால திறந்திருந்த கதவுப்பக்கத்தால பெக்யார்ட்டுக்கு ஓடின கண்மணியக்காவுக்கும் பிள்ளைகளுக்கும் செம ஷொக்! ஏரியாவைக் குளப்புற ஸ்கங்க் மணத்துக்க, மந்து வைச்சுப் பிடிச்ச ஸ்கங்கோட மல்லுக்கட்டிக்கொண்டிருந்தார் கனகண்ணை. "ஐயையோ அத விடுங்கோ ஐயா, விடுங்கோ ஐயா" எண்டு பிள்ளயல் கத்தினதுகூடக் கேக்காமல் ஸ்கங்குக்கு வடைச் சொல்லிக் கொண்டே மல்லுக்கட்டிக்கொண்டிருந்தார் கனகண்ணை.

நடந்தது இதுதான். புள்ளைகள் ரவீன் லொட் எண்டு சொல்லி வாங்கின வீட்டில ரக்கூன் தொல்லை அளவு கணக்கில்லை. அதை எப்படி நிப்பாட்டிறதெண்டு தெரியாமல் பிள்ளையள் பட்ட கஷ்ட்டத்தைப் பார்த்த கனகண்ணை, தன்னுடைய வேட்டை ஸ்கில்ஸ்ஸைப் பாவிச்சு ரக்கூனைப் படிச்சுப்போட்டால் தனக்கு வீட்டில நல்ல பெயர் கிடைக்கும் எண்டு போட்ட திட்டத்தில இருந்த ஓட்டைதான் இந்தக் களேபரத்துக்குக் காரணம்.

வன்னிக் காட்டில கனகு வாறான் என்டால் காட்டெருமையும் கவுதாரியும் தறிகெட்டுப் பறக்கும். வைச்ச பொறியில சிக்கின சீவனை இழுத்துக்கொண்டு ராஜநடைபோட்டு ஊர்திரும்பிற பெருமையில இப்பவும் நெஞ்சு நிமிரும் கனகண்ணைக்கு. அதே நினைப்போட கனகண்ணை பெக்யார்டில வேலியில வைச்ச மந்தில மாட்டினது ரக்கூனுக்குப் பதிலா, ஸ்கங்காப் போட்டுது. பிடிபட்ட ஸ்கங்கை ரக்கூனெண்டு நினைச்சு கிட்டப்போய்த் தொட்ட கனகண்ண ஸ்கங்க் பீச்சியடிச்ச திரவத்தில நனைஞ்சு தோஞ்சுபோய் தட்டுத் தடுமாறி மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்.


மந்தில அகப்பட்ட ஸ்கங்கையும், ஸ்கங்கோட மல்லுக்கட்டுற கனகண்ணையையும் பிரிச்செடுக்கிறதுக்குள்ள பிள்ளையளுக்கு உசிர் போயிட்டுது. குளிரில ஸ்கங்க் மணத்தோட பெக்யார்டில வெடவெடத்துக்கொண்டு நின்ற கனகண்ணையை, தக்காளி ஜ/சும் ஒரேஞ்ச் ஜ/சும் போட்டுக் குளிக்கவாத்துக் காப்பாத்திறதில பள்ளைகள் மும்மரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

பெட்டி போட்டு அடிச்சுப் பிடிக்க நினைச்ச கனகண்ணைக்கு, மிஷன் பெயிலியர் என்ற கவலையில நெஞ்சு கனத்தது. அந்தக் குளிரோ, ஸ்கங்க் கணமோ அவரைத் தாக்கவில்லை. தோல்வியில் துவண்டு போயிருந்தார்.

டெக்கிலே நின்றபடி, "இந்த மனிஷன் கனடா வந்ததிலயிருந்து என்னைப் படுத்திற பாடு பெரும்பாடு!" எண்டு கத்திக்கொண்டே இருந்த கண்மணியக்கா. "கையக் கால சும்மா வைச்சுக்கொண்டிருக்க ஏலாமல் ஏன் இந்த மனிஷன் இப்பிடிக் குதியங் குத்த வெளிக்கிடுது" எண்டு சொல்லிக் கொண்டே உள்ள போன கண்மணியக்கா அறைக் கதவை அடிச்சுச் சாத்திப்போட்டு கட்டிலில உட்கார்ந்து அழ ஆரம்பிச்சுட்டா.

வன்னியிலே மண்ணையும் மனிசரையும் நேசிச்சு பல பத்தாண்டுகள் வாழ்ந்து ஆழமாக வேரூன்றியிருந்த கனகண்ணையின் வாழ்க்கையை அறுத்தெடுத்துக்கொண்டு வந்து ஒரு பேஸ்மென்டில முடக்கிப்போட்டிட்டேன் என்ற வேதனை கண்களிலிருந்து தாரை தாரையாக வழந்தோடியது. வந்ததுதான் வந்தாச்சு. இனி இந்தாள இங்கத்தய சிற்றுவேஷனுக்கு எப்பிடிச் சரிக்கட்டி எடுக்கிறது எண்டதுதான் அவவுக்கு இப்ப பெரிய தலையிடி.

தொடரும்...



..றதியை எப்படித் துறப்பது?



தற்போது பலரும் ஞாபக மறதியால் அவதிப்பட்டு வருகிறார்கள். உடல் மந்தமாக இருக்கும்போது மூளையும் மந்தமாகச் செயல்படும். அதன் விளைவாக ஞாபக மறதி போன்றவை ஏற்படும். தற்போதைய உலகில் சுறுசுறுப்புடன் இயங்கினால் தான் பல துறைகளில் சாதிக்க முடியும்.

ஆனால் இந்த வகையான சுறுசுறுப்பான மன ஆரோக்கியத்தை கொண்டு வருவது சில நேரங்களில் அவ்வளவு எளிதல்ல. எனவே உங்கள் மூளையை ஆரோக்கியமாக சுறுசுறுப்புடன் இயங்க வைக்கவும் ஞாபக மறதிப் பிரச்சினை ஏற்படாமல் இருக்கவும் சில வழிகள் இதோ.

சரியானதைச் சாப்பிடுங்கள்

மூளை சுறுசுறுப்புடன் இயங்குவதற்கு முறையாக உணவு உட்கொள்ளுதல் என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். எனவே தினசரி உணவில் பச்சை இலை காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

புதிய பழங்களைச் சாப்படுங்கள். உங்களின் சரியான உணவுகள், மூளைச் சேதத்தை தடுக்கும் ஆன்டி ஆக்சிடன்ட்களாக உள்ளன.

மீன் மற்றும் உலர்ந்த பருப்பு வகைகளான பாதாம் போன்ற பொருட்களும் உங்கள் மூளை சக்தி பெற உதவும்.

நன்றாகத் தூங்குங்கள்:

நல்ல தூக்கத்துக்கு மாற்றாக எதுவுமே கிடையாது. இன்றைய பரப்பான உலகில் தெந்தரவு இல்லாத தூக்கம் மிகவும் அத்தியாவசியமானது.

ஆழ்ந்த தூக்கம் உங்களின் மூளையை மட்டும் அல்லாமல் உடலையும் சம நிலைப்படுத்தும்.தொடர்ச்சியான வேலைகளால் கவனக்குறைவு அதிகரிப்பதும் ஞாபக மறதி ஏற்படுவதும் இயல்பே.

மன அழுத்தத்தை தவிருங்கள்

உங்கள் மூளைக்கு ஆக்சிஜன் செல்வதை மன அழுத்தம் கடினமாக்குகிறது. அதன் காரணமாக மூளை செல்கள் இறக்கத் தொடங்குகின்றன. எனவே மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த நீங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது அவசியம். மன அழுத்தத்தில் இருந்து உடனடியாக விடுபட, ஆழமான மூச்சுப்பயிற்சி உள்ளிட்டவற்றை முயற்சி செய்யுங்கள்.



மூளைக்கு வேலை தரும் விளையாட்டுக்கள்:

புதிர்கள், செஸ், சுடோகு, குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்ற மூளை விளையாட்டுக்கள் எனப்படும் நுண்ணறிவு விளையாட்டுகளில் ஈடுபடுவது உங்கள் மூளைச் செல்களை தூண்டி வேகமாக இயங்கவைக்க உதவும்.

திட்டமிடுதல்:

திட்டமிட்ட வாழ்க்கை என்பது தேவையில்லாத மன அழுத்தத்தில் இருந்து விடுபடமிகவும் அவசியமானது ஆகும். திட்டமிடுதல் தெம்பான உணர்வைக் கொடுத்து, தேவையில்லாத மன அழுத்தத்தைத் தவிர்க்க உதவுகிறது.

ஞாபக சக்தி பயிற்சி

பொருட்கள், விஷயங்களை ஞாபகத்தில் வைக்க உங்கள் மூளைக்கு நீங்களே பயிற்சி அளிக்க வேண்டும் ஒரு விஷயத்தை இன்னொரு விஷயத்துடன் தொடர்புபடுத்தி ஞாபகத்தில் இருத்தலாம்.





நடிகமணி வி.வி.வைரமுத்து நூல் வெளியீடு





டிசம்பர் 06, 2014 அன்று ஸ்காபறோ சிவிக் மண்டப கேட்போர் கூடத்தில் முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் வி.என். மதியழகன் எழுதிய நந்தாப் புகழ்பெற்ற நாயகன் நடிகமணி வி.வி. வைரமுத்து விவரண நூல் வெளியீட்டின்போது...

அமுதுப் புலவர் நினைவுப் பேருரை



இளவாலை அமுது என்று இலக்கிய உலகத்தால் அழைக்கப்பட்ட செவாலியர் புலவர் அடைக்கலமுத்து அவர்களின் நான்காவது ஆண்டு நினைவுச் சொற்பொழிவு கனடா மார்க்கம் ஆர்மடேல் மண்டபத்தில் 30-11-2014 மாலை நடைபெற்றது.

அமுதுப் புலவரின் மகன் பேராசிரியர் ஜோசெப் சந்திரகாந்தன் அடிகளார் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியை தலைமைதாங்கிய, அமுதுப் புலவரின் மாணவரான சபா. அருள்சுப்பிரமணியம், அமுதுப்புலவர் அவர்கள் மாதகலில் கலை இலக்கிய நாட்டம் கொண்ட மணவ சமூகமொன்று உருவாக வழி சமைத்தமை பற்றிக் கூறினார். யாழ். பல்கலைக்கழகத் முன்னைநாள் தமிழ்த்துறை பேராசிரியர் கலாநிதி. நா. சுப்பிரமணியன் “தமிழிலக்கியத் திறனாய்வியலில் ஈழத்தின் முப்பெரும் ஆளுமைகள்” என்னும் சிறப்புரை நிகழ்த்தினார். காலம் இதழ் ஆசிரியர் திரு. செல்வம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

நலம் தரும் முத்திரைகள்

சென்ற இதழில் வயிறு சம்பந்தமான நோய்களுக்கான முத்திரைகளில் 3 முத்திரைகளைப் பற்றி ஆராய்ந்தோம். மீதி 3 முத்திரைகளை இம்முறை ஆராய்வோம். அதற்கு முன்னதாக முத்திரைகளைப்பற்றி சில விளக்கங்களைத் தருகிறேன்.

ராஜி சந்திரா துரைராஜா

கை விரல்களை இணைத்து உருவாக்கப்படும் எளிய பாவனைகள், சைகைகள் ஆகியவற்றையே முத்திரைகள் என்கிறோம். இவற்றை சக்திப் பூட்டுக்கள் (Energy Locks) என்றும் கூறுவதுண்டு. நம் முன்னோர்கள் முத்திரைப் பயிற்சியை "முத்திரை விஞ்ஞானம்" என்று அழைத்தார்கள். முத்திரைப் பயிற்சிகள் ஒரு கலை மட்டுமன்றி, உடல் நலம் காக்கும் முழுமையன ஒரு விஞ்ஞானமுமாகும் என்பதே அவர்கள் கருத்து. முத்திரைகளின் தாய் வீடு இந்தியா என்பது முற்றிலும் சரியான கருத்தல்ல. முத்திரைகள் உலகின் அனைத்து தொன்மையான நாகரீகங்களிலும் வழக்கில் இருந்திருக்கிறது. ஆனால் காலப்போக்கில் இந்திய நாகரீகம் தவிர பிற நாகரீகங்களில் இந்தக் கலை மெல்ல மெல்ல அழிந்து போய்விட்டது.

இனி மீதி மூன்று முத்திரைகளான

முகூஷ்டி முத்திரை
மாதங்கி முத்திரை
அபான முத்திரை

ஆகியவை வயிறு சம்பந்தமான நோய்களுக்கு எப்படி நிவாரணம் தருகின்றனவெனப் பார்ப்போம்.

முஷ்டி முத்திரை

முகூஷ்டி என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு இறுக மூடிய கை என்பது அர்த்தம். முகூஷ்டி முத்திரை உணவு செமிபாடடைய மிகவும் நல்ல முத்திரை. இந்த முத்திரையைச் செய்யத் தொடங்கி 5 நிமிடங்களில் இதன் பயன்களை உணரலாம். உடம்பு இலேசாகி அமைதியடைவதை உயரலாம். இந்த முத்திரை ஈரல், வயிறு ஆகியவற்றைப் பலமமைடயச் செய்து உணவு சமிபாட்டை ஒழுங்காக நடைபெறச் செய்கிறது.



செய்முறை:

இரு கைகளையும் மடக்கி முகூஷ்டி செய்யவும். இப்படி செய்யும்போது பெருவிரலை மோதிர விரலின் மேல் வைக்கவும். இரு கைகளிலும் செய்யவும். முத்திரையை முடிக்கும்போது முகூஷ்டியை விலக்கி கையை விரிக்கவும். இந்த முத்திரையை 3 வேளையும் 5 நிமிடப்படி ஒரு நாளில் 15 நிமிடங்கள் செய்யவும்.

மாதங்கி முத்திரை

மாதங்கி முத்திரை சுவாசத்தை வலுப்படுத்துகிறது. அத்துடன் உடம்புக்கு பலத்தைக் கொடுக்கிறது.

செய்முறை:

கைகளை இரு உள்ளங்கைகளும் தொடுமாறு பிணைத்துப் பிடித்துக் கொள்ளுங்கள். நடுவிரல்கள் இரண்டையும் நீட்டி, இரண்டு விரல்களும் தொடும்படி வைத்துக்கொள்ளுங்கள். இந்த நிலையில் ஆறுதலாக மூச்சு எடுத்து விடவும். இந்த முத்திரையை 4 அல்லது 5 நிமிடங்கள் செய்யவும்.

இந்த முத்திரை செய்வதால் ஏற்படும் நன்மைகள் யாதெனில், ஜீரண உறுப்புகளான ஈரல், கல்லீரல், பித்தப்பை, சதையீ ஆகியவை சீரடைகின்றன.



அபான முத்திரை

இதுவும் வயிறு சம்பந்தமான நோயக்ளைத் தீர்த்து வைக்கக் கூடியது.

செய்முறை:

நடுவிரல் மோதிரவிரல் இரண்டையும் மடக்கி, பெருவிரலின் மேற்பாகத்தில் மதமான அழுத்தம் கொடுக்கவும். சின்னி விரல் (கடைசி விரல்), சுட்டிவிரல் (இரண்டாவது விரல்) இரண்டம் வளைவின்றி நேராக இருக்க வேண்டும். இரண்டு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவும்.



இதைச் செய்வதற்கு மிக உகந்த ஆசனம், உட்கட்டாசனம். இதைச் செய்ய முடியாதவர்கள் சாதாரணமாக அமர்ந்தும் செய்யலாம். 45 நிமிடங்கள் இந்த முத்திரையைச் செய்யலாம். ஆரம்பத்தில் 8 நிமிடங்களில் ஆரம்பித்து, பின்னர் கூட்டிக்கொண்டு போகலாம். இதனைச் செய்வதால் மலச்சிக்கல் மறையும். மூலநோய்கள் குணமடையும். வாயுத் தொல்லைகள் அகலும். வயிறு, குடல் ஆகியவை உறுதியடையும். ஆனால் வாந்திபேதி இருக்கும் நாட்களில் அபான முத்திரை செய்யக்கூடாது.

அடுத்த இதழில் வேறு சில முத்திரைகள் பற்றிப் பார்ப்போம்.



இதோ எங்கள் சினிமா!

– திரை விலக்குபவர் பாஸ்கி ரி ராஃ் –

சென்ற இதழில் கதை சொல்லல் உத்திகள், அவற்றின் பயன்கள் என்று பொரியதொரு விடயத்தை ஒரேயடியாகச் சொல்லி, மாம்பழும் சாப்பிடி வந்த உங்கள் வாயில் பிலாப்பழம் திணித்துவிட்டேன். இந்தத்தடவை கிளிஷே என்ற ஒரு சின்ன விடயம் - அதாவது சுத்தத் தழிழில் காப்பி அடித்தல் (ஓ அதுவும் தமிழில்லையோ-பிரதி செய்தல் என்று வைத்துக்கொள்ளுங்கள்.) சரி, கிளிஷே என்பது என்ன? வேறுபடங்களில் வந்த கட்டங்கள், உத்திகள், காட்சிகள், டயலக்குகள், கதைகள், இசை என்பவற்றை பகுதியாகவோ முழுமையாகவோ உல்டா செய்தல் என்பது அதன் பொருள். சிலர் அவற்றைத் தமது கற்பனைகளாலும் உள்ளீடுகளாலும் மாற்றியமைத்து தமது சரக்கு என்று ஆக்கிவிடுகிறார்கள். அதை ஓகே என்று விட்டுவிடலாம். ஆனால் சிலர் அப்படி அப்படியே கூச்ச நாச்சமில்லாமல் காப்பியடிப்பதுதான் சகிக்க முடிவதில்லை. அதாவது ஜேம்ஸ்பொண்டைப் போல ஜெயஷங்கர் நடிப்பது காப்பியல்ல-அதை தமிழ் ஜேம்ஸ்போண்ட் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் ஜேம்ஸ்போன்ட், எதிரி தன் அறைக்குள் நுழைந்திருக்கிறானா என்றறிய தலைமயிரைக் கதவு திறக்கும் விழிம்பில் ஒட்டிவைத்ததைப்போல இவனும் ஒட்டிவைப்பதுதான்.... ட்ரு பேட். “ஏன்டா, உங்க தலையில களிமண்ணா, புதிதா யோசியுங்களேன்டா,” என்று கத்தவேணும்போலிருக்கும்.

நடிப்பு: ரஜினிகாந்த் (இருவேடங்கள்), சோனாக்ஷி சின்ஹா, அனுஷ்கா, சந்தானம், ராதாரவி, விஜயகுமார், இயக்குநர் விஸ்வநாத்

ஒளிப்பதிவு: ரத்னவேலு

கதை : பொன் குமரன்

இசை: ஏ ஆர் ரஹ்மான்

தயாரிப்பு: ராக்லைன் வெங்கடேஷ்

இயக்கம்: கே எஸ் ரவிக்குமார்



லிங்கா என்ற படத்தைப் பார்ப்போமென்றா நீங்கள் தியட்டர் போகிறீர்கள்? ரஜனி படம் பார்போமென்றெல்லவா போகிறீர்கள். அதாவது நம்ம ரஜனியை எந்த அளவுக்கு சூப்பரா காட்டியிருக்கிறாங்கள், என்ற ஒரு கேள்வியோடு போகிறீர்கள். படம் பிடித்திருந்தால், “ரஜனி பின்னிட்டாருடா!” என்பீர்கள். பிடிக்காவிட்டால், ரஜனியை வீணாக்கிவிட்டதாக படம் பண்ணியவர்களைத்தான் திட்டுவீர்கள். உங்கள் எதிர்ப்பார்ப்பே வேறு. ரஜனி, தீயவற்றைத் துவசம் செய்ய அவதரித்தவர்! அப்படிப் போட்டுத் துவைக்காமல், அவரைப் போட்டுத் துவைக்குமாற்போல் லிங்காவின் பிரதான கதை அமைந்துவிட்டதுதான் இந்தவகை ரசிகர்களுக்கு மெல்ல முடியாத நிலை. அதாவது ராஜாவான ரஜனி, ஏழை மக்களுக்காக, பிருத்தானிய அரசின் ஆளுநர்களை எதிர்த்து தனது சொந்தப் பணத்தில் அணைகட்டப் புறப்படுகிறார். பிருத்தானியர்களின் சூழ்ச்சியால், தனது அரண்மனைகள் பொக்கிஷங்கள் என அத்தனை சொத்தையும் இழந்து, அம் மக்களாலும் சந்தேகிக்கப்பட்டு, ஒட்டாண்டியாக ஊரை விட்டு வெளியேறுகிறார். அந்தத் தியாகம், அதற்கு கிடைத்த அவமானம், அணை மக்களுக்குப் பயன்பட்டால் போதுமென்பதற்காக, தான் கட்டிய அணையை பிருத்தானிய அரசு கட்டியதாக அறிவிக்கவும் சம்மதித்த பெருந்தன்மை, ஏழ்மையை சாதாரணமாய் ஏற்றுக்கொண்டு, சலனமேதுமின்றி வாழும், “வீழ்ந்தாலும் மேன்மக்கள் மேன்மக்களே” என்ற அந்த அரசனின் பண்பு-மனதைக் கசக்கிவிடுகிறது. என்ன, காந்தி காலத்துக் கதை, வேகம் கொஞ்சம் கம்மி. அத்தோடு ரஜனி நயவஞ்சகச் சூழ்ச்சிகளால் அடிமேல் அடி வாங்கிறாரேயன்றி (சிவாஜி படத்தைப்போல்) திருப்பி அடிக்கிறார் இல்லை-விசிலடிக்க முடியவில்லை - இதுவே ரசிகர்களுக்கான குறை. (திருப்பி அடிக்க முடியுமா வெள்ளையர்களை, - வரலாறே திரும்பிவிடுமே!) எனினும் இரண்டாவது ரஜனி, அதாவது ராஜாவின் பேரன், கிளைமெக்ஸ்ஸில் பதிலடி கொடுப்பதால் அந்தக்குறை கொஞ்சம் போக்கப்பட்டுள்ளது. ஆனால் திரைப்படத்தின் கதையமைப்புத்தான் இங்கே ஏமாற்றத்துக்குக் காரணம். “நான் இதை சொல்லியே ஆகணும்,” என்று கூறிக்கொண்டு அதைமட்டும் சற்று விளக்குகிறேன். கடந்தகாலக்கதை நிகழ்காலக் கதை என்று இரண்டு பாகம், அதில் கடந்தகாலமே பெரும்பாகம். சரி, அதில் நிகழ்காலக் கதையில் வில்லன் யாரென்புத, இடையே விரிகின்ற கடந்தகாலக்கதை பெரும் இதிகாசக் கதையாக கடைசித் தொங்கல் வரை ஓடி முடிந்தபிறகு, படத்தின் கடைசிக் கட்டத்தில்தான் வெளிப்படுத்தப்படுகிறது. அதனால் படத்தின் முடிவுக்கட்டத்தில் அவசர அவசரமாக வில்லனை வெறுத்து, ரஜனி அவனை எப்படிச் முறியடிக்கப் போகிறார் என்று நாம் தலைமுடியைப் பிடிங்கி டென்ஷனை பில்டப் பண்ணிக்கொள்ள ட்டைமே இல்லாமல் ரஜனியின் சாகசத்தை அதே கையோடு பார்த்து முடித்துவிட வேண்டியதாய்ப் போய்விட்டது. வில்லன் யாரென்பதையும் அவனது சதித்திட்டத்தையும் கடந்தகாலக் கதை தொடங்க முன்னரே காட்டியிருந்தால், இறுதியில் மீண்டும் நிகழ்காலக் கதைக்கு வரும்போது அந்த டென்ஷன் பில்டப்பாகி இருந்திருக்கும். (இதைத்தான் சென்ற தடவை நான் ட்ராமெட்டிக் ஐரணி வகையில் கதைசொல்லல் என்றேன்... ஆ, மறுபடி ஆரம்பித்துவிட்டேனா. ஸ்ஸ்ஸ் மூச்!) இன்னொன்று. திரைப்படத்தில் வில்லனை எவ்வளவுக்கு வலியவனாகவோ, சாமர்த்தியமானவனாகவோ ஆக்கிறார்களோ அவ்வளவுக்கு ஹீரோப் பாத்திரத்துக்கு வலு இருக்கும். ஆனால் கதை அதை மிஸ்பண்ணுவதால் சக்தியிழந்திருக்கிறது. எனக்கு பிடித்த இரண்டு விடயம். ஒன்று ஏற்கெனவே சொன்னது “மனதைக் கசக்கும் அழுத்தமான கடந்தகால ராஜாக்கதை”. அடுத்தது, நிகழ்காலத்தில் திருடனாயிருக்கும் பேரன் ரஜனியை, திரைப்படத்தின் முடிவிலும் திருட்டுக் குற்றத்துக்காக கைது செய்து செல்வதாகத் துணிகரமாக முடித்திருப்பது. அதாவது, ஊரைக் காப்பாற்றியதற்காக நீதிமன்றமோ ஜனாதிபதியோ பொதுமன்னிப்பு வழங்கி, கௌரவிப்பதாக ஒன்றும் சொதப்பாமல் விட்டது. வள்ளலான அரசனுக்கு திருடனான பேரன் என்ற எதிர்மறையான கென்ட்ராஸ்டில் கதையைப் பின்னி, சொத்தெல்லாம் அழித்து தம்மை நடுத்தெருவில் விட்டுவிட்டுப் போனதாக பாட்டன் மீது வெறுப்புக்கொண்டிருந்த அதே பேரன் பின்னர் பாட்டனது அளவிடமுடியாத பெருந்தன்மையைக் கண்டு வியந்து நிற்பதாக அமைந்துள்ள திரைக்கதையே படத்துக்கு உயிர்நாடி. (ஆனாலும் அது கே.வி. ரவிரத்தினத்தின் “முல்லைவனம் 999” என்ற திரைப்படக் கதையென வழக்குப் போட்டிருக்கிறார்களாமே, உண்மையா?) ரெம்ப ரெம்பத் தயக்கத்தோடு இன்னொரு விடயத்தையும் நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ப்ளீஸ் கிளிஷே வேண்டாம், ஒரிஜினாலிட்டியைப் பேணுங்கோ, பெரும் டைரக்டர் ஐயா மாரே! அது ஏன் அந்த ஹொலிவூட் படத்தில் வந்த காந்தத்தால் திறப்புத் திருடும் அதே உத்தியை அப்பிடியே உல்டா பண்ணினீங்க? இப்பத்தா நம்ம கில்லாடிகள் பட் பட்டென்று எல்லாத்தையும் இன்டர்நெட்டில போட்டு அம்பலப்படுத்தி விடுகிறார்களே! அது தெரிந்துமா...

நடிப்பு: நாகா, ப்ரயாகா, ராதாரவி


இசை: அரோல் கொரோலி

தயாரிப்பு: பாலா

எழுத்து: இயக்கம்: மிஷ்கின்



இப் படத்தின் டைரக்டர், வித்தியாசமான டைரக்டரெனப் பெயர்பெற்ற மிஸ்கின். நாம் இம்முறை கிளிஷேபற்றியே கவனம் செலுத்தியபடி படங்களை உற்றுப்பார்ப்பதால் அவர் கிளிஷே பற்றிச் சொன்னதையும் சேர்த்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. சொன்னாரென்பதைவிட கோபித்தார் என்பதே உண்மை. உங்கள் "பிசாசு" எந்தப் படத்தினதும் தழுவலா என்று இப்படத்தின் ஆடியோ ரிலீசின்போது கேட்டதற்கு, அவர் "இப்படித்தான் போன படத்திற்கும் கேட்டாங்க, அதற்கு நான் அது 13ம் நூற்றாண்டிலவந்த போத்துக்கீசு மொழிப் படத்தைத்தான் கொப்பிபண்ணியிருக்கிறேன் என்றேன். இந்தப்படத்துக்கு இன்னும் இரண்டு நூற்றாண்டு தாண்டி, 11ம் நூற்றாண்டு இத்தாலியப் படமொன்றைக் கொப்பியடிச்சிருக்கிறேன் என்று வேணுமென்றால் போட்டுக்கொள்ளுங்க" என்றார் கோபமாக. ஆனால் பிசாசுப் படத்தைப் பார்ப்பதற்கு முன்னர் நாம் அவசியம் பார்க்கவேண்டிய ஆங்கிலப் படம் ஒன்று உள்ளது. அதன் பெயர் "The Machinist" கிரிஸ்டியன் பெலே நடித்து 2004ல் வெளிவந்த படம். இதற்காக அவர் உடலை உருக்கி எலும்புந்தோலுமாக மாறி நடித்து, பெரும் புகழ் பெற்றார் - இப்போது ஐ படத்துக்கு நம் விக்ரம் செய்ததுபோல. அப் படத்தில் கிரிஸ்டியன் பெலே ஒரு விபத்தைக் காண்கிறார். அதில் ஒரு குழந்தை இறந்துவிடுகிறது. அவ் விபத்தைக் கண்டதிலிருந்து மிகுந்த மன உளைச்சலுக்குள்ளாகிய அவர் மிகவும் இளைத்து விடுகிறார். பின்னர் அந்த விபத்து இத்தனை பாதிக்கிறதென்று ஆராய்ந்து பார்க்கும்போதுதான் அந்த விபத்தையே அவர்தான் நடத்தியதென்பது தெரிகிறது. இப்போது பிசாசுப்படத்தைப் பார்ப்பபோம். படத்தின் ஆரம்பத்தில் ஒரு பெண் வீதியில் அடிபட்டு விழுந்திருப்பதை ஹீரோ கண்டு அவளை ஆஸ்பத்திரியில் சேர்க்கிறான். ஆனால் அப் பெண் இறந்துவிடுகிறாள். அதன் பின் இவர் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகிறான். வீட்டிலும் பல வினோதமான, சம்பவங்கள் பல நடக்கின்றன. அவை இறுதியில் விபத்தில் இறந்த பெண்தான் பேயாக தன் வீட்டிலிருந்து இவற்றைச் செய்வதைக் கண்டறிகிறான். அவள் ஏன் தன் வீட்டில் வந்து இதைச் செய்யவேண்டுமென ஆராய்ந்ததில் அந்த விபத்தில் அவளைக் கொன்றதே இவன்தான் என்பது தெரியவருகிறது. இப்போ இந்த இரண்டு படத்தையும் ஒத்துப் பார்க்கும்போது, கிளிஷே என்கிற நம்ம மெட்டர் தலையை நீட்டி "ஏய்யா, நான் சொல்லல! நம்மாக்களுக்கும் ஒரிஜினாலிட்டிக்கும் ரெம்ப தூரம்யா. எந்தளவுக்கு சவுண்டு குடுக்கிறானோ, அந்தளவுக்கு ஏதோ சுட்டுட்டா எங்கிறதுதா நிஜம்யா" என்கிறது. நாமோ, அப்பிடியெல்லாம் கொப்பி என்பதை மட்டும் சொல்லி ஒரு படத்தை ஒதுக்கிவிட முடியாது, அதில் மிஸ்கினுடைய டச், ரெம்ப நல்லா இருக்கு, கெமராக் கோணங்கள் எல்லாம் அசத்துது, பேயை பேயென்று பார்த்துப் பயப்படாத கோணத்தில, தன்னைக் கொன்றவனுக்கும் நன்மை செய்யிற தர்மப் பேயாய்க் காட்டியிருக்கிறாரு, பேய்க்கதைக்கூடாகவே மனிதாபிமானம் பேசுறாரு. ஆகையினால, இந்தக் கொப்பிக்கெட், புத்தகக்கெட் எண்ட கதையெல்லாம் மூட்டைகட்டிவைச்சிட்டு, படத்தப் பார்த்தோமா, பிசாசை ரசித்தோமா, குப்பிறக் கவிண்டு படுத்தோமா என்று இரு என்று சொல்லுவதைத்தவிர என்ன செய்யலாம் நீங்களே சொல்லுங்க? ஆனால் ஒன்று. சதா வெளிவாற மொக்கைப் படங்களுக்குப் பக்கத்தில மட்டும் இந்தப் படத்தை வைச்சுப் பார்திடாதீங்க. வித்தியாசம். அதாவது கொப்பியடித்தாலும் வித்தியாசமான படமாக் கொப்பியடிங்க என்கிற மெஸேஜாவது அதில இருக்கு.



நடிகர்கள்: சிபிராஜ், அருந்ததி, பாலாஜி, மயில்சாமி

ஒளிப்பதிவு: நிஸார் ஷெரீப்


இசை: தரண் குமார்

தயாரிப்பு: நாதாம்பாள் பிலிம் பேக்டரி

இயக்கம்: சக்தி சவுந்தர் ராஜன்



படத்தின் ஹீரோ ஒரு பொலிஸ் அதிகாரி. அவருக்கு இராணுவத்தில் பழக்கப்பட்ட ஒரு நாய் கிடைக்கிறது. இதேவேளை படத்தின் ஹீரோயின் மர்மமாகக் கடத்தப்படுகிறார். கடத்தப்பட்ட ஹீரோயினை நாயின் உதவியோடு மீட்பதுதான் திரைப்படம். வித்தியாசம் இங்கு நாயை மையமாக வைத்து திரைப்படத்தை நகர்த்தியிருப்பதுதான். இப்படி ஒரு கதையைக் கேட்டதுமே நீங்கள் "ஆ, இது இங்கிலிஷ் படம்போல இருக்கிறதே!" என்று வியப்பீர்கள். ஆனால் உண்மையிலேயே அது கே 9 என்ற ஆங்கிலப்படச் சாயலை கொண்டிருக்கறது. இப்படி நான் சொன்னதும் நம்ம மெட்டர் - அதாவது கிளிஷே இங்கு சீனுக்கு வந்துவிடுகிறது. "அட சுட்டுட்டாங்களா," என்று நீங்கள் சொல்வதும் காதில் விழுகிறது. பொறுங்கள், இந்த நாய் விஷயம் ஒரு பக்கத்து உருவலென்றால், அங்கே கடத்தப்பட்ட ஹீரோயினை அடைத்து வைத்திருக்கும் ஐடியாவும் பெரீட் (Buried) என்ற படத்திலிருந்து உருவப்பட்டதே. பெரீடில் கதை எவ்வாறென்றால், ஒரு இருட்டு. அதில் செல்போன் வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் ஒரு சவப்பெட்டிக்குள் ஒருவர் அடைக்கப்பட்டுள்ளது தெரிகிறது. சவப்பெட்டிக்குள் உள்ள காற்றில் ஒட்சிசன் தீரும்வரைதான் அவன் உயிரோடிருக்க முடியும். செல்போனிலும் சார்ஜ் முடியும்வரைதான் வெளியுலகுடன் தொடர்பிலிருக்க முடியும். இவையிரண்டும் தீர்ந்து செல்வதற்கிடையில் அவ்விடத்தைக் கண்டுபிடித்து அவனைக் காப்பாற்ற வேண்டுமென்பதுதான் கதையில் விறுவிறுப்பளிக்கும் கவுன்ட் டவுன். இதே ஐடியாவை அப்படியே நாய்கள் ஜாக்கிரதை கௌவிக்கொள்ளும்போது, ஏனோ, உலகப் படங்களையெல்லாம் நெட்டிலேயே பார்க்கக்கூடிய காலத்து கில்லாடிப் பசங்களைப்பற்றி அஜாக்கிரதையாக இருந்துவிட்டார்கள். டபிள் கிளிஷேயாக இருந்தாலும் கதைக்குரிய விறுவிறுப்பு இருக்கத்தானே செய்யும் படத்தில். சுட்ட படமாயிருந்தாலென்ன சுவை குன்றவா போகிறது? படத்தின் ஓட்டத்தில் நாய்க்கு மயக்க ஊசிபோடப்பட்டதோடு கதை தொய்ந்து பின்னர் எழுந்து ஓடுகிறது. இத்தனை மோசமாக பெண்களை சவப்பெட்டிக்குள் உயிருடன் அடைத்துக் கொல்லும் எண்ணம் வில்லனுக்கு ஏன் வந்ததென்பதற்குப் பதிலில்லை. என்ன, பொழுது போக்கத்தானே படம்? அந்த அளவு எண்ணத்தோடு பார்ப்பதானால் பார்க்கலாம். ஓகே.







ஹொலிவூட்டிலும் கைவரிசை காட்டும் திரைக்கதைத் திருட்டு

தென்னிந்தியாவில் திரைக்கதைத் திருட்டு என்பதுபற்றி அண்மைக் காலமாக பல வழக்குகள், வழக்குகளுக்குப் புறம்பாக இணையத் தளச் செய்திகள், பத்திரிகைச் செய்திகள், தொலை காட்சிப் பேட்டிகள் என்று பரபரப்பாக விடயங்கள் பேசப்பட்டன.

யாரோ எழுதிய திரைக்கதையை யாரோ படமாக்கி வெளியிடுவது பரிதாபந்தான். அதேவேளை சிரமப்பட்டு பெரும் பணச்செலவுடன் படம் தயாராக்கி வெளியிடவுள்ள நிலையில் அத் திரைக்கதை தனதேயென்றுகூறி திடீரென யாரோ புகுந்து இடைக்காலத் தடை போடவைப்பதும் ஒரு முட்டுக்கட்டைதான். இதில் யார் சரி யார் பிழை என்பது உண்மையில் திரைக்கதையின் உரிமையாளர் யார் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. அதைக் கண்டறிவதே பெரும் கேள்விக்கிடமான விடயம்.





அண்மையில் சினிமா இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் வெளியிட்ட கத்தி திரைப்படத்தின் கதையானது "மூத்தகுடி" என்ற பெயரில் தான் எழுதிய திரைக்கதையேயென உரிமை கோரி கோபி என்பவர் வழக்குத் தொடுத்திருந்தார். ஆனால் அவரால் வழக்காடி வெல்ல முடியவில்லை. வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. ஆனால் முருகதாஸ் சும்மா விடவில்லை.

கத்தி படத்தின் கதை குறித்து கோபி சமூக வலைத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களை அகற்ற வேண்டும் என்றும் அதுகுறித்து அவர் எந்த தளத்திலும் பேசக்கூடாதென்றும் சென்னை ஹைகோர்ட்டில் வழக்குப்போட்டு, அவ்வாறே நீதிமன்ற உத்தரவையும் பெற்றுக்கொண்டார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஆர்.சுப்பையர், 'எதிர்மனுதாரர்கள் கோபி உட்பட 3 பேரும், அவர்களது ஆட்களும் இணையதளங்கள், சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள் ஆகியவற்றில் ஏ.ஆர்.முருகதாஸ் பற்றியும், கத்தி படத்தின் கதை பற்றியும், அந்த படக்குழுவினரைப் பற்றியும், கருத்துகளை வெளியிட தடைவிதிக்கின்றேன். அவர்கள் 3 பேரும் ஏற்கனவே சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள கத்தி படம் குறித்த கருத்துகளை அகற்றவேண்டும்' என்று உத்தரவிடுகிறேன்' என்று கூறியுள்ளார்.

இப்படியான தடாலடி கொடுத்ததையடுத்து, இப்போது திரைப்படத்தின் கதை தனதே என்று வழக்குப் போடுபவர்களுக்கெதிரான குரல்களை திரைப்படச் சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலர் உரத்து எழுப்பத் தொடங்கிவிட்டனர். கதைத் திருட்டுத் தொடர்பாக ரஜனி கடைசியாக நடித்த லிங்கா படத்துக்கே நான்கு வழக்குகள் போடப்பட்டு, 3 கோடி ரூபா பிணயப் பணம் கட்டித்தான் படத்தை ரிலீஸ் செய்ய வேண்டிய நிலை நேர்ந்ததுதான் இந்தக் கோபாவேஷத்துக்கு காரணம். இந்த கதை திருட்டு வழக்கு திரையுலகிற்கு பெரும் பிரச்சனையாக உருவெடுத்து, பெரிய படங்களே கடைசி நேரத்தில் திணறுகிறது என்பதால் இதனை தடுக்க திரையுலகின் அனைத்து பிரிவினரையும் திரட்டி போராடப்போவதாக சரத்குமார் அறிவித்துள்ளார். நடிகர் சங்கத்தில் இதற்கென ஒரு தீர்மானம் நிறைவேற்றி இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்போம், தேவைப்பட்டால் திரையுலகின் அனைத்து பிரிவினரும் இணைந்து போராடுவோம் என்கிறார் அவர். நடிகர் சங்க செயலாளர் ராதாரவியும் கதை திருட்டு வழக்கு போடுகிறவர்களை ஆபாச வார்த்தைகளால் திட்டித் தீர்த்துள்ளார்.

இங்கே இப்படியென்றால் அங்கே ஹாலிவூடிலும் தற்போது கதைத் திருட்டு பெரும் பிரச்னையாகி இருக்கிறது. ஒரு வித்தியாசம்- இங்கு மற்றவர்கள் கதையை திருடி படமாக எடுக்கிறார்கள் என குற்றம் சாட்டப்படுகிறது. ஹாலிவுட்டில் பிரபல படங்களின் கதையையே திருடி இணைய தளங்களில் வெளியிட்டு விடுகிறார்கள். அப்படி ஒரு நிலைமை புதிய ஜேம்ஸ்பாண்ட் படமான ஸ்பெக்டருக்கு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் வெளிவர இருக்கிறது 24வது ஜேம்ஸ் பாண்ட் படமான ஸ்பெக்டர். இதில் கேஸினோ ராயல், குவாண்டம் ஆஃப் சொலஸ், ஸ்கை பால் படங்களில் ஜேம்ஸ்பாண்டாக நடித்த டேனியல் க்ரேக் நடித்திருக்கிறார். படத்தின் பெயரைக்கூட சமீபத்தில்தான் அறிவித்தார்கள்.

ஸ்பெக்டர் என்பது சர்வதேச பயங்கரவாத கும்பல். இது பற்றி ஜேம்ஸ் பாண்டுக்கு தகவல் கிடைக்க அதனை அழிக்க புறப்படுகிறார். அப்போது ஜேம்ஸ் பாண்ட் பணியாற்றும் பிரிட்டிஷ் உளவு அமைப்பான எம்.ஐ 16க்குள் அதிகாரிகளிடையே மோதல் வருகிறது. இதனை பயன்படுத்திக் கொண்டு உளவு அமைப்பையே காலி செய்ய திட்டமிடுகிறது ஸ்பெக்டர். அதனை ஜேம்ஸ் பாண்ட் எப்படி தடுக்கிறார் என்பதுதான் கதையாம்.

இப்போது இந்த கதையும், அதன் திரைக்கதை வடிவமும் திருடப்பட்டு விட்டதாக பரபரப்பு தகவல் கிளம்பி உள்ளது. இது தொடர்பாக படத்தின் தயாரிப்பாளர்கள் மைக்கேல் ஜி.வில்சன், ஃபார்பரா பிராக்கோலி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் "சோனி பிக்சர்ஸ் எண்டர்டெயின்மெண்ட் கம்ப்யூட்டர்களிலிருந்து பலர் தகவல்களை திருடி உள்ளனர். அதில் ஸ்பெக்டர் கதையும், திரைக்கதையும் ஒன்று. இந்த கதையை திருடியவர்கள் ஆன்லைனில் வெளியிட உள்ளதாக கருதுகிறோம். கதை பிரிட்டன் பதிப்புரிமை சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை வெளியிட்டால் வெளியிட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இப்படி திரைக்கதைத் திருடர்கள் எங்கும் உலாவருகிறார்கள். உண்மைதான். அதுதான் போலும் எம் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் பலர் கதையே இல்லாமல் படம் தயாரிக்கிறார்களோ..?

ரெயிலர் – லிங்கா பட ரெயிலர்களால் சித்தன் ரெயிலர் அடிபட்டுப் போய்விட்டது. முகநூல் லிங்காவிற்கு பின்னூட்டம் இட்டத்துக்காக சித்தனை முகநூல் பக்கம் முகம்வைக்கவேண்டாம் எச்சரித்தது. ரெயிலர் இல்லாவிட்டால் என்ன மனமிருந்தால் படமோடும்.



ஆண்டவனே! சுக்கிர பகவானே! திருடர்களை போசிக்கும் புதனே!
எனக்கு ஒரு சுருட்டுக் கடைவேண்டும் சாமி!

பிரமிள் மொழி பெயர்த்திருந்த ஆங்கிலக் கவிதை இது. நீங்கள் நியுயோர்க் நகரத்தின் குயின்ஸ் பகுதிக்கு சென்றிருக்கின்றீர்களா? அதுவும் தனியாகச் சென்றிருந்தால் வித்தியாசமான அனுபவங்களை பெற்றிருப்பீர்கள். உங்களது வாகன பாகங்களை உங்களிடமிருந்து திருடி, உங்களுக்கே விற்பார்கள். அதுவும் நீங்கள் "நில்" அடையாளத்தின் முன் நிற்கும் போதே உங்களது வாகனத்தின் சக்கரத்தின் பாகங்களை கழற்றி எடுத்து விடுவார்கள். அவ்வாறு வேலை செய்ய நிப்பந்திக்கப்பட்ட சிறுவன் ஒருவனின் வாழ்வை பதிவு செய்யும் படம் சொப்..சொப்.

ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கானோர் சட்டத்துக்கு மாறாக அமெரிக்காவினுள் வருகின்றனர். அவ்வாறு வருபவர்கள் சட்டரீதியாக வேலை செய்ய முடியாது. ஆனால் சிறு தொழிற்சாலைகள், பண்ணைகள் போன்றவை இவர்களை நாளாந்தக் கூலிக்கு வேலைக்கு அமர்த்துகின்றனர். இவர்கள் ஒவ்வொரு நாளும் அதிகாலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்க வேண்டும். அங்கு வேலை முகவர் தனது வாகனத்தில் இவர்களை ஏற்றிச் சென்று எங்கு ஆட்கள் தேவைப்படுகின்றதோ அங்கு அவர்களை இறக்கிவிடுவார். இவர்களில் பெரும்பாலும் சிறுவர்களையும் காணலாம். இவ்வாறு வேலைக்கு வரும் அலி என்ற லத்தீன அமெரிக்க சிறுவனையும் அவனது 16 வயது சகோதரியையும் பற்றியதே இப்படம். அமெரிக்காவில் பிறந்து ஈரானில் சில காலம் வாழ்ந்த இயக்குனர் ரமின் பகாரானி இப் படத்தின் இயக்குனர்.

ஊரில் சுருட்டுக் கடை இருந்தால் சொர்க்கத்திற்கு போகலாம், அமெரிக்காவில் சொப், சொப் இருந்தால் உங்கள் காலடியில் சொர்க்கம்.

(பிரமிளின் கவிதை -கவிதை போல் ஒரு படம்)

மீனுக்குத் தண்ணீர்
மிருகத்துக்கு
பிராணவாயு
மனிதாத்மாவுக்கோ
மனம்தான் வெளி



சிலியில் ஒகஸ்ரோ பினோசெயின் ஆட்சியின் போது நடைபெற்ற வன்கொடுமைகளை பற்றிய படம் Machuca. தனியார் பாடசாலை அதிபர் வணக்கத்துக்கரிய மக்கன்ரோ வழமைக்கு மாறாக அப் பாடசாலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கும் வாய்ப்பளிக்கின்றார். விளைவு பெற்றோர் கொதித்தெழுகின்றனர். புதிதாக சேர்ந்த மாணவர்களில் ஒருவர் பெட்ரோ மச்சுக்கா (Pedro Machuca). செல்வந்த மாணவர்கள் புதிய மாணவர்கள் மீது வன்முறையில் ஈடுபடுகின்றார்கள். பெட்ரோ மாசுக்கவை இவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. மற்றைய புதிய மாணவர்கள் ஒடுங்கிச் செல்கின்றார்கள். பெட்ரோ மச்சுக்கா செல்வந்த மாணவர்களின் நடிவடிக்கைகளை துணிந்து எதிர்க்கின்றான். கால ஓட்டத்தில் மாசுக்கவுக்கும் செல்வந்த மாணவன் கொன்சலே இன்பன்ரே (Gonzalo Infante) க்கும் நட்பு துளிர்க்கின்றது. படிப்படியாக செல்வந்த மாணவர்களுக்கும் புதிய மாணவர்களுக்கும் ஓரளவு நெருக்கம் ஏற்படுகின்றது. இந்த நட்பின் ஊடாக பினோசெயின் ஆட்சி விமர்சிக்கப்படுகின்றது. இராணுவம் பாடசாலையை கைப்பற்றுகின்றது. மிகுதி உங்களுக்குப் புரியும். இலங்கையில் நடாக்காததா சிலியில் நடந்துவிட்டது?

பொன்னைநினைந்து வெகுவாகத் தேடுவர்,
பூவையன்னாள்
தன்னைநினைந்து வெகுவாய் உருகுவார்

இதுவும் பட்டினத்தார் பாடியது.



அதாவது சூழ்நிலை என்ற பெயரில் வெளிவந்துள்ள பேர்சிய மொழிப் படம் மேற்கின் தொழில்நுட்ப தாக்கத்தினாலும் (இன்ரநெற், சற்றலைட் தொலைக் காட்சி, முகநூல்) கீழைத் தேயத்தின் கலாச்சார ஒடுக்கு முறைகளாலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பதிவுசெய்துள்ளது. இதனை ஈரானிய படமென கூறவில்லை. இப் படம் லெபனானில் படமாக்கப்பட்டுள்ளது. ஈரானில் திரையிட முடியாது.

Atafeh, Shireen இரு பள்ளித் தோழிகள். நல்ல நண்பர்கள். Atafehன் தந்தை இசையில் நாட்ட முடைய பெற்றோர்கள். Shireen மாமாவுடனும், பாட்டியுடனும் வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு நகரில் உள்ள சகல மேற்கத்திய பாணியிலான பார்கள். நடன கிளப்புக்கள் அனைத்தும் தெரியும். இவை அனைத்தும் சட்டத்துக்கு புறம்பாக பண்டகசாலைகளில் மறைவாக நடைபெற்று வருகின்றன. இவர்களது நட்பு காதலாக மாறுகின்றது. Atafehன் அண்ணன் ஆரம்ப நாட்களில் வீட்டுக்கு வருவதில்லை. பின்னர் இஸ்லாமிய தீவிர பின்பற்றாளராக மாறிவிடுகின்றார். இவருக்கு தனது சகோதரியும், நண்பியும் செல்லும் இடங்கள் அனைத்தும் தெரிந்துவிடுகின்றது. ஒருதடவை இவர்களைப் பொலிஸ் பிடித்த பொழுதே பெற்றோருக்கு. Atafeh, Shireen இருவரும் கன்னித் தன்மையை இழந்து விட்டார்கள் என்ற விடயம் தெரியவருகின்றது. Shireen, Atafeh ன் அண்ணன் பொலிசிடமிருந்து விடுவிக்கின்றான். அதன் பின்னர் Shireenஐ திருமணம் செய்து கொள்கின்றான். ஒரே வீட்டில் தோழிகள் இருவரும் வாழ்கின்றனர். இவர்களது உறவு தொடர்கின்றது. தமையன் வீட்டில் சகல மூலை முடுக்கெல்லாம் கமராக்கள் வைத்து இவர்களது உறவை நடமாட்டத்தை அறிந்து கொள்கின்றான். இக் கட்டான கட்டத்தில் Atafeh பாரிசுக்கு தப்பி ஓடி விடுகின்றார்.



முதியோர் ஆரோக்கியம் தொடர்பான நாம் வழங்கிவரும் தகவல்கள், கருத்துக்கள் பற்றி பொதுமக்களுக்கு தொலைக்காட்சியில் விளக்கமளிக்கக் கோரி தமிழ் வண் தொலைக்காட்சி எம்முடன் நிகழ்த்திய தொலைக்காட்சி கலந்துரையாடலுக்கு நன்றி. இதுவரை இம் முதியோர் பக்கமானது முதியோர் தமக்குத் தேவையான தகவல்களை அறிந்துகொள்ளும் பகுதியாகவே இருந்து வருவது ஏனெனில், அதுவே அவர்களுக்குத அத்தியாவசியமான முதல் விடயம் என்பதாலும், இத் தகவல்களை அவர்கள் தேடிப்பெறுவதும், வேறு தகவல் மூலங்களை வாசித்துப் புரிந்துகொள்வதும் அவர்களுக்குச் சிரமமாக இருக்கும் என்பதாலேயே. இத்தகைய அவசிய தகவல்களை முதலில் வழங்கிவிட்டு காலப்போக்கில் இவற்றையும் தாண்டி பல்வேறு மாறுபட்ட விடயங்களையும் தரவுள்ளோம். சென்ற இதழில் நாம் வழங்கிய முதியோர் ஆரோக்கியம் பற்றிய தகவல்களின் தொடர்ச்சியாக மேலும் சில நோய்களுக்கான அறிவுரைகளை இங்கே தருகிறோம்

முதியோர் ஆரோக்கியமும் உடல் நலமும்

எச்ஐவி (எய்ட்ஸ்) (HIV/AIDS) சிகிச்சைக்கான உதவி நிலையங்கள்

எம் சமூகத்தில் எய்ட்ஸ் நோயாளிகள் பற்றி தாழ்வான அபிப்பிராயங்கள் நிலவுவதாலும், வெறுமனே தொடுகை மூலமோ, சாதாரணமாகப் பழகுவதன் மூலமோ இந் நோய் தமக்கும் தொற்றிவிடுமென்ற தப்பபிப்பிராயத்தால் உற்றார் உறவினரே ஒதுக்கிவைத்துவிடுவதாலும் இந் நோய்கண்ட பலர் சிகிச்சைக்குச் செல்லாமல் அதை மூடிமறைத்தபடி வாழ்ந்து இறுதியில் பரிதாபகரமான முடிவுகளை எட்டுகின்றனர். இந்த நோய் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளில் வாழுபவர்கள்கூட தமக்கு இந் நோய் தொற்று ஏற்பட்டுள்ளதா என்று பரிசோதித்துக்கொள்ளவும் தயங்கி, சிலவேளைகளில் தாம் இந் நோய்க்குப் பலியானது மட்டுமன்றி, தமது அன்புக்குரியவர்களுக்கும் தொற்று ஏற்படுத்தி விடுகின்றனர். பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகள் இத் தொற்றுக்கான பிரதானமான காரணமாக இருப்பதால் அதுபற்றிய அறிவூட்டல் சமூகத்தின் எல்லோருக்குமே தேவை. இதற்கு உதவக்கூடிய நிறுவனங்கள் பற்றிய தகவல்களை இங்கே தருகிறோம்.

The Canadian AIDS Treatment Information Exchange எனும் நிறுவனம் எச்ஐவி மற்றும் ஹெப்படைடிஸ் சி பற்றிய தகவல்களை வழங்கும் ஒரு நிலையமாகும். இந்த நோய்கள் உள்ளவர்கள், இந்த நோய் ஏற்படக்கூடிய ஆபத்தான சூழலில் வாழ்பவர்கள் ஆகியோருக்கும் இந்த நோய்களுக்கான பராமரிப்பு சேவை வழங்குபவர்கள், அல்லது இது தொடர்பான சமூகசேவை நிறுவனங்கள் போன்றவற்றுக்கும் இந் நிலையம் இதுபற்றிய அறிவு, மூலவளங்கள் மற்றும் திறமை ஆகியவற்றை வழங்குகிறது. இந் நோய் தொற்றுவதைத் தடுப்பதற்கும் நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் இந் நிறுவனம் உதவி புரிகிறது. இந் நிலையத்தைத் தொடர்புகொள்ள:

1-8000-263-1638

www.catie.ca

The Canadian AIDS Society

The Ontario HIV Treatment Network

இவ்விரு நிறுவனங்களும் எச்ஐவி (எய்ட்ஸ்) பற்றிய ஆராய்ச்சியையும் கல்வியையும் ஊக்குவிக்கின்றன. அத்துடன் சமூகத்தில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கான ஆதரவையும் வழங்குகின்றன. இந் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள:

The Canadian AIDS Society

10800-499-1986

www. Cdnaids.ca

The Ontario HIV Treatment Network

1877-743-6486

www.ohtn.on.ca

இதைவிட 2-Spirted People of the 1st Nations என்ற அமைப்பு ரொரன்டோவிலுள்ள ஆதிக்குடிவாசிகளுக்கும், கே மற்றும் லெஸ்பியன், பை செக்சுவல், ட்ரான்ஸ்ஜெண்டர் போன்ற பாலியல் பிரிவினர்களுக்கும் இந் நோய் தொடர்பான கல்வி, தடுப்பு முறைகள், மற்றும் உதவிகள் ஆலோசனைகளை வழங்குகிறது. தொடர்பு கொள்ள:

2-Spirted People of the 1st Nations

416-944-9300

நீரிழிவுநோய் (Diabetes)

வயது முதிர்ந்தவர்களிடையே நீரிழிவு நோய் சாதாரணமாகக் காணப்படுவதால், எம்மிடையே இது சாதாரணம்தானே என்ற அசட்டை மனோபாவம் நிலவுகிறது. ஆனால் கவனிக்கப்படாவிட்டால் இது இருதய நோய்களுக்கோ சிறுநீரக நோய்களுக்கோ, பக்கவாதம், பார்வை இழப்பு, போன்றவற்றுக்கோ இட்டுச்செல்லக் கூடியதுடன், கை, கால் போன்ற உறுப்புக்களை அகற்ற வேண்டிய நிலைபோன்ற பாரதூரமான நீண்டகாலச் சிக்கல்களுக்கும் இட்டுச் செல்லக்கூடிய ஒரு நோய். இந்த நீரழிவு நோயின் தன்மையைக்கொண்டு அதை இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள். டைப் 1 - தடுக்கப்பட முடியாத வகை, டைப் 2 - தடுக்கப்படக்கூடிய வகை. தடுக்கப்படக்கூடிய டைப் 2 வகை நீரழிவை, ஆரோக்கியமான உணவுப் பழக்கம், உடல் நிறையைப் பேணுதல், உடற்பயிற்சி போன்றவற்றால் கட்டுப்படுத்தலாம். எனினும் சரியான வாழ்க்கை முறையைப் பேணுவதன் மூலம் இரண்டுவகை நீரிழிவுகயையும் சமாளிக்கலாம். அதற்கு நீரிழிவுக்கான ஆரம்ப அறிகுறிகளை அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் உங்கள் வைத்தியர் மூலம் இரத்தத்தில் வெல்லத்தின் அளவைப் பரிசோதித்துக்கொள்ளுங்கள்.

ஆரம்ப அறிகுறிகள்:

ஆதிக தாகத்தினை உணர்தல்

ஆடிக்கடி சிறுநீர் கழித்தல்

சடுதியான உடல்நிறை மாற்றம். (நிறை குறைவது மட்டுமல்ல அதிகரிப்பதும் அறிகுறிதான்)

உற்சாகமின்மை, அல்லது வழமைக்கு மாறான களைப்பு

தெளிவற்ற கண்பார்வை

வெட்டுக்காயங்கள், அண்டல் காயங்கள் மெதுவாக ஆறுதல்

கைகள் அல்லது பாதங்களில் கூச்சம் அல்லது உணர்வற்ற நிலை

கலவியின்போது, ஆண்குறி விறைப்படைவதோ, அல்லது விறைப்பைத் தக்கவைத்துக் கொள்வதோ சிரமமாயிருந்தல்.

நீரழிவுப் பரிசோதனைகள், தடுப்புக் குறிப்புகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு நீங்கள் பின்வரும் இடங்களைத் தொடர்பு கொள்ளலாம்:

Ontario Diabetes Strategy: www.ontario.ca/diabetes

Service Ontario

1-866-532-3161

TTY: 1 800-387-5559

www.ontario.ca/ru4

Canadian Diabetes Association

1-800-226-8464

www.diabtes.ca

❖ சிறு விளம்பரம் ❖

விற்பனைக்கு

Restaurant for Sale

Kingston & Cliffside

PIZZAVILLE restaurant for sale

Contact: 416-526 8454

Toyota Sienna 1998 Black. 230000km Good Condition. Side doors need maintenance. $ 2000 call 647-863-6434

New Luxury Condo Unit @ Markham & Sheppard

பல வசதிகளுடன் கூடியது.

ஸ்காபரோவில் வாகனம் திருத்திமிடம் விற்பனைக்குண்டு **(Garage)** **siva/saba 416-752-2642**

3 Ton A/C compressor (only) 2 years old. Gas R22 (2 Units) Contact 416-573-3440

Threadmill Very Good Condition call 416-666-5627

Electric Oven only 3 months used. contact 416-666-5627

$15 மட்டுமே

Markham & Highglen Ave

1 bedroom bsmt apt for rent. Seperate entrance. Fib TV & Invternet, Parking Space Avail.

Contact: 416 - 417- 6893

Birchmount & Lawrence

Newly renovated 2 bedroom bsmt. Apt. for rent.

Available – Dec. 1st 2014

Contact: 416 -356 -5532

Markham & Finch

1 bedroom bsmt. for rent. with Car Park.

Contact: 416 -267 -0072

தேவை

Online Sale person wanted for Clothing Import Company

416-602-2634

Birchmond & Finch

Experienced Sri Lankan and Indian Cook wanted for New Restaurant and Takeout.

416-889-3191

Major Mackenzie & Jane

Experienced Sri Lankan and Indian Cook Takeout

905-553-9400

தையல் Orders

Saree blouse, Salwar Kameez, Skirt & Blouse ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்

தொடர்பு: 416-438-2552, 647-853 5524

ரியுசன் வகுப்புகள்

from KG to Junior 6 in Scarborough Area

French, Math, English, Homework, assignment and Exam helps too.

Contact: 647-962 2915

வாடகைக்கு

Morningside & McNicoll 3Bedroom House for rent அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். 647-621-6701

Basement for rent Brimley & Eglinton. 2bedroom walkout basement 905-428-7887

❖ முகவரி கிடைக்கும் இடங்கள் ❖

முகவரி சஞ்சிகையை கீழுள்ள நிலையங்களிலும் அனைத்து முகவரி விளம்பரதாரர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்காபுறோ, மார்க்கம்:

அபி சுப்பர் மார்க்கெட்: கெனடி - பிஞ்ச்

யாழ்ட்டன் சுப்பர் மார்க்கெட்: பிரைடல் டவுன் சேர்கிள் - பிஞ்ச்

இரா சுப்பர் மார்க்கெட்: நீல்சன் - பிஞ்ச்

ஸ்பைஸிலான்ட் சுப்பர் மார்க்கெட்: மார்க்கம் - ஸ்டீல்

சவுத் ஏசியன் சுப்பர் மார்க்கெட்: மார்க்கம் - மேஜர் மக்கன்சி

சன்சிட்டி சுப்பர் மார்க்கெட்: மார்க்கம் - நியூடெல்கி ட்ரைவ்

சாங்கர் அன்கோ: கெனடி - எக்லிங்டன்

இரா சுப்பர் மார்க்கெட்: மிட்டன்ட் - எக்லிங்டன்

எஸ்பி இன்போர்ட்ஸ்: பிறிம்ளி - லோரன்ஸ்

கேன்பி ஃபுட்ஸ்: மக்கோவன் - எல்ஸ்மயர்

ஃகொப்பர் ஹட்: கெனடி - எல்ஸ்மெயர்

பிரியா வீடியோ - எக்லின்டன் அவனியு

டவுன்ஸ் வியுவ்

உதயா சுப்பர் மார்க்கெட்: கிருப்ளிங் - ஸ்டீல்ஸ்

மேபிள்

அருண் பேக்கரி: ஜேன் - மேஜர் மக்கன்சி

பிறம்டன்:

துர்க்கா சுப்பர்மார்க்கெட் கெனடி அன்ட் கிளரன்ஸ்

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் - டிக்ஸி அன்ட் அட்வான்ஸ் பிளவார்ட்

பிருந்தாவன் சுப்பர்மார்க்கெட் 905-495 3755

ஏஷியன் கேஷ் அன்ட் கெரி 905 -794 0015

ஈசன் பியூட்டி சலூன் 416- 450 2515

ஞானாஸ் மார்க்கெட் 905- 455 8228

லக்கி கேட்டேஸ் 905 458 5333

மிஸ்சஸ்சாகா

கற்பகம் குரோசறி - 6970, லிஸ்கார் ட்ரைவ்

அன்னபூரணா - பிரிஸ்டல் அன்ட் டெரிபொக்ஸ்

காவேரி சுப்பர்மார்க்கெட்- ஹைவே 10 அன்ட் டன்டாஸ்

உதயம் சுப்பர்மார்க்கெட் - ரத்பேர்ன் அன்ட் மேவிஸ்

மூன் றைஸ்- 3050 கொன்பெடரேஷன் பார்க் வே.

ஏஜக்ஸ்

த ஸ்பைஸ் கிங், 157, ஹாவூட் அவனியு நோத்

கெண்வீனியன்ஸ் வீடியோ, பாஸ்ட் புட், 1801, ஹாவூட் அவனியு நோத்


Oorbook.com
யாதும் ஊரே...
ஊருக்கும் உறவுகளுக்குமான சமூகவலைத் தளம்


"Make Your Dream Home Come True"
416-230-1107
RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
RIGHT AT HOME REALTY INC., BROKERAGE
PARAM GNANASWARAN
REAL ESTATE BROKER
HOME OFFICE:
401-7045 EDWARDS BLVD
MISSISSAUGA, ONT.L5S 1X2
PH# 905-565-9200
MAIN OFFICE:
202-895 DON MILLS ROAD
TORONTO, ONT.M3C 1W3
PH# 416-391-3232


ONTARIO FINANCIAL CENTRE
உங்கள் அனைத் துவிதமான மோட்கேஜ்
தேவைகளுக்கும் என்னை நாடுங்கள்
Rohan Rajah
Financial Advisor Agent
Cell: 416 457 2050
Office: 416 410 4633
Fax:416 410 3063
1825, Markham Road, Scarborough On. M1B 4Z9


HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and operated
Higher Standard Agents... Higher Results
HOMELIFE
HIGHER STANDARDS
Parathan Navaratnam
Sales Representative
Business: 416-298-3200 Direct: 647-524-7655
210-31 Progress Ave., Toronto ON. M1P 4S6


என் பணி அடமானக் கடன் செய்து கொடுப்பதே!
GTA Square
EXECUTIVE
MORTGAGE
VERICO
MORTGAGE BROKERS NETWORK
Dir : 416-543-6614
Tel : 416-299-0003 Fax: 416-299-0043
dasn@executivemortgagecanada.com
http://das.executivemortgagebroker.com
FSCO LICENCE # M08007147/12286
DAS NARAYANASAMY
MORTGAGE BROKER


Dr.S.Raveendran and Associates
Dentel Centre
Dental Surgeons
Dr. Sabapathy Raveendran
B.D.S., M.S., F.D.S.R.C.S. (Eng)
Dr. Mujeed Qazi
B.D.S., D.D.S.
Dr.Swati Surapaneni
B.D.S., D.M.D.
Dr. Vathany Sivakumaran
B.D.S., D.M.D.
General Dentistry
Implant Supported Teeth
Braces Treatment
Cosmetic Dentistry
Oral Surgery
Root Canal/Crown/
Bridge Treatment
Oral Diseases
Mississauga Office
905 270 7844
102-3025 Hurontario Street
Mississauga ON L5A 2H1
(Hurontario & Dundas E)
Scarborough Office
416 283 9000
1139 Morningside Ave., Suite 25
Scarborough ON M1B 0A7
(Morningside & Sheppard)
www.raveendrandentist.com


Buying - Selling - Investing
RESIDENTIAL COMMERCIAL INVESTMENTS
TOP 5% Sales Rep In Canada
Honest & Professional Services
HELEN ANTHONIPILLAI
Sales Representative
416-830-5724
helen.exatina@gmail.com
www.helenhomes.ca
HomeLife/Future Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229


Higher Standard Agents... Higher Results™
ஒரு அழகான வீட்டை வாங்க, விற்க ...
Nanda Kandasamy
Sales Representative
Direct: 416.457.4509
Business: 416.298.3200
Free Home Staging & Home Evaluation
HomeLife Today
Realty Ltd., Brokerage*
210-31 Progress Ave., Toronto On. M1P 4S6
*Independently Owned and operated


CANAM.V.FINANCIAL SERVICES.
GTA Square
For All Your Mortgage Needs, Call
Vyra Karunananthan
Financial Advisor
Tel : 416-410-7373
Fax : 866-243-2410
416-261-0070
416-264-9647
Cell: 416-277-3818
email : vyrakaru@rogers.com
5215 Finch Ave. E, Suite 217, Scarborough, ON. M1S 0C2


Tam Sivathasan
Broker of Record
Dir.: 416.804.3443
VEEDU REALTY INC. BROKERAGE
நாமார்க்கும் குடியல்லோம்!
இருபது வருடங்கள் நேர்த்தியான சேவை
வீடு
வாங்குதல் - விற்றல் - அடமானம் பெறுதல்
VEEDU REALTY INC.
BROKERAGE
416.759.6000
WWW.VEEDU.COM


HIS MASTER'S LEGAL
His Master's Legal Services
Professional Corporation
Rajan Mahavalirajan B.A
Commissioner of Oaths • Licensed Paralegal
Law Society of Upper Canada
Traffic Tickets- Provincial Offences | Small Claims Court | Employment Law |
Criminal Law- Summary Conviction | Human Rights Law | Landlord Tenant Board |
Immigration Law |
Tel:416-757-2525 Fax:905-430-1627
info@masterslegal.com www.masterslegal.com
1193 A Brimley Road, Suite 5, Toronto, ON. M1P 3G5
GET UP AND CALL US, DON'T GIVE UP YOUR RIGHTS !